வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
இடியுடன் கூடிய மழை

# உதயன்

சுடர் 30 | கதிர் 174 | வள்ளுவர் ஆண்டு 2046 | வைகாசி 06. புதன்கிழமை 20.05.2015

குடாநாட்டில் நேற்று பெருமெடுப்பில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அவற்றின் விவரங்கள் 02,03,25 ஆம் பக்கங்களில்



## சட்டத்தரணியை முற்றுகையிட்டு புங்குடுதீவு மக்கள் போராட்டம்

### சந்தேக நபர் ஒருவரை தப்ப உதவினார் எனக் கூறி

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கொழும்பு தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்தார் என்று கூறப்படும் சட்டத்தரணி ஒருவர் நேற்று புங்குடுதீவு மக்களால் முற்றுகையிடப்பட்டார். வி.ரி.தமிழ் மாறன் என்ற சட்டத்தரணியே இவ்வாறு தடுக்கப்பட்டு சிறைவைக்கப்பட்டார். குறித்த சந்தேக நபர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டால் மாத்திரமே சட்டத்தரணி விடுவிக்கப்படுவார் என்று மக்கள் உறுதியாக நின்றனர். அதையடுத்து அங்கு பொலிஸ், விசேட அதிரடிப்படை, இராணுவம், கடற்படை என குவிந்தன. ஆயினும் மக்கள் அசைந்து கொடுக்கவில்லை. அதனால் போர்க்களம் போல் மாறியது புங்குடுதீவு.

பக்.21

# வடக்கில் இன்று முழு ஹர்த்தால்

## கடையடைப்பு, போக்குவரத்து நிறுத்தம் மாணவி படுகொலையைக் கண்டித்து

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு மாணவியின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு மிக விரைவில் அதி உச்சத் தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வடக்கில் இன்று முழுமையான பணிப்புறக்கணிப்பு, கடையடைப்பு - ஹர்த்தால் - கடைப் பிடிக்கப்படவுள்ளது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருந்த இந்தப் போராட்டத்துக்கு வர்த்தகர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"வடக்கு மாகாணத்தில் உள்ள சகல நிறுவனங்களையும் மூடி முழுமையான புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுங்கள்" என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறைகூவல் விடுத்திருக்கிறது.

பாடசாலைகள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் சகலவற்றையும் மூடி ஒன்றுசேர்ந்து புறக்கணிப்பதன் மூலம் சமூக விரோதச் செயல்களைக் கண்டிக்குமாறும்

பக்.21

## கறுப்புக் கொடிக்கு பொலிஸ் எதிர்ப்பு

கிளிநொச்சி, மே 20

புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்து முழங்காவில் தேசிய பாடசாலை மாணவர்கள் கறுப்புக் கொடி கட்டி ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்டபோது பொலிஸார் தடை விதித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கறுப்புக் கொடி கட்டப்படுவதைத் தாம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்று கருதிக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ள பொலிஸார் நாளை வியாழக்கிழமையின் பின்னர் கறுப்புக்கொடி கட்டி ஆர்ப்பாட்டத்தை நடத்த முடியும் என்று கூறியுள்ளனர்.

ஆயினும் திட்டமிட்டபடி நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் மாணவர்களின் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ற-5)

## தொடர்கிறது மாணவர் போராட்டம்

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி கூட்டு வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவத்தைக் கண்டித்தும், குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோரியும் குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்றும் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். பாடசாலைகளுக்கு முன்பாகக் கூடிய மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டதுடன், கறுப்புப் பட்டியும் அணிந்திருந்தனர்.

விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என்றும் – குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்த மாணவர்கள் அது வரை தமது போராட்டம் ஓயாது என்றும் தெரிவித்தனர்.

(ற)



## போதனா முன்பாக குவிந்தது இராணுவம்

### மக்களும் திரண்டதால் நேற்றுப் பெரும் பதற்றம்

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு மாணவியின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள், மருத்துவப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று மாலை அழைத்து வரப்பட்டனர். அதனையடுத்து வைத்தியசாலை முன்பாக மக்கள் குவியத் தொடங்கியதால், விசேட அதிரடிப்படையினர் ஆயுதங்களுடன் வைத்தியசாலைக்கு முன்பாகவும், உள்ளேயும் குவிக்கப்பட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

புங்குடுதீவு மாணவியின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்படவுள்ளனர். பொலிஸ் காவலில் தடுத்து

பக்.21

## கிழக்குக்கும் விரிகின்றது மாணவர் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து வடக்கு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில், நேற்று கிழக்கிலும் மாணவர்களால் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி மாணவர்களும் கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர். மாணவியின் சாவுக்கு நீதி கோரி கோஷங்களை எழுப்பியவாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கொடூரக் குற்றச்செயலில் ஈடுபட்டவர்களுக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். (ற)

## திடீர் போராட்டங்கள்; திணறியது யாழ்.நகர்

### தீவிர ஆர்ப்பாட்டம், திடீர் கடையடைப்பு வடக்கில் இயல்பு நிலைமை கடும் பாதிப்பு



யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு மாணவியின் படுகொலையைக் கண்டித்து யாழ்.நகரில் நேற்று திடீர் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது. பத்து வருடங்களின் பின்னர், யாழ்.நகரில் இவ்வாறானதொரு முழுமையான கடையடைப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கடையடைப்பினால் நகரிலுள்ள முழு வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. அத்துடன் அரச - தனியார் வங்கிகள், லீசிங் நிறுவனங்கள், மருந்தகங்கள், உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்று முழுவதும் இழுத்து மூடப்பட்டன. மேலும், வீதிகளில் ரயர் போட்டு எரித்து போக்குவரத்தும் முடக்கப்பட்டது. அத்துடன் நல்லூரில் இருந்து கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. பேரணி நல்லூரில் இருந்து ஆரம்பமாகி கச்சேரியை அடைந்தது.

பக்.04

# கிளர்ந்தெழுகின்றது கல்விச் சமூகம்

## மாணவர் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



யாழ். இந்து மகளிர் கல்லூரி



கொக்குவில் இந்துக் கல்லூரி



திருக்குடும்ப கன்னியர் மடம்



ஸ்ரான்லி கல்லூரி



இனுவில் இந்துக் கல்லூரி



பெரியபுலம் மகா வித்தியாலயம்





சென்.ஜேம்ஸ்



யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், மே 20

சட்டமும் – நீதியும் மெல்ல பணத்திற்கு விலை போகின்ற இந்தக் காலத்தில், எங்கள் அவலக் குரல்கள் ஓய்ந்து காய்ந்து விடக் கூடாது. மீண்டும் ஒரு பூ கசக்கி முகரப்பட்டு வீதியில் வீசப்படும் முன்னர் பாதகர்களை மக்களின் முன் நிறுத்துங்கள். தக்க தண்டனையை வழங்குங்கள். – என்ற கோரிக்கையுடன் யாழ்.நகரப் பாடசாலைகளும், ஏனைய பாடசாலைகளும் நேற்றும் போராட்டத்தை நடத்தின.

புங்குடுதீவுப் பாடசாலை மாணவியின் சாவு, வடக்குக் கல்விச் சமூகத்தின் மத்தியில் பெரும் அதிர்வலையைத் தோற்றுவித்துள்ளது. வடக்கிலுள்ள ஒவ்வொரு பாடசாலையும், படுகொலைக்கு நீதிவேண் டிய போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளது. கல்விச் சமூகம் ஒட்டுமொத்தமாக இந்தப் படுகொலைக்கு நீதி வேண்டி கிளர்ந்தெழுந்துள்ள நிலை யில், நேற்று யாழ்.நகரத்தின் பெரும்பாலான பாட சாலைகள் போராட்டத்தில் குதித்தன. அதே போன்று வன்னிப் பெருநிலப்பரப்பிலும், வவுனியா விலும் மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் நேற்று மதியம் போராட்டத்தை தொடங்கினர். பாடசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், கே.கே.எஸ் வீதி வழியாக நகர்ந்து, மனோகரா சந்தியூடாக நாவலர் வீதியில் திரும்பி, கஸ்தூரியார் வீதியூடாக மீண்டும் பாடசாலையை அடைந்தது. சுமார் ஒரு மணி நேரம் உணர்வெழுச்சியுடன் இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் பங்கெடுத்தனர்.

யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மாணவிகள், திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை மாணவி கள், சென்.சார்ள்ஸ் பாடசாலை மாணவர்கள் அனைவரும் பிரதான வீதியில் போராட்டம் நடத் தினர். சென்.ஜேம்ஸ் தேவாலயத்திலிருந்து, தண்ணீர் தாங்கியடி வரையில் பிரதான வீதியின் இருமருங் கிலும் நின்று போராட்டம் நடத்தினர். நீதி வேண்டிய வாசகங்கள் தாங்கிய பதாகைகளை தாங்கிப் பிடித் திருந்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் கே.கே.எஸ். வீதியில் பாடசாலைக்கு முன்பாக வீதியின் இருமருங்கிலும் நின்று போராட்டம் நடத்தினர். சகல மாணவர்களும் கறுப்புப் பட்டி அணிந்திருந்ததுடன், கறுப்புக் கொடியைக் காட்டியும் போராட்டம் நடத்தினர். சுமார் ஒரு மணி நேரம் மாணவர்களது போராட்டம் நடந்தது. மிகக் கடுமையான வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிப் பிடித்திருந்தனர். இதே போன்று பெரியபுலம் மகா வித்தியாலய மாணவர்களும் கே.கே.எஸ். வீதியின் இருமருங் கிலும் நின்று போராட்டம் நடத்தினர்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள், பாடசாலைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியின் இருமருங்கிலும் நின்று, விண்ணதிரக் கோஷம் எழுப்பினர். சகோதரியின் படுகொலைக்கு உரத்து நீதி வேண்டிக் கோஷம் எழுப்பினர். அத்துடன் கறுப்புப் பட்டிகளும் அவர்கள் அணிந்திருந்ததுடன் மாணவியின் படுகொலைக்கு நீதி வேண்டிய துண்டுப் பிரசுரமும் மாணவிகளால் விநியோகிக்கப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களினால் பாடசாலைக்கு முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது. அத்துடன் இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்களும் கே.கே.எஸ். வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினர். மேலும், யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் நேற்று இணைந்து கொண்டு, தமது பாடசாலைக்கு முன்பாக கவனவீர்ப்புச் செய்தனர்.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளும் நேற்று பாடசாலை முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். கறுப்புப் பட்டி அணிந்து அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்களும் நேற்றுப் பாடசாலைக்கு முன்பாகக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தால் வீதிப் போக்குவரத்துச் சற்றுநேரம் முடங்கியது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மாணவியின் படுகொலைக்கு நீதி வேண்டும் என்று மாணவர்கள் வலியுறுத்தினர்.

விக்ரோறியா கல்லூரி மாணவர்களும் இன்று மாணவி படுகொலைக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டம் நடத்தினர். நீதி கிடைப்பதை விரைவுபடுத்துமாறு அவர்கள் வலியுறுத்தினர்.

சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர்களும் பாடசாலை முன்பாக நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மாணவர்களும் நேற்று பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். படுகொலைக்குக் காரணமானவர்கள் விரைவில் தண்டிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோசமிட்டனர். (ந–5,4,86,422)

# ‘கொடியவர்களைத் தூக்கிலிடுங்கள்’ முல்லைத்தீவில் மாணவர் முழக்கம்



முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி

கிளிநொச்சி, மே 20

புங்குடுதீவு மாணவி கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து வன்னிப் பெருநிலப்பரப்பிலும் மாணவர் கள் நேற்று ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, முல்லைத் தீவு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், சிலாவத்தை அ.த.க. பாடசாலை, கள்ளப்பாடு அ.த .க. பாடசாலை என்பவற்றைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று ஆர்ப் பாட்டங்களை மேற்கொண்டனர்.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட் டத்தை ஆரம்பித்தனர். 'எதிர்கால சிற்பிகளை அழிக்காதே', 'மாண்புமிகு அரசே கொடியவர்களைத் தூக்கிலிடு', 'காமம் கொண்ட காடையரை ஒழிப்போம்."– என்ற கோஷங்களுடன், கொலைக் குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனை வழங் கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட் டம் நடத்தப்பட்டது. ஆயிரத்து 500க்கும் அதிகமான மாணவர்கள் அதில் கலந்துகொண்டனர்.

அதேபோன்று, முல்லைத்தீவு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், சிலாவத்தை அ.த.க. பாடசாலை, கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர் கள் இணைந்து பெரும் கவனவீர்ப்பு ஆர்ப் பாட்டம் ஒன்றை நடத்தினர். முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குப் பேரணியாகச் சென்ற மாணவர்கள் முல்லைத்தீவு அரச அதிபரிடம் தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் மனுவைக் கையளித்தனர்.(ற–102)













## மன்னாரில் மாணவர்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம்

புங்குடுதீவு மாணவி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம் பவத்தைக் கண்டித்து நேற்று மன்னாரில் மாணவர்கள் ஆர்ப்பாட் டங்கள் நடத்தினர்.

மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியக் கல்லூரி, மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசியக் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாண வர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.

இதனபோது கொல்லப்பட்ட மாணவிக்கு அஞ்சலி செலுத் தப்பட்டது. குற்றவாளிகளுக்கு ஆதரவாக சட்டத்த ரணிகள் முன்னிலையாகக் கூடாது என மாணவர்கள்வலியுறுத்தினர். (ற)













வேம்படி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவில் மாணவி ஒருவர் கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வடக்கில் தொடர்ச்சியாகப் பல பாடசாலைகளிலும் போராட்டங் கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை தீவகம், வடமராட்சி, தெல்லிப்பழைக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சங்கானை சைவப் பிரகாச வித்தியாசாலை, அராலி சரஸ்வதி வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 8.45 தொடக்கம் பிரதான வாயில் முன்பாக ஒன்றுகூடிய ஏராளமான மாணவிகள் பெருமெடுப்பில் போராட்டத்தில் ஈடுபட்டனர். "நீதி வேண்டும், சந்தேக நபர்களைக் கைது செய்து சாவுத் தண்டனை வழங்குங்கள்", "இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது"– என்று எல்லா மாணவிகளும் தொடர்ந்து வலியுறுத்தி உரத்துக் கோஷமிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் பகுதி மாணவி களின் கோஷத்தால் அதிர்ந்து கொண்டிருந்தது. போக்குவரத்தும் தடைப்பட்டது. (ற–4,5)



# கொந்தளித்தது யாழ். நகர்












திடீர் கடையடைப்பினால் நகரப் பகுதியில் நேற்றுக் காலை ஒரு வித பதற்றமான சூழ்நிலை நிலவியது. அத்துடன் கடும் போக்குவரத்து நெரிசலும் நிலவியது. நகரப் பகுதிக்கு தமது கடமைகளை நிறைவேற்றவந்தவர்கள், வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் உள்பட பலரும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டமையினால் உடனடியாகவே வீடு திரும்பினர்.

புங்குடுதீவில் பள்ளி மாணவி, கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் ஒரு வாரம் ஆகின்றது. இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஒன்பது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களுக்கு தண்டனை விரைவுபடுத்தப்பட வேண்டும் எனக் கோரி, உணர்ச்சிகளால் உந்தப்பட்ட யாழ்.நகர வர்த்தகர்கள் நேற்றுக் கடையடைப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் இளைஞர்கள், பேரணியாகச் சென்றனர். யாழ்.நகரிலுள்ள சகல கடை வீதிகளுக்கும் சென்ற அந்த இளைஞர் குழுவினர், வர்த்தக நிலையங்களை மூடுமாறு கோரிக்கை விடுத்தனர். கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் காலையிலிருந்தே திறக்காமல் மூடப்பட்ட நிலையில் இருந்தன. ஆனால் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலிருந்த சில வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன.

அந்த வர்த்தக நிலையங்களை மூடுமாறு இளைஞர் குழுவினர் வலியுறுத்தினர். இதன் பின்னர், நடை பாதை வியாபாரிகளையும் கடைகளை மூடுமாறு அந்தக் குழுவினர் பணித்தனர். மேலும், ஸ்ரான்லி வீதியிலுள்ள அரச வங்கி ஒன்று திறக்கப்பட்டிருந்தது. அதனை மூடுமாறு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த அரச வங்கி மற்றும் யாழ்.நகரில் இருந்த ஏனைய தனியார் வங்கிகள், லீசிங் நிறுவனங்கள் என்பன இழுத்து மூடப்பட்டன. யாழ். நகர் சுமார் 10 மணியளவில் முழுமையாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு வெறிச்சோடியது.

மேலும், கே.கே.எஸ். வீதியில் தட்டாதெருச் சந்தியில் நேற்று மதியம் திடீரென, ரயர்கள் கொளுத்தப்பட்டு வீதியின் நடுவே போடப்பட்டன. இதன் காரணமாக சில மணி நேரம் அந்த வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டது.

முன்னறிவிக்கப்படாத இந்தத் திடீர் கடையடைப்பினால், யாழ்.நகருக்கு வந்த மக்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டனர். இருப்பினும், கடையடைப்புக் காரணமாக, அவர்கள் உடனடியாகவே பேருந்துகளில் வீடுகளுக்குத் திரும்பினர். இதனால் காலை வேளை பேருந்துகள் – தனியார் பேருந்துகள் என்பன நெரிசலுடன் பயணித்தன. அத்துடன் யாழ்.நகரப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவியது.

இதேவேளை, கடந்த 10 வருடங்களுக்குப் பின்னர் யாழ். நகரில் மிகப்பெரும் எழுச்சியுடன் கடையடைப்பு நடைபெற்றது. முழுமையாக வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு, முழுமைபெற்ற கடையடைப்பாக இது நடத்தப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு அரசியல் கட்சிகள், பல தரப்பட்ட குழுக்கள் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் இவ்வாறு பேரெழுச்சியாக – முழுமையான கடையடைப்பாக அது நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(5-4-23-20)



















உதயன்

# ஐ.நாவின் கால நீட்சி தாமதப்படுகிறது நீதி

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் வடக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு



முள்ளிவாய்க்கால், மே 20

போரிலே கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு விரைந்து நீதி கிடைக்க சர்வதேச சமூகமும், அது சார்ந்த அமைப்புக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் வழங்கப்படும் கால நீட்சியினால் நீதி தாமதிக்கப்படுகின்றது என்றும், காலம் கடந்து கிடைக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, முள்ளிவாய்கால் கிழக்கு அ.த.க பாடசாலைக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

### சாட்சியில்லாது நடந்த போர்

மனித உரிமைகள் மறக்கப்பட்டு - ஊடக உள்நுழைவு மறுக்கப்பட்டு - சாட்சியில்லாது நடத்தப்பட்ட சமரே முள்ளிவாய்க்கால்.

தடை செய்யப்பட்ட போராயுதங்கள் பாவிக்கப்பட்டன என்று பல் நாட்டு ஊடகங்கள் அப்போது பறைசாற்றின. வெளிநாட்டு உதவிகள் உதாசீனப்படுத்தப்பட்டு, உள்நாட்டு உதவிகள் மறுக்கப்பட்டு, உண்மை நிலை உரைக்காது விட்டு, மக்கள் தொகையைக் குறைத்துக் கூறி, அப்பாவிப் பெண்கள் - பிள்ளைகள் - குழந்தைகளின் உயிர்களைக் காவிச்சென்றதே முள்ளிவாய்க்கால். முள்ளிவாய்க்கால் எமது சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்ட சோக வரலாற்றுப் பதிவு. முள்ளிவாய்க்கால் எமது வருங்கால அரசியல் பயணத்திற்குத் தளம் அமைத்துக் கொடுத்துள்ள ஒரு சம்பவம் என்பதில் எமக்குள் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

### தமிழ் மக்கள் விரக்தியில்

கொடிய போரிலே உயிரிழந்த பொது மக்கள் தொடர்பான உண்மை நிலை இதுவரை வெளிக்கொணரப்படவில்லை. உண்மையைக் கண்டறிவதற்கான, நம்பகத்தன்மை வாய்ந்ததும் - அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதுமான விசாரணைப் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் முடிவுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. இந்த நிலை தமிழ் மக்கள் மத்தியில் விரக்தியை உருவாக்கியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் நேரடித் தலையீட்டை ஏற்படுத்தும் பொருட்டு, தமிழர் தரப்பும் சர்வதேச நாடுகளும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அவை இன்னமும் ஓர் தீர்க்கமான கட்டத்துக்குள் உள்நுழையவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

### தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமன்

ஐ.நா. மனிதவுரிமைகள் மாநாடு நடைபெறுகின்ற ஒவ்வொரு தடவையும் போரிலே கொல்லப்பட்டவர்களுக்கான நீதி உறுதிப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்படுவதும், அது இறுதியில் ஓர் கால்நீட்சியுடன் முடிவடைந்து போவதும் தான் நாம் கண்டுள்ள யதார்த்தம். காலங்கடந்து கிடைக்கின்ற நீதி கிடைக்காத நீதிக்குச் சமனாகும் எனக் கூறப்படுவதுண்டு. எமது அப்பாவிப் பொதுமக்கள் தொடர்பிலான உண்மை நிலையினை வெளிக்கொணரும் பொருட்டும், அவர்களுக்கான நீதி கிடைக்கும் பொருட்டும் பொருத்தமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

### கிடைக்கும் நீதி அரசியல் பயணத்திற்கு உந்துசக்தியாகும்

உயிரிழந்த பொது மக்களுக்கான நீதியைத் தமிழ்த்தரப்பு வேண்டிநிற்பதன் நோக்கம் வெறுமனே குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல. இது தொடர்பில் வெளிக் கொணரப்படுகின்ற உண்மைகள் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்த உதவும். இதனால்தான் எமது வடமாகாண சபை இனப்படுகொலை சம்பந்தமான தீர்மானத்தை ஏகமனதாக ஏற்று வெளிக்கொண்டு வந்தது.

உண்மையை உலகறியச் செய்தது. அதுமட்டுமல்ல. பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கின்ற நீதி தமிழ்ப் பேசும் மக்களது அரசியல் தீர்வு நோக்கிய பயணத்திற்கும் உந்து சக்தியாக அமையும்.

### காலம் கடத்தும் ஆட்சியாளர்கள்

இலங்கையில் வாழ்கின்ற தமிழ்ப் பேசும் மக்களது அரசியல் உரிமைக்கான கோரிக்கை என்பது இன்று நேற்றல்ல, இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. தமக்கென ஒரு தனியான மொழி, சமயங்கள், பண்பாடு, பாரம்பரியம், வரலாறு, ஏன் இலங்கையின் மற்றைய நிலப்பகுதிகளில் இருந்து மாறுபட்ட நிலப்பரப்பைக் கூடக் கொண்டிருந்து.

பல நூற்றாண்டு காலமாக வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற தமிழ்த் தேசிய இனம் தமது அரசியல் உரிமைக்கான கோரிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த போதிலும் மாறி மாறி வந்த இலங்கையின் ஆட்சியாளர்கள் வெறுமனே காலத்தைக் கடத்தி வந்தார்களே தவிர, தமிழ் மக்களது நியாயமான அரசியல் கோரிக்கைகளுக்கு ஏற்ற பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

### நிலைமை மாற வேண்டும்

மாறாக வடக்கு - கிழக்கைப் பெரும்பான்மை இனத்தவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு காரியமாற்றி வந்துள்ளனர் ஆட்சிக்கு வருகின்ற புதிதில் தம்மைச் சமாதானத் தூதுவர்களாகக் காட்டிக்கொள்ளும் இலங்கையின் அரச தலைவர்கள். தமிழ்ப் பேசும் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண்பது போன்ற தோற்றப்பாட்டினை உருவாக்குவதும் பின்னர் காலப்போக்கில் தமிழர் விரோதப் போக்கிற்கு மாறுவதும் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்துள்ளன. இந் நிலை இனியும் நீடிக்கக் கூடாது.

எனவே தற்போது தோன்றியுள்ள ஒரு சாதகமான நிலைமை மாற்றமடைவதற்கு முன்னர் காலதாமதத்தை மேற்கொள்ளாது தமிழ்ப் பேசும் மக்களது பிரதான பிரச்சினையான அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் விரைந்து செயற்பட வேண்டிய கடமை நம் அனைவரின் முன்னும் உள்ளது.

விரைந்து செயற்படாத தன்மையும், அளவுக்கதிகமான காலநீட்சியும், பிரச்சினைகளினதும் அதற்கான தீர்வுகளினதும் பரிமாணங்களை மாற்றியமைக்கும் அபாயம் கொண்டவை என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இலங்கையின் ஆட்சியாளர்கள் எம்முடனும் மற்றும் சர்வதேச சமூகத்துடனும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியத்தின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் விரைந்து தீர்வு காண முன்வர வேண்டும்:

இதுவே இலங்கையில் வாழ்கின்ற பல்லின மக்களுக்கிடையில் பரஸ்பர கௌரவத்துடன் கூடிய உண்மையான நல்லிணக்கத்தை உருவாக்கும். இன்றைய சோகம் மிகுந்த நாளில் இதையே உங்கள் அனைவரின் சிந்தனைகளுக்கும் சிரம் தாழ்த்தி முன்வைக்கின்றேன் - என்றார். (த-5-21)



## பொன்சேகாவின் மனு 29 இல் விசாரணைக்கு

கொழும்பு, மே 20

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மீண்டும் வழங்குமாறு உத்தரவிடும்படி கோரி, முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பொன்சேகா தொடர்பான மனு நேற்று மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சரியான முறையில் மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு, நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்கு அனுமதி வழங்குமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு உத்தரவிடுமாறு கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் பிரத்தியேகச் செயலாளர் சேனக டி சில்வாவினால் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டிருந்தமையினால், வெற்றிடமாக காணப்பட்ட அவரது இடத்துக்கு, ஜயந்த கெட்டகொடவை நியமிக்குமாறு விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நீக்க உத்தரவிடும்படி சேனக டி சில்வா தனது மனுவில் கேட்டுக்கொண்டிருந்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக திஸாநாயக்க, தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, ஜயந்த கெட்டகொட உள்ளிட்ட எட்டுப் பேர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இராணுவ நீதிமன்றத்தினால் தான் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் தனது நாடாளுமன்ற உறுப்புரிமை இழக்கப்பட்டுள்ளதாக அவரது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## மஹிந்த தலைமையில் போர் வெற்றி நிகழ்வு

கொழும்பு, மே 20

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் கொழும்பில் நேற்று முன்தினம் மாலை, போரை வெற்றி கொண்ட வீரர்களை நினைவு கூரும் நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு விகாரமா தேவிப் பூங்காவில் நேற்று முன் தினம் மாலை 5 மணிக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்தில், மே 18 ஆம் திகதி போர் வெற்றி விழாக் கொண்டாட்டம் நடைபெறுவது வழக்கம். ஆனால் தற்போதைய புதிய அரசு, போர் வெற்றிவிழாக் கொண்டாட்டம் என்ற பெயரை மாற்றி, போரில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூரும் நாளாக மாற்றியுள்ளது. அத்துடன் அதனை மே 19 ஆம் திகதி நினைவுகூருவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களினால், போரை வெற்றி கொண்ட வீரர்களை நினைவு கூரும் நாள் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.



இந்த நிலையில் நேற்று முன் தினம் மதியம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தனது ருவிட்டர் மற்றும் பேஸ்புக் தளங்கள் ஊடாக குறித்த நிகழ்வில் பங்கேற்பேன் என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன், 'நாம் மறக்கலாகாது. தேசத்தின் சுதந்திரத்தைக் காப்பதற்காக தங்களது உயிர்களைத் தியாகம் செய்த அனைவரையும் ஞாபகமூட்டுவதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் இணையுங்கள். மாலை 5 மணிக்கு விஹார மகா தேவி பூங்காவில் விளக்கேற்றுவதற்காக வந்து இணைந்து கொள்ளுங்கள். எங்களது நாயகர்களை நினைவில் வைத்திருக்கும் முகமாக உங்கள் வீடுகளில் மாலை 6:05 இற்கு விளக்கேற்றுவதிலும் அனைவரும் சேர்ந்து இணைந்து கொள்வோம்' என்று குறிப்பையும் அவர் வெளி யிட்டிருந்தார்.

அதனடிப்படையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட, நினைவு கூரும் நிகழ்வில் மஹிந்தவும் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில், தீபமேற்றி நினைவு கூரல் இடம்பெற்றது. (த-5)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். உங்களின் தன்னம்பிக்கை உயரும். வாழ்க்கையில் முன்னேற வேகம் காட்டுவது நல்லது. தீவிர உழைப்புட னும் அதிக முயற்சிகளுடனும் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**இடபம்:** எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள்.சற்றுக் கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது. எந்த காரியத்தையும் சிந்தித்துச் செய்வது நன்மை தரும்.

**மிதுனம்:** எல்லாப் காரியங்களிலும் அதிக கவனம் உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும்.

**கடகம்:** அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். சொந்த விடயங்களுக்கு அடுத்தவரின் ஆலோசனைகளைக் கேட்பதைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்:** எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பாராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். அதனால் வெளியூர் பயணங்களைத் தள்ளிப்போடுவது நல்லது.

**கன்னி:** உங்கள் புத்திக்கூர்மை உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். உங்களின் சமயோஜித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்வீர்கள்.

**துலாம்:** உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்திலிருந்து சந்தோஷமான செய்திகள் வந்து சேரும்.

**விருச்சிகம்:** படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். செலவும் அதிகமாகும். சக ஊழியர்களால் நன்மை அடைவீர்கள். வாழ்க்கையில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் உழைப்பது அவசியம்.


**தனுசு:** வாகனங்களை உபயோகப்படுத்தும் போது கவனம் தேவை. பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளைச் செய்து பக்குவமான அணுகு முறையைக் கையாள்வது அவசியம்.

**மகரம்:** நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். நயமாகப் பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது.

**கும்பம்:** வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களை கவனமாகப் பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் நீங்கும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள்.

**மீனம்:** காரிய அனுகூலம் உண்டாகும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும். ஆன்மிக நாட்டத்தை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மன நிம்மதி ஏற்படும். உழைப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கும்.

## இப்படியும் மின் உற்பத்தி



காற்றாலை, சூரியசக்தி மின்சாரம் போன்றவை நாம் அறிந்ததுதான். அதுபோலவே மனித உடலின் இயக்கங்களிலிருந்துகூட குறைந்த அளவிலான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்கிறது தொழில்நுட்ப உலகம்.

நாம் நடக்கும்போது ஏற்படும் அழுத்தத்தைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ள முடியும். இதற்கு ஏற்ப சப்பாத்துக்கள் உருவாக்கபட்டுள்ளன. இதை அணிந்து கொண்டு நடந்தால் இதிலிருந்து மின்சாரம் உற்பத்தியாகி சப்பாத்தோடு இணைக்கப்பட்டுள்ள பட்டரியில் சேமிக்கப்படுகிறது.

இந்த மின்சாரத்தைக் கொண்டு ஸ்மார்ட்போன், டேப்லெட் மற்றும் கமரா போன்ற குறைந்த மின் பயன்பாடுகள் கொண்ட சாதனங்களை இயக்கலாம். ஸ்மார்ட்போன் வைத்திருப்பவர்கள் கையோடு சார்ஜர் தூக்கிக் கொண்டு அலையத் தேவையில்லை.

இந்த சப்பாத்தை மாட்டிக்கொண்டு நடந்தால் போதும். உடனடி மின்சார தேவைக்கு ஓடவும் செய்யலாம்.

## நயனுக்கு திருமணம்



நடிகை நயன்தாரா இயக்குநர் விக்னேஷ் சிவனை ரகசிய திருமணம் செய்து கொண்டுள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

'நானும் ரவுடிதான்' திரைப்படப் பிடிப்பில் நயன்தாராவுக்கும் விக்னேஷ் சிவனுக்கும் நெருக்கம் ஏற்பட்டு காதல் மலர்ந்துள்ளதாக அண்மையில் கிசுகிசுக்கள் வந்தன. இந்த நிலையில் இருவரும் திடீரென்று இரகசிய திருமணம் செய்து கொண்ட தாக பரபரப்பு தகவல் வெளியா கியுள்ளது.

கொச்சியில் உள்ள கிறிஸ்தவ கோவிலில் இந்த திருமணம் நடந்துள்ளது. இருவர் தரப்பில் இருந்தும் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே இதில் கலந்து கொண்டதாகவும் இருவரும் மோதிரம் மாற்றி திருமணம் செய்து கொண்டதாகவும் திருமண பரிசாக விக்னேஷ் சிவனுக்கு ஆடம்பர சொகுசு கார் ஒன்றை நயன்தாரா பரிசாக வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த திருமணம் குறித்து இருவர் தரப்பில் இருந்தும் இதுவரை அதிகார பூர்வ அறிவிப்பு எதுவும் இல்லை.

## திறக்கப்பட்ட காதல் பூட்டுக்கள்

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகர நடை பாதை, பாலத்தில் காதலர்கள் தங்கள் காதல் நிறைவேற வேண்டி பூட்டுக்களை தொங்கவிடுவது வழக்கம். பாலத்தில் இப்போது 20 ஆயிரத்துக்கும் அதிகமான பூட்டுகள் சேர்ந்து விட்டன.

இவற்றின் எடை தாங்காமல் பாலம் இடிந்துவிடும் ஆபத்து இருப்பதால் அந்தப் பூட்டுகளைத் திறந்து அகற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. பாலத்தின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக மெல்போர்ன் நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதே போல பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரிலும் காதலர்கள் ஒரு பாலத்தில் பூட்டுகளை தொங்க விட்டனர். 7 லட்சம் பூட்டுக்கள் சேர்ந்து விட்ட நிலையில் அந்தப் பாலம் இடிந்து விழுந்தது குறிப்பிடத்தக்கது.



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

ஏய்யா... கிழிஞ்ச ரூபாய் நோட்டு கொடுக்கிறாய்... இது செல்லாது... வேறை கொடு
நீ மட்டும் டிக்கெட்டைக் கிழிச்சிக் கொடுக்கிறீயே... அது மட்டும் செல்லுமா ?

இந்தப் படம் மூன்றாவது முறை பார்க்கும் போதுதான் புரிந்தது... அவ்வளவு கஷ்டமான கதையா ?
ம்ஹூம்... முதல் இரண்டு தடவையும் கேர்ள் ப்ரெண்டோட போனேன்...

# வாழ்க்கை யதார்த்தங்களைப் பிரதிபலிப்பதாக கவிதைகள் படைக்கப்படுதல் வேண்டும்

## யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன் தெரிவிப்பு

அச்சுவேலி, மே 20

சமூகத்தோடு நெருக்கமான வாழ்க்கையை கவிதைகள் அழகுபடுத்துகின்றன. கவிதை கள், வாழ்க்கையின் யதார்த்தங்களைப் பிரதிபலிப்பனவாக உணர்வுபூர்வமாகப் படைக்கப்பட வேண்டும். கனடாவில் வாழ்ந்தாலும் தான் பிறந்து வளர்ந்த மண்ணையும், மக்களையும் மறக்காமல் தான் எழுதிய ஆக்கங்களை யாழ .தமிழ் மகள் தனக்கு கல்விபுகட்டிய பாடசாலையில் வைத்து வெளியிடுவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

இவ்வாறு – யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும், முன்னாள் சமூகவியல்துறை தலைவருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கூறினார்.

கனடா ரொறண்டோவில் வசிக்கும் யாழ். தமிழ் மகள் மணிமேகலை கைலைவாசனின் 'தாயுமானவள்' கவிதை நூல், 'இந்த நாள் இனிய நாள்', 'சிந்தனைச் சிதறல்' நூல்களின் வெளியீடு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் நடராசா கலை அரங்கில் நடைபெற்றது.

வல்வையூர் ரமேஸ் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்து பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றும் போது,

நாங்கள் அசைக்க முடியாத நம்பிக்கையோடும், மன உறுதியோடும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த நம்பிக்கையும், மன உறுதியும் தான் எமது வாழ்க்கைக்கு அடித்தளமாக உள்ளன. இந்தப் பாடசாலை மீண்டும் செயற்படுமா? இங்கு மாணவர்கள் கற்கக் கூடிய இயல்பு நிலை ஏற்படுமா? என ஏங்கிய நிலையிலும் எமது நம்பிக்கையும் மன உறுதியும் மீண்டும் இந்தப் பாடசாலையை இயல்பு நிலையில் செயற்பட வைத்துள்ளது.

எத்தனையோ பேர் தாம் பிறந்த மண்ணை மறந்து வாழுகின்ற போதிலும், யாழ். தமிழ் மகள் கனடாவில் இருந்து வந்து, தான் வாழ்ந்த மண்ணையும், சுற்றத்தையும் மறக்காமல் தனது ஆக்கங்களை, தான் படித்த கல்லூரியில் வைத்து வெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எமது சமூகத்தின் வாழ்வியல் முறையில் ஏற்பட்ட மாற்றங் களால் பெண்களின் உழைப்பில் தங்கிவாழும் குடும்பங்கள் என்ற வகைப்பாடு ஏற்பட்டிருப் பதோடு, சிறுபிள்ளைகளின் உழைப்பில் தங்கி வாழும் குடும்பங்கள் என்ற வகைப்பாடும் தோன்றியுள்ளது. இத னைக் கருத்தில் கொள்ள வேண் டியது அவசியம். அத்தகைய குடும்பங்களை இனங்கண்டு உதவ வேண்டும்.

தமிழ்மகள் தனது உழைப்பின் மூலம் புலோப்பிளையில் தாயு மானவள் அறிவுமையத்தை உருவாக்கி 50 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருவது பாராட்டத்தக்கது. தாயுமானவர் அறிவுமையம் கஷ்டப் பிரதேச மக்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட சிறார்களின் நல்வாழ்வுக்கு உதவி வருகின்றது. இந்த வகையில் புலம் பெயர் உறவுகள் இவற்றுக்கு உதவ முன்வர வேண்டும்.

கவிதைகள் வாழ்க்கை நிகழ்வுகளைப் பிரதி பலிப்பனவாகவும், உணர்வுபூர்வமாகவும் படைக்கப்படவேண்டும். சமூகத்தோடு நெருக்கமான வாழ்க்கையை கவிதைகள் அழகுபடுத்துகின்றன என்று கூறினார்.

கவிதைகள் மற்றும் சிந்தனைச் சிதறல் நூல் வெளியீட்டு ரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் நிகழ்த்தினார். 'தாயுமானவள் ' கவிதை நூலின் ஆய்வுரையை முல்லைத் தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவனும், சிந்தனைச்சிதறல் நூலின் ஆய்வுரையை எழுத்தாளர் சீனா. உதயகுமாரும் நிகழ்த்தினர். (வ–11)

# நெளுக்குளம் கலைமகள் ம.வி. மாணவர்கள் நேற்று கவனவீர்ப்பு

கரணவாய் மே 20

புங்குடுதீவில் கூட்டுவன்பு ணர்வின்பின்னர் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் கொலைக்கு நீதிவேண்டியும் கொலைக் குற்றவாளிகளுக்கு ஆதரவாக எந்த ஒரு சட்டத் தரணியும் முன்னிலையாக் கூடாது என்று வலியுறுத்தியும் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றையதினம் பாடசாலையின் முன்றிலில் ஒன்று கூடிய வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாண வர்கள் கறுப்புப்பட்டி அணிந்து தமது எதிர்ப்பை. வெளிக் காட் டினர்.

மாணவியின் கொலைக்குக் காரணமானவர்களுக்குச் சார்பாக எந்தவொரு சட்டத்தரணியும் முன்னிலையாகக் கூடாது என்று அவர்கள் கோஷமிட்டனர். அத்துடன் கொலையாளிகளுக்கு உடனடியாகத் தகுந்த தண்டனை வழங்க வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையின் மூலம் ஏனையவர்களுக்கு இதுபடிப்பினையாக அமைய வேண்டும் என்றும் மாணவர்கள் வலிறுத்தி உள்ளனர். (வ–108)

# குடும்பப்பதிவு மீளாய்வு இடம்பெறவில்லை

வடமராட்சி வடக்குப் பிரிவில் குடும்பப் பதிவு மீளாய்வு செய்வதற் கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை என்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆரி. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (வ)

# நாளை ஆரம்பமாகிறது கதிர்காம பாதயாத்திரை

கதிர்காமக்கந்தன் ஆலய பெருந் திருவிழாவையொட்டி வருடந்தோறும் நடைபெற்று வரும் கதிர்காமப் பாதயாத்திரை நாளை வியாழக்கிழமை காலை தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

அம்பாறை, காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவான வேல்சாமி மகேஸ்வரன் தலைமையில் சந்நிதிகோயிலில் இடம் பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து அங்கிருந்து 'வேல்' பெற்றுக் கொண்டு பாதயாத்திரை கதிர்காமத்தை நோக்கிப் புறப்படும்.

54 தினங்களைக்கொண்ட இந்தப் பாதயாத்திரை சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்டு அச்சுவேலி, ஆவரங்கால், மீசாலை, மிருசுவில், முரசுமோட்டை ஊடாக எதிர்வரும் 30 ஆம் திகதி முல்லைத்தீவைச் சென்றடையும்.

அங்கிருந்து வற்றாப்பளை, குமுழமுனை, கொக்கிளாய், புல்மோட்டை, கும்புறுபிட்டி, நிலாவெளி, சாம்பல் தீவு ஊடாக திருகோணமலையை அடைந்து தொடர்ந்து பாதயாத்திரைக் குழுவினர் சீனன்குடா, பட்டித்திடல், கிளிவெட்டி, வெருகல், வாகரை, கிரான், அமிர்தகழி, கல்லடி வழியாக அடுத்த மாதம் 23 ஆம் திகதி கொக்கட்டிச்சோலையை அடையும். (வ)


பாராட்டி வாழ்த்தி.... வாழ்த்தி வரவேற்று....





Best Wishes

திரு.சி.சத்தியசீலன் அவர்கள்

(மேலதிக அரசாங்க அதிபர் - கிளிநொச்சி மாவட்டம் மற்றும்
முன்னை நாள் பிரதேச செயலாளர் - பிரதேச செயலகம், பூநகரி)

இழப்பின் வடுக்கள் தாங்கி
யுத்த சிதைவுகள் சூழ்ந்த - பூநகரிக்கு
மீள் குடியேற்ற பொறுப்புகள்
சுமந்து வந்த பிரதேச செயலரே!

பற்றைகள் அடர்ந்த பாதைகள் வழியே!
காணிகளை அடையாளம் கண்டு - எம்மை
கடுகதியாய் மீள்குடியேற்றி
மீண்டும் பூநகரை மீளமைத்த சேவையாளரே!!

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராய்
மேன்மையுறு பதவியேற்று - மேலும்
எமக்காய் பணிசெய்யும் பெருந்தகைக்கு
உளம் உவந்து சொல்கிறோம் பெருவாழ்த்து!!!

Best Wishes

திரு.C.S.கிருஸ்ணேந்திரன் அவர்கள்

(பிரதேச செயலாளர் - பூநகரி)

புத்தாக்க அபிவிருத்தி வழியில் - எமை
வழிகாட்டி வளமோங்க வைக்க
பூநகர்க்கு புதுவரவாய் வந்த
பிரதேச செயலரே வருக! வருக!!

கடமையுடன் கண்ணியமும் - இரு
கண்களாகக் கொண்டு
மக்களுடன் ஆளணியை ஒருங்கிணைத்து
பங்கேற்பு அபிவிருத்தி பாங்குடனே செய்க!

தன்னலம் கருதா பொதுநலன் நோக்கி - பெரும்
பணியாற்றத் தலைமை ஏற்ற
பெருமதிப்பார்ந்த பிரதேச செயலரே
பூநகரி மக்கள்நாம் பெருமையுடன் அழைகின்றோம் வருக! வருக!

கிராம அபிவிருத்திச் சங்கங்கள்,
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள்,
பிரதேச செயலகப் பிரிவு பூநகரி.

## திருவிழா காலத்தில் சொற்பொழிவு

டனிப்புலம் காலையடி முருகப் பெருமான் வேலவர் ஆல யத்தில் உற்சவ நாள்களில் தினமும் முற் டகல் 11 மணிக்கு 'முருகன் பெருமை" என்னும் பொருள்பற்றி ஓய்வு நிலை ஆசிரியர் ஆ.கனகரத்தினம் உரையாற்றி வருகின்றார். அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா நடை பெற்று வருகின்றது. (வ-28)

# வீதிகளில் வீசப்பட்டுள்ள திண்மக் கழிவுகளை அகற்றக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, மே 20
வலி.தென்மேற்குப் பிரதே சத்தில் வீதிகளில் சிறு முடிச் சுக்களாகவும் மூடைகளாக வும் வீசப்பட்டிருக்கும் திண் மக் கழிவுகளால் போக்கு வரத்துக்கு இடையூறு ஏற் படுவது மட்டுமல்லாது சுகாதாரத்துக் கும் பங்கம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு மக்களின் நலன் கருதி வீதியோரங் களில் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடக்கும் முடிச்சுக்களையும் மூடைக ளையும் விரைவாக அப்புறப்படுத்து மாறு பொது மக்கள் பிரதேச சபையைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச் சபைக்கு உட்பட்ட பல வீதிகளில சொப்பிங் பைகளிலும் உரப் பைகளிலும் கட்டப் பட்ட திண்மக் கழிவுகள் கட்டுப்பா டின்றி பரவலாக வீசப்பட்டுள்ளன. சில முடிச் சுகளிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. பல வாரங்களாக அகற்றப்படாமல் இருக் கும் திண்மக் கழிவுகளால் சுகாதாரத் துக்கும் பங்கம் ஏற்படுவதாக மக்கள் அஞ்சுகி றார்கள்.

குடாநாட்டில் கடந்த சில தினங் களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழை காரண மாக அந்த முடிச்சுகளில் தேங்கி நிற்கும் மழை நீரில் இருந்து நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன் டெங்குபோன்ற கொடிய நோய்களும் ஏற்படலாம் என்று மக்கள் கூறுகின்றனர்.

பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் திண்மக் கழிவுகள் அகற்றப்படுகின்றன. வீதி யோரங்களில் வீசப்பட்டிருக்கும் முடிச்சுகளும் மூடை களும் அகற்றப்படாததால் பொது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகு கிறார்கள்.

எனவே மக்களின் நலன் கருதியும் போக்குவரத்து வசதியை முன்னிட்டும் சுகாதாரத்தைக் கருத்தில்கொண்டும் வீதியோரங்களில் பரவலாக வீசப்பட்டி ருக்கும் திண்மக் கழிவுகளை அகற்று மாறு பொதுமக்கள் பிரதேச சபையைக் கோரியுள் ளனர். (வ-115)

## ஆலயத்துக்கு புதிய கட்டடம்

சுழிபுரம், மே 20
தொல்புரம், வழக்கம்பரை முத்து மாரி அம்பாள் ஆலயம் முன்பாக ஆலய பரிபாலன சபையினரால் புதிதாகக் கட்டப் பட்டு வரும் கட்ட டம் சுமார் ஒரு கோடி ரூபா செல வில் அமைக்கப்பட்டு வருகின்றது.

அந்தக் கட்டடம் ஆலயத்தில் திரு மணங்களை நடத்தவும் அன்ன தானம் நடத்தவும் பயன்படுத்தப் படவுள்ளது. தற்போது கூரை வேலைகள் நடைபெற்று வருகின் றன. அடியவர்கள் வழங்கும் பெரும் தொகைப் பணத்தைக்கொண்டே வேலைகள் நடைபெற்று வருகின் றன. எதிர்வரும் ஜூன் மாதம் நடை பெறும் ஆலய மஹோற்சவ காலத் தில் அந்த மண்டபத்தில் அன்ன தானம் நடத்த நிர்வாகத்தினர் திட்ட மிட்டுள்ளனர். (வ-28)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல சேவைகள் நிலைய எழுதுநராகக் கடமை புரியும் **க.ரவிதாஸ்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**வைத்திலிங்கம் கனகலிங்கம்**

அவர்கள் 06.05.2015 புதன்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

**29ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு
12.02.1925

உதிர்வு
10.06.1986

**அமரர் தம்பு கதிரவேலு**

(இளைப்பாறிய அதிபர்-
யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

**திதி: 20.05.2015**

காலங்கள் பல கடந்த போதிலும்
சுகமான உங்கள் நினைவுகள்
சுகந்தமாய் எம் மனங்களில்
வாசம் செய்கிறது ஐயா!!!


உங்களது ஆத்மாவின் சாந்திக்காய் எமது அன்புக் காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.

நீருவத்தம்பை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

மண்ணில்
07 . 01 . 1940



விண்ணில்
20 . 04 . 2015

**அமரர் தருமர் செல்லத்துரை**

கடந்த 20.04.2015 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு தருமர் செல்லத்துரை அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியையொட்டி இன்று (20.05.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தோருக்கும், துண்டுப்பிரசுரங்கள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

லதா பவனம்,
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும், கற்றலுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வும் கடந்த 15 ஆம் திகதி ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. பரீட்சையில் சித்திபெற்ற மூன்று மாணவிகள் அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினருடன் காணப்படுகின்றனர். (வ-135)

# சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் 6 பேர் பதவி விலகத் தீர்மானம்

கொழும்பு, மே 20
தேசிய அரசுடன் இணைந்து கொண்டு அமைச்சர் பதவிகளைப் பெற்றுள்ள சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் நான்கு அமைச் சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், பிரதி அமைச் சர்கள் இருவரும் தத்தமது அமைச்சர் பதவிகளிலி ருந்து விலகவுள்ளதாக அரசியல் வட்டாரங்களின் தகவல் மார்க் கங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் உள்ளூ ராட்சி நிறுவனங்களை ஆணையாளர் ஒரு வரின் கீழ்கொண்டு வருவதற்கு மேற்கொள் ளப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் நோக்கில் அந்தத் தரப்பினர் தமது அமைச்சர் பதவிகளை ராஜினாமாச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அந்தத் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.

எது எவ்வாறான போதிலும் அரசில் அமைச் சர் பதவிகளைப் பெற்றுள்ள சுதந்திரக் கட்சி யின் பெருமளவிலான நாடாளுமன்ற உறுப் பினர்கள் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வித மாக குருநாகலில் இடம் பெற்ற பேரணியில் பங் கேற்றிருந்ததாக ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச் சர்கள் கடந்த 13ஆம் திகதி இடம் பெற்ற கூட்டத்தில் சாட்சி ஆதாரங் களுடன் ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அதற்கமைய அந்த அமைச்சர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட் டுள்ள வசதி வாய்ப்புக் கள் தொடர்பாக கூடிய விரைவில் முழுமை யான அறிக்கை ஒன் றைத் தம்மிடம் சமர்ப் பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அமைச்சரவைச் செய லாளருக்கு அறிவித் திருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (வ-22)

**மரண அறிவித்தல்**

**திருமதி சரஸ்வதி கந்தசாமி**



யாழ் / தெல்லிப்பழை, மயிலப்பை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, உரும்பிராய், திருவையாறு ஆகிய இடங்களில் வசித்து வந்தவரும் தற்போது கனடா வில்வசித்தவருமாகிய சரஸ்வதி கந்தசாமி (16.05.2015) சனிக் கிழமை கனடாவில் காலமா னார்.

அன்னார் சுப்பையா - பார்வ திப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கதிரவேலு - முத்துப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், கனடாவில் வசிக்கும்கிளி, குஞ்சு(செல்வி) செல்வம், சோபா காலஞ்சென்ற சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள், ரஞ்சன், சோபியா, சுகந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், சர்வேஸ்வரி, சண்முகநாதன், ராஜேஸ்வரி காலஞ்சென்ற தில்லைநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் ராசா, முத்தையா, அருளம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
சயந்தன் - 077 394 7201
ரஞ்சன்(கனடா) - 6478680293
வினோதன் - 077 546 7064

# சினைப்பட்ட மாட்டை வெட்டி சாய்த்த பாதகர்கள்

தென்மராட்சி, மே 20

மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த சினைப்பட்ட பசுமாடொன்றை தோட்டத்தில் வைத்து வெட்டிச் சாய்த்துள்ளனர் பாதகர்கள்.

இந்தச்சம்பவம் கடந்த 13 ஆம் திகதி மீசாலை வடக்கு வேம் பிராயில் இடம்பெற்றுள்ளது.

தோட்டத்தில் ஆள்கள் இல்லாத வேளையில் உட்புகுந்த பாதகர் கள் மாட்டைவெட்டிக் கொலை செய்து விட்டுத் தப்பியோடி யுள்ளனர்.

சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடொன்றே இவ் விதம் கொல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரி விக்கப் பட்டது. (வ–9)

# சிவில் பாதுகாப்புப் படையினருக்கு ஓய்வூதியத்துடன் நிரந்தர நியமனம்

கொழும்பு, மே 20

சிவில் பாதுகாப்புப் படையணி யின் உறுப்பினர்கள் 40 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியச் சம்பளத் துடன் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசு தீர்மா னித்துள்ளது.

அதற்கமைய கடந்த 5 ஆம் திகதியில் இருந்து நடை முறைக்கு வரும் வகையில் இந்த நியமனங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மேற் கொள்ளப்பட இருப்பதாகவும், சிவில் பாதுகாப்புப் படை யணியின் பணிப்பாளர் நாயகமான சந்திரரத்ன பல்லேகம தெரிவித் துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேன வின் நல்லாட்சி தேர்தல் வாக்கு றுதிக்கு அமைய இந்தச் செயற் றிட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

சிவில் பாதுகாப்புத் திணைக் களம் நிறுவப்பட்டுள்ள 1986 ஆம் ஆண்டிலிருந்து நடை முறைப்படுத்தப்படும் விதமாக இந்த ஓய்வூதிய சம்பளங்கள் முறைமை நடைமுறைப்படுத்தப் படுவதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரி வித்தார்.

மேலும், ஓய்வூதியச் சம்பளங்களுடனான இந்த நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுவ தோடு புதிய சம்பள முறைமையுடன் பதவி உயர்வுகள் மற்றும் விடுமுறைகள் என்பவற்றுடன் அனைத்து உறுப் பினர்களுக்கும் இந்த நடைமுறை கட்டமைக்கப் படுவதாகவும் அவர் தெளிவு படுத்தியிருந் தார். (வ–22)


வேலாயுதம் பத்மலால்

## பிள்ளையார் மெடல் வேக்ஸ்

## கோயில் மணிகள் விற்பனைக்குண்டு

- 10kg-500kg வரை வடிவமைக்கப்பட்டுள்ளன.
- சுத்தமான வெண்கலத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன.
- தரமான ஒலிநயத்துடன் காணப்படுகின்றன.
- எங்களிடம் செப்புக் கொடித்தம்பம் உண்டு.
- செப்புக்கலசமும் உண்டு.
- திருவாசியும் உண்டு.

இந்தியாவின் மகாபலிபுரத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட கருங்கல் சிலைகள், ஐம்பொன் சிலைகள் மற்றும் கோயில் தேவைகளுக்கான அனைத்து பொருள்களும் எங்களிடம் கிடைக்கும்.



**விநியோகம் இலவசம்**

உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் எங்கள் சேவைகள் இடம்பெறும்.

43/4/A, Railway Road, Batticaloa, 0766693634

வேலாயுதம் பத்மலால் 0776765504


# சுயாதீன ஆணைக்குழுக்கள் தாமாகவே செயலிழக்கும்

## சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 20

19 ஆவது அரசமைப்புத்திருத்தம் நடைமுறைக்கு வருவ தோடு நான்கு சுயாதீன ஆணைக் குழுக்கள் தாமாகவே செயலிழந்து போய் விடுமென சட்ட நிபுணர்கள் சுட்டிக் காட்டு கின்றனர்.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழு என்பனவே இவ்வாறு செயலிழந்து போகவுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

மேற்படி ஆணைக் குழுக்க ளுக்கு மீளவும் ஆணையா ளர்கள் நியமிக்கப்படும் வரை யில், தற்போது உள்ள ஆணை யாளர்களுக்கு பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சட்ட ரீதியிலான தடையேதும் இல்லை என 19 ஆவது திருத்தச் சட்ட வரைவில் குறிப்பிடப்பட் டுள்ளதாகவும் அவர்கள் தெரி விக்கின்றனர்.

19 ஆவது அரசமைப்புத் திருத் தத்துக்கு அமைய அரசமைப்புச் சபையின் மூலமாகவே இந்த சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு ஆணையாளர் களை நியமிக்கப்பட வேண்டி யுள்ளது.

மேலும், அரசமைப்புச் சபையா னது 7 நாடாளுமன்ற உறுப் பினர்கள் உள்ளடங்கிய 10 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைவதோடு, எதிர்வரும் தினங்களில் அந்தச் சபை நிறுவப் படவுள்ளதாகதவும் தெரிவிக்கப்படு கின்றது. (வ–22)

# பெயர்ப்பலகையை அடித்து நொறுக்கிய விஷமிகள்

தென்மராட்சி, மே 20

கடைப் பெயர்ப்பலகையைமண்வெட்டியால் அடித்து நொறுக்கிய சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியில் இடம்பெற்றுள்ளது. இரவு வேளையில் வந்த கும்பலொன்று அந்த இடத்தில் பெரும் ரகளை புரிந்து விட்டு கடைக் கட்டத்தின் மீது ஏறி அங்கே பொருத்தப்பட்டி ருந்த கடையின் பெயர்பலகையை அடித்து நொறுக்கிக் கீழே வீழ்த்திவிட்டுச் சென்றுள்ளது.

சம்பவத்தை நேரில் பார்த்தவர் களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸாருக்கு தகவல் வழங் கினால் வெட்டுவோம் என்று கூறிச் சென்றதாகவும் தெரிவிக் கப்பட்டது. (வ–9)


## பனை அபிவிருத்திச் சபை

## கூறுவிலை கோரல்

சபையின் பாவனைக்குப் பின்வரும் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளமையால் தகுதிவாய்ந்தவர்கள் அதற்கான தங்களின் ஆகக்குறைந்த கூறுவிலையினை சபையின் தலைமை அலுவலகத்துக்கு 03.06.2015 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம். மேலும் கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விரிவாக்கல் பகுதிக்கான கூறுவிலை எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

1. ஓலை வாரும் கருவி - 25 எண்ணிக்கை
2. சத்தகம் - 25 எண்ணிக்கை
3. வெட்டுக்கத்தி - 25 எண்ணிக்கை
4. பூவேலை செய்யும் கருவி - 25 எண்ணிக்கை

**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை,**
**முதலாம் மாடி தேசிய வீடமைப்பு செயலகம்,**
**கண்டிவீதி, யாழ்ப்பாணம்.**


# ஆலயத்துக்கு தேர்த் தரிப்பிடம்

சுழிபுரம், மே 20

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த் தரிப்பிட மண்டப நிர்மாணப் பணிகள் நடைபெற்று வரு கின்றன. கட்டட வேலைகளை பொன்னாலைக் கட்டட ஒப்பந்த காரர் பொறுப்பேற்று செய்து வருகிறார். வேலைகள் யாவும் வருடாந்தத்திருவிழா வுக்கு முன்னர் நிறைவடையும் என்று தெரி விக்கப்படுகின்றது. (வ–28)


## தாதி தேவை

எமது வைத்திய நிலையத்துக்கு பெண் தாதி தேவை. மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டும்.(பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

முருகானந்தா வைத்திய நிலையம்
34,புங்கன்குளம்வீதி, பாசையூர்.

(59984) (9.3.6) தொடர்பு: 077 628 4687

## விற்பனைக்கு

அலங்கார மீன்கள் , ஊர்க்கோழிக் குஞ்சுகள் (30, 45, 60 நாள் குஞ்சுகள்), ஒரு நாள் புறொயிலர் குஞ்சுகள் மற்றும் இறைச்சிக் கோழிகள் பனை, சண்டிலிப்பாய் பிரதேசத்தில் விற்பனைக்கு உள்ளன.

Kay Farm.(Pvt)Ltd.
தொடர்பு: 021 320 4232, 078 880 3483
077 235 1028



# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non refundable Deposit(Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security(Days) | Approximate Direct cost of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of ANC Clinic | 500.00 | 47,000.00 | 91 | 2.31 | C8 |
| Renovation of Microbiology Lab, Renovation of Media Room and Renovation of Biochemistry Lab | 500.00 | 24,000.00 | 91 | 1.17 | C9 |
| Renovation of Histopathology Lab and Aluminium partition for Neuro Surgical Unit. | 500.00 | 25,000.00 | 91 | 1.22 | C9 |
| Iron Grill Works at Wards No 01, 02 & 04 | 500.00 | 27,000.00 | 91 | 1.33 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construcation, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary
5. A completed set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 20.05.2015 up to 04.06.2015 during office hours. The payment shall be made to the Shroff 's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00hrs on 05.06.2015, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director(Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**19/05/2015**



## இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீ முருகன் ஜோதிடம்

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம். கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இல. 175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்வித்தினர் வீதி, G.G.Hotel, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 595 0463

## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு / வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மணமக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
077 138 7596, 021 222 9306
075 554 6000, 071 894 5692
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)
Email: nakapoosanywedding@gmail.com
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

## எதிர்க்கட்சித் தலைவரை தீர்மானிக்காமை சபாநாயகரிடம் கேள்வி எழுப்பப்படும்

### அனுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்

எதிர்க்கட்சியின் தலைவர் யார் என்பதை சபாநாயகர் இன்று வரையிலும் வெளிப்படுத்தாதிருப்பது தொடர்பாக அடுத்த வாரத்தில் கூடவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் வைத்து சபாநாயகரிடம் கேள்வி எழுப்புவதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆயத்தமாகி வருகிறார்.

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் யார் தாம் உள்ளிட்ட எதிரணியால் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கை ஒன்றுக்கு அமைய எதிர்க்கட்சித் தலைவரைக் குறிப்பிட்டுக் கூறுவதைப் பிற்போட்டு இன்றளவில் இரண்டு மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்து சென்றுள்ளதால் எதிர்க்கட்சித் தலைவரின் பெயரை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பாக தாம் இந்தக் கேள்வியை சபாநாயகர் முன் தொடுக்கவுள்ளதாக திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய, அரசமைப்புச் சபையில் எதிர்க்கட்சியின் தலைவர் அங்கம் வகிக்க வேண்டியுள்ளது என்றும் இன்று வரையிலும் சபாநாயகரின் பொறுப்புகளில் ஒன்றான எதிர்க்கட்சித் தலைவரை அறுதியிட்டு வெளிப்படுத்தாதிருப்பதன் மூலம் 19 ஆவது அரசமைப்புத் திருத்தமும் கூட அர்த்தமற்றதாகி விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (வ-22)

## நயினை நாகபூஷணி மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,மே.20

வரலாற்று பெருமைமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆனி மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் 16 ஆம் திருவிழாவான 02.07.2015 வியாழக்கிழமை அன்று இரவு தெப்பத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஒ)

## வவுனியா கலைமகள் ம.வித்திக்கு ஒருதொகுதி அலுமாரிகள் அன்பளிப்பு

கரணவாய், மே 20

வவுனியா கலைமகள் மகா வித்தியாலயத்தின் தேவைகளுக்கு வட மாகாண சபை உறுப்பினர்களால் ஒரு தொகுதி அலுமாரிகள் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை கல்லூரிக்கு பயணம் செய்த வடமாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ். ரவீந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.பி.நடராசா, எஸ்.இந்திரராசா, எம்.தியாகராசா ஆகியோர் அடங்கிய குழுவினர் பாடசாலை அதிபர் மு.அமுதலிங்கத்துடன் பாடசாலைத் தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

பாடசாலையின் தேவைகளுக்கென கலையரங்கம் இல்லாததால் இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதனை அமைத்துத்தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அதனை அடுத்து தகுந்த இடங்களுடன் தொடர்பு கொண்டு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதாக குழுவினர் அதிபரிடம் உறுதியளித்தனர். தொடர்ந்து பாடசாலையின் குறை நிறைகளை கேட்டறிந்ததுடன் பாடசாலையின் தேவைகளுக்கென ஒரு தொகுதி அலுமாரிகளையும் வழங்கினர். (வ-108)


# சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்'' வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகிய நான் 1983 ஆம் ஆண்டு 32ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டு 11ஆம் இலக்கங் கொண்டதும் கூட்டுறவுத் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சட்டத்தின் கீழ் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் 24.05.2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கமைய இக்கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர், அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் குறைந்த இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும்பட்சத்தில் திருவுளச்சீட்டுமூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

| கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|
| 3 | சித்தன்கேணி | யா/ஸ்ரீகணேச வித்தியாலயம், சித்தன்கேணி | இ.தயாகரன் |
| 4 | பனிப்புலம் | கிளை 04 பனிப்புலம், கிளைக்கட்டடம் | க.திசாகரன் |
| 5 | பண்ணாகம் | கிளை 05 பண்ணாகம், கிளைக்கட்டடம் | பா.சிறிகுமார் |
| 6 | சுழிபுரம் வடகிழக்கு | வீரபத்திரமுன்பள்ளி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் | அ.விமல்ராஜ் |
| 7 | சுழிபுரம் மத்தி | மீளளிப்பு கடன் திட்ட நிறுவனம், கிளை 07 இற்கு அருகில் | இ.புவன்ராஜ் |
| 8 | சுழிபுரம் குகன் | கலைமகள் சனசமூக நிலையம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் | வே.பிரதீஸ்குமார் |
| 9 | சுழிபுரம் மேற்கு | பாரதி கலைமன்றம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் | வி.ஜெயந்தன் |
| 10 | பொன்னாலை | கலாசார மண்டபம், பொன்னாலை | பா.பாலவரதன் |
| 11 | மூளாய் | கிளை 11 மூளாய், கிளைக்கட்டடம் | பா.வாகீசன் |
| 12 | தொல்புரம் | கிளை 12 தொல்புரம், கிளைக்கட்டடம் | ஜ.மயூரன் |
| 12 A | நெல்லியான் | கிளை 12 தொல்புரம், கிளைக்கட்டடம் | ச.பாலகுமார் |
| 14 | தொல்புரம் மத்தி | தொல்புரம் மத்தி சனசமூக நிலையம், சுழிபுரம் | வி.கு.வின்சன்ஞானதயாளன் |
| 15 | தொல்புரம் கிழக்கு | விக்னேஸ்வரா சனசமூக நிலையம்,தொல்புரம் கிழக்கு சுழிபுரம். | வ.நிதர்ஷன் |
| 16 | வட்டு பிளவத்தை | கற்பகசோலை சனசமூக நிலையம் வட்டு வடக்கு, சித்தன்கேணி | இ.வேல்குமார் |
| 17 | வட்டு சிவன் | கிளை 17 வட்டு சிவன், கிளைக்கட்டடம் | திருமதி த.மாலினி |
| 18 | வட்டு கிழக்கு | கிளை 17 வட்டு சிவன், கிளைக்கட்டடம் | பொ.கோகுலன் |
| 19 | வட்டு மூளாய் | ஸ்ரீகணேச வாசிகசாலை மூளாய் வீதி வட்டுக்கோட்டை | திருமதி ஜெ.தர்சினி |
| 20 | வட்டு மேற்கு | 3ஆம் பனை ஐக்கிய நாணய சங்க மண்டபம், வட்டுக்கோட்டை | இ.கஜேந்திரன் |
| 21 | வட்டுக்கோட்டை | 3ஆம் பனை ஐக்கிய நாணய சங்க மண்டபம், வட்டுக்கோட்டை | நா.ஜெயவதனன் |
| 22 | அராலி மேற்கு வடக்கு | கிளை 22 அராலி மேற்கு வடக்கு, கிளைக்கட்டடம் | ம.கபிலன் |
| 23 | அராலி வடக்கு | யா/ அராலிவடக்கு அ.மி.த.க.பாடசாலை, வட்டுக்கோட்டை | திருமதி சு.தர்சினி |
| 24 | அராலிதெற்குகிழக்கு | கிளை 24 அராலி தெற்குகிழக்கு, கிளைக்கட்டடம் | க.பாலகிருஷ்ணன் |
| 25 | அராலி விக்னேஸ்வரா | கிராம அபிவிருத்திச் சங்கம் அராலிதெற்கு, வட்டுக்கோட்டை | க.பரநிருபன் |
| 26 | அராலி ஐயனார் | காலைமகள் சனசமூக நிலையம், அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை | தி.வித்தககலாநிதி |
| 27 | செட்டியாமடம் | அராலி வடக்கு சனசமூக நிலையம், வட்டுக்கோட்டை | கு.நிசாந்தன் |
| 28 | துணைவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை | அ.தயாளன் |
| 29 | சங்கரத்தை துணைவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை | க.கமலநாதன் |
| 30 | சங்கானை கிழக்கு மத்தி | நலன்புரிசங்க வாசிகசாலை, சங்கானை | திருமதி எஸ்.எமல்டா |
| 31 | நிற்சாமம் | நிற்சாமம், சரஸ்வதி சனசமூகநிலையம் | பா.குருபரன் |
| 32 | சிலம்புப்புளியடி | யா/சிவப்பிரகாசா மகாவித்தியாலயம், சங்கானை | சு.அகிலன் |
| 33 | சங்கானை கிழக்கு | யா/சிவப்பிரகாசா மகாவித்தியாலயம், சங்கானை | த.கண்ணதாசன் |
| 34 | தொல்புரம் மேற்கு | கிளை 34 தொல்புரம் மேற்கு, கிளைக்கட்டடம் | க.சுரேஸ்பாபா |
| | அலுவலக கடமை | | வ.கிருசாந் |
| | அலுவலக கடமை | | ச.ரதிகுலன் |

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்.

திருமதி மதுமதி வசந்தகுமார்,
கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் (வ.மா)

# உதயனின் மாபெரும் கலை இலக்கியத் தேர்வின் பரிசில் நாள்

































உதயன் நாளிதழால் நடத்தப்பட்ட மாபெரும் கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், கட்டுரைப் போட்டி பிரிவு 'பி' யில் வெற்றி பெற்ற மற்றும் சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதை இங்கு காணலாம்.

இந்தப் பரிசுக் கொண்டாட்டத்தின் ஏனைய நிகழ்வுகள் நாளைய உதயனில் வெளிவரும். விழாவில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான ஒளிப் படங்கள் தேவைப்படின் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0718628380.

# கொலம்பியாவில் வெள்ளம் 47 பேர் உயிரிழப்பு





கொலம்பியா,மே20
கொலம்பியாவில் கனமழை காரணமாக வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. இந்தச் சம்பவங்களால் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரசு தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

மெடிலினுக்கு தென் மேற்காக 60 மைல் தொலைவில் உள்ள சால்கார் நகரில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்தப்பகுதியில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து லிபோரியானா ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. கரை புரண்டு ஓடிய தண்ணீர் கரையோரப் பகுதிகளில் இருந்த வீடுகளை அடித்துச் சென்றுள்ளது. கனமழையினால் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளதுடன், வீடுகளும் மண்ணுக்குள் புதைந்துள்ளன. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு மீட்புக் குழுவினர் சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவங்களில் 47 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்துள்ளனர். உயிரிழப்பு எண்ணிக்கை உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

எல்லாப்பகுதிகளிலும் மரங்கள் மற்றும் பாறைகள் விழுந்துள்ளன. பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் ஹெலிகொப்டர்கள் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் மண்சரிவு அச்சத்தில் உள்ளனர்.

காயம் அடைந்த 25 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். லிபோரியானா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக சால்கார் நகரமே சீர் குலைந்து விட்டது. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (14)



## அதிர்ச்சியில் ஜெயலலிதா

டில்லி,மே20
ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் மேல் முறையீடு செய்ய கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர், அந்த மாநில அரசுக்கு பரிந்துரைக் கடிதம் அனுப்பியுள்ளார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் இருந்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை விடுதலை செய்து கர்நாடக உயர் நீதி மன்ற சிறப்பு நீதிவான் குமாரசாமி தீர்ப்பு வழங்கியுள்ளார். இந்த வழக்கில் அவரது தோழி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கும் விடுதலை அளிக்கப்பட்டதோடு, அவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதமும் ரத்துச் செய்யப்பட்டது.

இந்தத் தீர்ப்பில் கணக்குப் பிழை இருப்பதாகக் கூறி, தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு மேல் முறையீடு செய்ய வேண்டும் என்று தி.மு.க, பா.ம.க, காங்கிரஸ், மார்க் சிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இதனிடையே, மேல்முறையீடு குறித்து கருத்து தெரிவித்த கர்நாடக முதல்வர் சித்தராமையா, இந்தத் தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு மேல் முறையீடு செய் வது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம் எனக் கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் ரவிவர்ம குமார், கர்நாடக சட்டத்துறை அமைச்சர் ஜெயசந்திராவுக்கு பரிந்துரை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்தப் பரிந்துரைக் கடிதம் தொடர்பில் நாளை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## ஆண்களின் இரகசியங்களை அறிய ஆசைப்படும் சவூதிப் பெண்கள்



ரியாத்,மே20
வருங்கால கண்வர் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை வேண்டும் எனசவூதியில் உள்ள இளம் பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒவ்வொரு தந்தையும், தங்களது மகள்களுக்கு மணமகன் தேடும் போது, நல்ல வேலையில் இருக்கிறாரா? நல்ல குணமுடையவரா? என்று பார்த்து திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணம் முடிந்த பின்னர், மணமகனின் கடந்த கால வாழ்க்கை பற்றி அறிய வரும்போது, பெண்கள் விவாகரத்தை நோக்கிப் பயணிக்கிறார்கள்.

இவ்வாறு 70 சதவீத திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன. அண்மைக்காலமாக சவூதியில் விவாகரத்துகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இதைத் தவிர்க்கும் வகையில் சவூதிப் பெண்களுக்கு வருங்காலக் கணவர்களைப் பற்றிய தகவல்களை அறியும் உரிமை வழங்கப்பட வேண்டும் என குடும்பநல பெண் வழக்கறிஞரான நஜ்வா சலா கருத்துக் கூறியுள்ளார்.

அதே வேளையில், திருமணத்துக்கு முன்னர் சற்று முரண்பாடான முறையில் வாழ்ந்துள்ளார் என்பதை வைத்து, ஓர் ஆணை முற்றிலுமாக நிராகரித்துவிட முடியாது. முன்னர் செய்த தவறுகளுக்கு மனம் வருந்தி, திருமணத்துக்குப் பின்னர் ஒழுக்கமாக வாழும் ஆண்களும் உண்டு என்பதை நாம் மறுத்து விட முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (14)

## ராஜீவ் கொலை வழக்கு விசாரணைக்கு வருகிறது



டில்லி,மே19
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேரின் விடுதலையை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி நடைபெறும் என்று உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கடந்த 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி உட்பட 26 பேருக்கு தடா நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. பின்னர் அவர்களில் 19 பேரை விடுவித்த உச்சநீதிமன்றம், மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகவும் குறைத்தது.

இந்த நிலையில் பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், மத்திய அரசின் ஒப்புதலை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. ஆனால், அது தொடர்பாக மத்திய அரசு தாமதிக்கவே, 7 பேரையும் விடுதலை செய்வதாக அப்போதைய முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் அறிவித்தார்.

ஆனால் தமிழக அரசின் இந்த முடிவுக்கும், தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாக மாற்றிய உச்சநீதிமன்ற உத்தரவுக்கும் மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்தது. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு வழக்கும் தொடர்ந்தது. இந்த மனுவை விசாரித்த அப்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிவான் சதாசிவம் கொண்ட அமர்வு, இந்த வழக்கை 5 பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உத்தரவிட்டது.

பின்னர் இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், 7 பேரின் விடுதலையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டு வழக்கு விசாரணையை திகதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தது. இந்த நிலையில் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலையை எதிர்த்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி தொடங்கும் என்று உச்ச நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.(14)

## எளிமையான நாடாக இந்தியா மாறும்
### தென்கொரியாவில் மோடி தெரிவிப்பு



சியோல்,மே20
வர்த்தகம் செய்வதற்கு, எளிமையான நாடாக இந்தியாவை உருவாக்க மிகவும் தீவிரமாக பணியாற்றுகிறேன் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மிகவும் நிலையான மற்றும் எதிர்பார்க்கக்கூடிய வரிவிதிப்பு முறை விவகாரம் தொடர்பாக உலக முதலீட்டாளர்களுக்கு உறுதியளித்து உள்ள பிரதமர் மோடி, தனது அரசு வர்த்தகம் செய்வதற்கு எளிமையான நாடாக இந்தியாவை உருவாக்க மிகவும் தீவிரமாக பணியாற்றுகிறது என்று தெரிவித்துள்ளார். தென்கொரியாவில் தொழிலதிபர்கள் மத்தியில் பேசிய பிரதமர்மோடி, என்னுடைய அரசு கடந்த ஒருவருடத்தில் இந்தியாவின் அரசியல், ஆட்சி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை உலகத் தரத்திற்கு முன்னெடுத்துச் சென்றுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பம், மின்சாரம், இரும்பு, ரயில்வே, கப்பல் வர்த்தகம் ஆகிய துறைகளில் தென்கொரியத் தொழிலதிபர்களின் ஒத்துழைப்பையும் பிரதமர் மோடி கேட்டுக் கொண்டுள்ளார். (14)

## கனடா சாரதிகள் மீது நடவடிக்கை

ரொறான்ரோ,மே20
கனடாவில் 140 இற்கும் மேற்பட்ட வாகன சாரதிகள் தவறான முறையில் வாகனம் செலுத்திய காரணத்தினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக ரொறொன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனைத்து இடங்களிலும் தவறான முறையில் வாகனம் செலுத்துவதைக் குறைக்கும் திட்டத்தில் பொலிஸார் ஈடுபட்டனர்.

வேகமாக வாகனம் செலுத்துதல் கைத்தொலைபேசிகளை பாவித்து கவனம் திசை திருப்பப்படுவது போன்ற செயல்பாடுகளும், ஆசனப் பட்டியை அணியாமல் வாகனம் செலுத்துதல் போன்றனவும் தவறான வாகனம் செலுத்துதல் என கருதப்படுகின்றது. கனடாவில் தவறான முறையில் வாகனம் செலுத்தும் சாரதிகளால் வருடந்தோறும் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(14)




# புருண்டியில் ஜனாதிபதிக்கு எதிராக தொடரும் போராட்டங்கள்

புஜம்புரா,மே20
ஆபிரிக்க நாடான புருண்டியின் தலைநகர் புஜம்புராவில் ஜனாதிபதி பியே நுஹரின்சிஷாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடங்கியுள்ளன.
ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்கள் தொடரும் நிலையில், பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.
ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்காக அவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளனர்.
ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பெரும்பாலும் அமைதியாகவே நடைபெற்றன. கடந்த வாரம் ஜனாதிபதிக்கு எதிரான இராணுவச் சதிப் புரட்சி முறியடிக்கப்பட்டுள்ளது.
இதனிடையே அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் படி கென்ய ஜனாதிபதி புருண்டி ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார்.
நாட்டின் ஜனாதிபதியாக மூன்றாவது முறையாக போட்டியிட நுஹரின்சிஷா முனைந்துள்ளதை அடுத்து அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் கடந்த மாதம் ஆரம்பித்துள்ளன.
இதையடுத்து அங்கு இருபதுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (14)

# எபோலா நோயைத் தடுக்க அவசர நிதியம் அமைப்பு

ஜெனிவா,மே20
எதிர்வரும் காலத்தில் எபோலா நோய் பரவலைத் தடுக்க 160 மில்லியன் டொலர்கள் நிதியுடன் அவசர நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.



எபோலா காரணமாக பல மேற்கு ஆபிரிக்க நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிதியம் இனிவரும் காலங்களில் உடனடியாக எபோலா நோயை எதிர்த்து சமாளிப்பதற்கு உதவும் என அந்த நிறுவனத்தின் தலைமை இயக்குநர் மார்கரெட் சான் தெரிவித்துள்ளார்.
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா தொற்று நோயால் ஏற்பட்ட பெரிய அளவிலான பாதிப்புகளை அவதானித்த பின்னர் தமது நிறுவனம் அதன் தாக்கத்தை உணர்ந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
அந்த நோயை எதிர்த்து போராடுவதற்கு தமக்கு இருந்த வல்லமையைவிட பத்து மடங்கு அதிகமாகத் தேவைப்பட்டது எனவும் மார்கரெட் சான் தெரிவித்துள்ளார். எபோலா நோய்த் தாக்கம் போன்ற ஒரு சூழலை தாங்கள் இதுவரை எதிர்கொண்டது இல்லை எனவும் அவர் கூறியுள்ளார். கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் எபோலாத் தொற்று பரவ ஆரம்பித்த பின்னர் அந்த நோயின் காரணமாக 11 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(14)

# சாவுத் தண்டனையை நிறைவேற்ற ஆள்தேடுகிறது சவூதி அரேபியா



சவூதி அரேபியாவில் சாவுத் தண்டனை அதிகரித்ததை அடுத்து, பொது இடத்தில் வைத்து அதனை நிறைவேற்ற ஆள்வேண்டும் என்று அந்த நாட்டு அரசு விளம்பரம் செய்துள்ளது.
உலகில் அதிகமாக சாவுத் தண்டனை நிறைவேற்றப்படும் நாடுகள் பட்டியலில் மன்னர் ஆட்சி நடைபெற்று வரும் சவூதி அரேபியா 3 ஆவது இடம் பிடித்துள்ளது. இத்தகைய கொடூரமான பணியினைச் செய்ய, சாவுத் தண்டனையை நிறைவேற்ற ஆள்கள் தேவை என்று விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் குறைவான சம்பளம் மற்றும் எந்த ஒருசிறப்புதகுதிகளும்தேவைப்படாத இந்த வேலை மிகவும் எண்ணிப் பார்க்க முடியாதது. சாவுத்தண்டனையை நிறைவேற்ற 8 பேர் தேவை என்றும் சவூதி அரேபியா விளம்பரம் செய்துள்ளது.
சாவுத் தண்டனை அதிகரித்துள்ளதை அடுத்து அதனை நிறைவேற்ற ஆள்கள் தேவை என்று கூறப்பட்டுள்ளது. பொது இடத்தில் வைத்து சாவுத்தண்டனை நிறைவேற்றப்படும். சாவுத்தண்டனை நிறைவேற்றுவதில் கடந்த வருடம் சீனா மற்றும் ஈரானைத் தொடர்ந்து சவூதி அரேபியா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்த வருடம் சவூதி அரேபியாவில் 85 பேர் தலை வெட்டிக் கொலைசெய்யப்பட்டுசாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளனர். (14)

# பாக்தாத்தை நோக்கி ஐ.எஸ். படைகள்



பாக்தாத்,மே20
ஈராக்கில் கடும் போருக்குப் பின்னர் ரமடி நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இராணுவ வீரர்கள் ஓட்டம் பிடித்துள்ளனர். இந்த நிலையில் ஐ.எஸ். படைகள் பாக்தாத்தை நோக்கிச் செல்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக ஈராக்குக்குள் புகுந்து கடும் போரில் ஈடுபட்டு வருகின்றனர்.
அவர்களின் கை ஓங்கியதால் அமெரிக்கா தனது விமானப் படை மூலம் ஈராக் இராணுவத்துக்கு உதவி வருகிறது என்ற போதிலும், ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்க முடியவில்லை.
இந்த நிலையில் ஈராக்கின் முக்கிய மாகாணங்களில் ஒன்றான அன்பாரின் தலைநகரான ரமடியை கடந்த சில வாரங்களுக்கு முற்றுகையிட்ட தீவிரவாதிகள் இராணுவத்தின் மீது அலை அலையாய் திரண்டு வந்து தாக்குதலை தொடுத்தனர். கடந்த வெள்ளிக்கிழமை போர் உச்சக்கட்டத்தை எட்டியது. அதன் போது 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினரைத் தீவிரவாதிகள் கொன்று குவித்துள்ளனர். இந்தச் சண்டையில் பொதுமக்களுடன் இராணுவத் தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் படுகாயமும் அடைந்துள்ளனர்.
ரமடி நகரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து ஒரு லட்சத்து 14 ஆயிரம் மக்கள் வன்முறைக்குப் பயந்து வெளியேறிவிட்டதாக ஐ.நா. சபை கூறுகிறது.
இந்த நிலையில் ரமடி நகரத்தை முழுமையாக ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். இது ஈராக் இராணுவத்துக்கும், விமானத் தாக்குதல் நடத்தி வரும் அமெரிக்காவுக்கும் மிகப்பெரிய தோல்வியாகக் கருதப்படுகிறது. ரமடி நகரை தீவிரவாதிகள் கைப்பற்றிவிட்டதால் இனி விருப்பம் போன்று தங்களுக்கென ஒரு நாட்டை அவர்கள் உருவாக்க முயற்சிப்பார்கள் என்றும் கருதப்படுகிறது. ரமடி நகரத்தை கைப்பற்றிய ஐ.எஸ். தீவிரவாதிகள் பாக்தாத்தை நோக்கி படை எடுத்துச் செல்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)



# அகதிப் படகுகளை அழிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல்

லிபியாவிலிருந்து குடியேறிகளை ஐரோப்பாவுக்கு கொண்டுவருவதற்கு மனிதக்கடத்தல்காரர்கள் பயன்படுத்தும் படகுகளை அழிக்கும் திட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்களின் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இந்தத் திட்டம் அனைவராலும் ஏற்கப்பட்டு அதற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் முதல்கட்டமாக மனித கடத்தல்காரர்களின் செயற்பாடுகள் குறித்த தகவல்கள் புலனாய்வு மூலம் திரட்டப்படும். அடுத்தகட்டமாக அவர்களின் படகுகள் சர்வதேச கடற்பரப்பில் குறிவைக்கப்படும்.
இதன் தொடர்ச்சியாக இத்தகைய இராணுவ நடவடிக்கைகளை லிபிய கடல் எல்லைக்குள்ளும், கடற்கரையோரங்களிலும் கூட மேற்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.
இதற்கான சட்டரீதியிலான அங்கீகாரத்தை அளிக்கவல்ல ஐ.நா. சபையின் பாதுகாப்புச்சபைத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவும் அவர்கள் முயல்கிறார்கள்.
இந்த வருடத்தில் மட்டும் வட ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக் குள் சுமார் 60 ஆயிரம் பேர் வரை கடல்வழியாக வந்திருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. (14)

# டிப்பர்-பஸ் விபத்து 21 பேர் சாவு

கம்போடியா,மே20
கம்போடியாவில் சிவாய் நியாங் மாகாணத்தில் டிப்பரும் சுற்றுலா பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.
வியட்நாமில் இருந்து புனோம் பென் புறப்பட்ட சுற்றுலா பஸ்.



சிவாய் நியாங் மாகாணத்தில் சென்று கொண்டு இருந்த போது எதிரே கூலி தொழிலாளிகளை ஏற்றி கொண்டு வந்த டிப்பருடன் மோதியதில் டிப்பரில் பயணித்த 16 பெண்கள் உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.(14)

■ கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்

# செல்லப்பரின் கர்ச்சனையே யோகருக்கு அர்ச்சனை"

இலங்கையில் காலத்துக்குக் காலம் தவசிரேஷ்டர்கள் பலர் தோன்றி திருவருள் கைகூடப் பெற்றவர்களாய் மக்களை வாழ்வாங்கு வாழ வழிகாட்டியுள்ளார்கள். பொதுவாக எல்லா மதங்களிலும் இதுபோல் நடைபெறுவது வாலாயமாக இருக்கின்ற போதும் சைவ சமயத்தில் குருவருள்' நிரம்பிய இருவரை என்றும் போற்றி வணங்குகின்றோம் சிறப்போடு.

அவ்வாறு போற்றி வணங்கப்படுபவர்கள் யாரெனில், ஒருவர் தவத்திரு செல்லப்பா சுவாமிகள். மற்றையவர் தவத்திரு யோகர் சுவாமிகள். இன்னொரு விதமாகச் சொல்வதாயின் குருவும் சிஷ்யனும் என்பதாகும். இருவருமே மொத்தமாக நூறு ஆண்டுகளை ஆன்மிக எல்லைகளாக வடிவமைத்துக் கொண்டதுபோல ஒவ்வொருவருடைய இதயங்களையும் துப்புரவு செய்த மகா புருஷர்களாவர். துப்புரவு என்பது மனித இதயங்களுக்குப் பொருந்துமா என்ற கேள்வி எழுவது இயல்பே. அது சரியென்று கூற முடியும். காரணம் நாம் பொதுவாக வேண்டாத பலவற்றையும், நிலையில்லாத எக்கச்சக்கமானவற்றையும் உள்ளே வைத்திருக்கிறோம். இவற்றை நீக்குவதென்பது குருவருளாலேதான் துப்புரவு செய்ய முடியும். அதனையே செல்லப்பரும் யோகரும் செய்தனர்.

இவர்களுக்கு முன்னோடியாக கடையிற்சுவாமியே பரிபக்குவநிலையை மிக எளிதாக செல்லப்பா சுவாமிகளுக்கு வழங்கினார். எப்படியென்றால் செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமியைத் தரிசிப்பதற்காக வந்து கொண்டிருக்கின்றார். கண்டவுடன் கடையிற்சுவாமியோ ஒரு ரூபாவை வெற்றிலையில் வைத்து மடித்து செல்லப்பரின் கையில் வைத்து தான் வைத்திருந்த குடையைத் தலையில் சுமக்கச் செய்து செல்லப்பரைப் பார்த்து ஓடடா" என்று சொன்னார். ஓடிய செல்லப்பர் நல்லூர் தேரடியில் பதினைந்து நாள்கள் ஆடாமல் அசையாமல் தியான்ம் செய்தார். கடையிற் சுவாமியின் அருட்பிரவாகம் செல்லப்பரை ஞான குருவாக்கிற்று. சித்தத்தைச் சிவமயமாக்கிய காரணத்தினால் சிவ சம்பத்துக்கள் அவர்பால் நிறைந்ததெனலாம். அதனால் தன்னை மறந்தார். அதனால் விசர் செல்லப்பர்' என்று அழைக்கலானார்கள். மேலும் இவரை சாதியாச்சாரமோ சமயாச்சாரமோ, சம்பாத்திய ஆச்சா ரமோ மற்றும் ஆசாபாசங்களோ எதுவுமே செல்லப்பரைத் தொந்தரவு செய்யவில்லை. இந்த நிலை தற்காலத்தைத் தொந்தரவு செய்வதனால்தான் எம்சமயம் பல சங்கடங்களைச் சுமந்த வண்ணம் உள்ளது. நாம் சமயத்தைச் சங்கடப்படுத்துகிறோமே தவிர, உண்மையான சமயிகளாக வாழ்கிறோமா என்று எண்ணத் தோன்றுகின்றது. செல்லப்பரின் நிலை அன்றைய மக்களை ஆன்மிக வழியில் நேராகப் பயணிக்க வைத்தது. சிந்திக்கவும் வைத்தது. எதிலுமே தட்டாது, முட்டாது நின்று சிரிப்பார், களிப்பார் , பேசுவார், கூத்தா டுவார், பட்டினி கிடப்பார். பாடுவார், பிச்சையெடுப்பார், பிறிதாகச் சமைப்பார். நல்லூர் தேரடியில் படுத்துறங்குவார். இவ்வேளையில்தான் கொழும்புத்துறையை சேர்ந்த விதானையார், திருஞானசம்பந்தர், துரையப்பா ஆகியோருடன் யோகநாதன் எனப்பெயர்கொண்ட யோக சுவாமிகளும் சென்றார். யோகநாதனைக் கண்ட செல்லப்பா சுவாமிகள்.


யாரடா நீ!" என்று அதட்டினார். இடிபோல அதட்டிய அந்த கர்ச்சனை தான் யோகசுவாமிக்கு அர்ச்சனையாக அமைந்ததெனலாம். ஆரடா நீ! தேரடா உள், தீரடா பற்று' 'என்ற வாசக பரிபூரண தீட்சையை அளித்த கையோடு:

"ஒரு பொல்லாப்பும் இல்லை,
முழுவதும் உண்மை,
நாமறியோம்
எப்பவோ முடிந்த காரியம்"

ஆரறிவார்? ஆகிய மகா வாக்கியங்களை அவரது செவியினில் உபதேசித்து அருளினார். அன்றிலிருந்து யோகரின் குருவாக செல்லப்பர் விளங்கினார். யோகரே பொருத்தமான ஒருசீடனாக அமைந்துவிட்டான் என்பதை உணர்ந்து தன்னை அவரிடம் மனதார ஒப்படைத்தார். அன்று முதல் செல்லப்பா சுவாமிகளை யோகரும் குருவாக ஏற்றுக்கொண்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இன்றுவரை செல்லப்பரின் ஒவ்வொரு சொல்லும் மெத்தச் சரியாகவேயுள்ளது. ஆம், நாம் ஒவ்வொருவரும் செல்லப்பரின் கேள்விக்கு விடையை இதுவரை பெற்றோமா? என்பது வினாவாகவேயுள்ளது. யார் நீ? இதற்கு என்ன பதில்? 1915ஆம் ஆண்டு பங்குனி மாதம் அச்சுவினி நட்சத்திரத்தில் வெள்ளி பூத்த இரவு வேளை ஓம் என்ற ஒலியோடு செல்லப்பர் சமாதியடைந்தார். அவனே –நான்' என்ற தாற்பரியமோடு. நீயார் என்பதற்கு விடையாக, செல்லப்பரின் வழியில் திகழ்ந்தவர்தான் தவத்திரு யோக சுவாமிகளாவார்.

யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் என்னும் வரலாற்றுத் திருப்பதியில் சைவப் பெரியார் அம்பலவாணர்–சின்னாச்சி அம்மையார் தம்பதியினருக்கு 1872ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம் 29ஆம் திகதி அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தவர்தான் யோகநாதன் என்ற பெயர்கொண்ட யோகர்சுவாமி அவர்கள். கத்தோலிக்கப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியும், யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியுமாக தமிழ்,ஆங்கிலக் கல்வியில் பரிணமித்தார்.

தந்தையார் மஸ்கெலியாவில் வியாபாரம் நடத்திய காரணத்தினால் தேயிலைத் தோட்டமொன்றில் எழுதுநராகக் கடமைபுரிந்தார். மலைநாடு மனதுக்கிசைந்த இரம்மியம் மிக்கதாக அமைந்திருந்ததனால் சிவனொளிபாதமலையின் இரகசியத்தையும் அங்கு சூரியோதயக் காட்சியையும் கண்டு கண்டு அனுபவித்தார். தன்மனதைப் பறிகொடுத்தார் .அதனால் யோகர் தன்பாட்டிலேயே பேசத் தொடங்கினார். எப்படி? எனது உடம்பு சிவன் சொத்து . இது சிவனுக்கே சொந்தம். நான் அவனையே தேடிப் போனேன். இது எல்லாம் முழுக்க முழுக்க உண்மையே. நானே அவன். அவனே நான்" என்றவாறு புலம்பிய யோகரைக் கணுற்ற தந்தையார் மஸ்கெலியாவிலிருந்து மீண்டும் யாழ்ப்பாணத்துக்கே அனுப்பி வைத்தார். இரணைமடுக் குளக்கட்டு நிர்மாண வேலைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பிறஜண் என்ற பொறியியலாளரால் இவருக்குக் 'களஞ்சியக் காப்பாளர்' என்ற பதவியில் இடமளிக்கப்பட்டது. இவரது ஆங்கிலப் புலமையால் நிர்வாகம் இலகுவாக்கப்பட்டது. தொழில் புரியும் போதே பிரார்த்தனையிலும்,



தியானத்திலும் ஈடுபடுவ தைக் காணுற்ற பிறஜண் இவரைப் பார்த்து ('GOD MAN')கடவுள் மனிதன் என்று குறிப்பிடுவார். இவர் நட்டமாமரம் வளர்ந்து மிகவும் செழிப்பாக இப்போதும் இருப்பதனால் அதனைச் சாமியார் மரம்' என்று அழைக்கப்படுகிறது. வடமொழியும் கற்றுத் தேர்ச்சிபெற்றதனால் கற்பவை அவருக்கு இலகுவில் மனனமாயிற்று. திருக்குறள், ஔவையார் பாடல்கள், தாயுமான்வர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், நமச்சிவாய மாலை, பாடுதுறை,பகவத்கீதை, உபநிடதங்கள்,பிரம்ப சூத்திர பாஷ்யம், விவிலியத்துத் திருவசனங்கள், குணங்குடி மஸ்தான் சாகீபு பாடல்கள், குர் ஆனின் வசனங்கள் என சகல மத சாராம்சங்களையும் கற்றுணர்ந்த தகைமையினால் மதநல்லிணக்கம் நாட்டில் குடிகொண்டதெனலாம் இப்போ?

செல்லப்பா சுவாமிகள் எப்படிச் சீறினாலும் யோகர் அவற்றையெல்லாம் பொறுத்து அவருடைய வாயிலிருந்து உதிர்க்கும் வாக்கியங்களையும், பாவனைகளையும் பரிபாஷைகளையும் சேமிப்பதிலேயே அதீத அக்கறைகொண்டிருந்தார். 1899 ஆம் ஆண்டு உத்தியோகம், சம்பளம், வேலை எல்லாவற்றையும் துறந்து, உற்றார், பெற்றோர், உடன்பிறந்தோர் அனைவரையும் விட்டு நீங்கியவராய் நல்லூர் தேரடியில் செல்லப்பரோடு குடியேறினார். பட்டினி வாட்டியபோதும் பாயின்றிக் கிடப்பார் . ஒருரூபாவோடு ஒரு நாளைக் கழிப்பார். சட்டி, பானைகளைக் கூட செல்லப்பர் உடைத்தெறிவார். சாப்பாடு கூட யோகருக்குக் கிடைக்காமல் போய்விடும். கீரிமலை, கதிர்காமம், மாத்தளை, கொழும்பு, மாவிட்டபுரம், வண்ணார்பண்ணை! சிவன்கோயில், சுன்னாகம், கிளிநொச்சி, கொழும்புத்துறையென பேராதனை,கம்பளை, நாவலப்பிட்டி,திருகோணமலை, மட்டக்களப்பு வரை யோகர் வாழ்வு பேறாக அமைந்தது. சுவாமிகள் தம்மைத் தரிசிக்க வருகை தந்த ஆசிரியர்களையும், ஏனைய அரச ஊழியர்களையும் பேசிக் கலைத்துவிட்டார் .காரணம் கடமை நேர காலத்தில் கடமையை உதாசீனம் செய்து கடவுளுக்குத் துரோகம் செய்ய எண்ணியதாலேயே உள்ளே வர அனுமதிக்கவில்லை. இப்பொழுது யோகர் சுவாமிகள் பகலில் வீதியுலா வருவாராக இருந்தால் பலருக்கு லீவு வழங்குமாறு பரிந்துரை செய்திருப்பார். அல்லாவிடின் பேசிக் கலைத்திருப்பார். கந்தபுராணம் படிப்பதற்காயினும் கடமையை அலட்சியம் செய்ய வேண்டாம் எனப் பலரை எச்சரித்தார்.

தன் தந்தையைக் கவனிக்காத ஓர் மைந்தன், தன் கால்களில் வீழ்ந்து கும்பிட முயன்ற போது போய்க் கொப்பனைக் கும்பிடு" என்றாராம்.

பணிதலைக் கொள்ளல் பாரினில் இன்பம்,
பணிதனைக் கொள்ளல் பாரினில் இன்பம்,
பணிமுயன்று ஆற்றில் முற்றுதல் இன்பம்,
பணி பலன் கருதாது ஆற்றுதல் பேரின்பம்"

ஒரு தொண்டானது ஒருவராலோ அல்லது பலராலோ நிறைவேற்றப்படும்போது அந்தத் தொண்டின் மறைவில் ஏதாவது ஒரு இலாப நோக்கம், அல்லது கரவுடைய நெஞ்சம் ஒளிந்திருக்குமானால் அந்தத் தொண்டு உண்மையான தொண்டாக அமையாது. கள்ளத்தனமான தொண்டாக மாறுகிறது. இது பலருக்குப் புரிவதில்லை. உதாரணமாக, நான் பொதுப் பணி ஆற்றுவதற்காக நியமிக்கப்படும் பட்சத்தில் யாவும் சிவத்தொண்டாகவே ஒப்பேற்ற வேண்டும். இல்லாத பட்சத்தில் என் குடும்பத்துக்குச் சுவறுவதாக அமையவே கூடாது. அல்லாமலும் எனது பட்டங்களோ பதவிகளோ அல்லது தராங்களையோ உறுதிப்படுத்தி பிரபல்யப்படுத்தலாகாது. சுவாமிகள் கூறியதாக , எங்கள் அப்பு' என்ற நூலில் பக்கம் 48இல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. எவ்வாறெனில் தனக்கும் தன்னைத்தொடரும் சந்ததிக்கும் நல்ல இலாபநோக்குடன் தொண்டு போல் மடங்களையும் கோயிலையும் கட்டுவதனால் என்ன பயனை இறுதியில் காண முடியும். யார் யாருக்கு எந்தெந்த வேலை கொடுக்கப்படுகிறதோ அது ஆண்டவனுக்கே காணிக்கை என்ற மனப்பாங்குடன் செய்வதே சிவதொண்டு. இதனையே அண்ட பிண்ட மெலாம் அதுவெனக்கண்டு தொண்டு செய்வதே தகுதி" எனச் சுவாமிகள் நுட்பமாகக் கூறியுள்ளார்.

வீடும் ஒரு கோயில். கோயிலைப் போன்றே வீட்டையும் தூய்மையாகப் பேணவேண்டும். கோயிலில் நைவேத்தியம் போல வீட்டிலும் பக்குவமாகக் பாகம் செய்து அன்னமிடவேண்டும் என அன்னையருக்குப் புத்தி கூறுவார். மேலும் ஒவ்வொருவரும் தத்தமது வேலைகளைத் தாமே செய்யத்தான் வேண்டும் என்பார். இந்தப் பிறப்பின் நோக்கமானது – ஏகனாகி இறை பணிநிற்றல்'இந்த நிலையில் சுவாமிகளுக்குப் பெருஞ்செல்வம் எப்போதும் இருந்ததில்லை. இல்லாத போதும் சைவ உலகத்தை சரியான பாதையில் தித்திக்க வைத்த பெரும் பேறினை யோகர் சுவாமிகள் ஆற்றியபடியால்தான் யாழ்ப்பாணம் மட்டுமல்ல உலக இந்து மதம் குறிப்பாக சைவசமயம் உயிரோடு தழைத்திருக்கிறதென்றே கூறலாம். கட்டடங்களினாலோ கோபுரங்களினாலோ விளம்பரங்களினாலோ சமயம் வளர்வதாயின் இன்றைய நிலையில் அதீத வளர்ச்சியை நாம் எட்டியிருக்க வேண்டும். எட்டியிருக்கிறோமா? எமது சமயம் யாவற்றிலுமே எளிமையாக்கப்படவேண்டும். காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்' பணத்தையோ, பதவியையோ ஒருபோதும் விரும்பியதில்லை. மாறாகப் பக்தியையே விரும்புகின்றான். மின்சாரமும், பெற்றோலும் உலகெங்கும் அறவே இல்லாமல் போகுமேயானால் மனிதர்கள் எல்லோருமே தெய்வமாகலாம். சுவாமிகள் ஒரு சதக்காசும் இல்லாமல் ஆண்டியாகவே இருந்தார். இதனாலன்றோ நல்லதோர் சமய வழிகாட்டியானார். ஆன்மிகம் கொழும்புத்துறையிலிருந்து ஹவாய் தீவு வரை உயிரோடிருப்பதென்றால் தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆன்மிக வார்ப்புகளே காரணமாகும்.

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" இந்தப் பாடல் அவரால் பாடப்பெற்ற அற்புதம் நிகழ வல்ல பாடலாகும். என்னால் அதை அனுபவிக்க முடிகிறது.

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய சித்தாந்தம். இந்த உண்மையை உணர்வாயாக. நீ கவனிக்க வேண்டியது ஒன்றுள்ளது. அதாவது தருமநெறியில் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளார். அவனே நான்! என்று சுவாமிகளின் சிந்தனை எக்காலத்துக்கும் பொருந்துவதாகும். வெப்பம் தட்பம், இன்பம்,துன்பம், இளமை, முதுமை இவைகள் தீண்டுவதால் நீ கவலைப்படாதே! இவை அனைத்தும் தோன்றி மறைவன. நாமோ தோன்றுவதும் இல்லை மறைவதும் இல்லை. உண்மை இன்மையாகாது. இன்மை உண்மையாகாது. ஓ!சிநேகிதா! நீ சிவனடியானென்று முழுமனத்தோடு நினை. எல்லா வெற்றியும் உன்னிடத்தேயுண்டு. யாவும்உன்காலடியில். ஓ! மனிதனே வானமே வந்தாலும் பூமியே வந்தாலும்! அதை ஆட்சி செய்யக் கருதாதே! சாட்சியாயிரு. சற்குரு தரிசனம் உனக்குக் கிடைக்கும். அது ஒன்றே போதும் வேறென்ன வேண்டும்?

சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம்
தாளினைப் பணி நீ தினம்"

நற்சிந்தனைப் பாடல்களை நமக்குச் சொத்தாக்கிய சுவாமிகள் அன்பர் திருநாவுக்கரசருக்கு யாவற்றையும் உபதேசித்தவராய் 24.03.1964 அதிகாலை 3.30மணியளவில் கொழும்புத்துறையில் மகா சமாதியடைந்தார். ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் ஆயிலிய நட்சத்திரத்தில் அவரது குருபூசை கொண்டாடப்படுகிறது. நாமும் செல்வோமா?


## கழிவுப் பொருள்களை அகற்றுவதும் டெங்கு அபாயத்தைக் கட்டுப்படுத்துவதும்

யாழ்.நகரத்தின் அனேக வீதிகளின் ஓரங்களில் சொப்பிங் பைகளில் மக்களால் போடப்பட்ட குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றினால் டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவலாம். சுத்தம் சுகம் தரும், 'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்' என்பவற்றை மனதில் கொண்டு பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும். இது எமது நகரம் எமது நகரத்தை நாமே சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற மனப்பான்மை எல்லோர் மனதிலும் எழ வேண்டும். அதனைவிடுத்து நாம் மாநகர சபைக்கு வரி செலுத்துகின்றோம் தானே. எனவே அவர்கள்தான் கழிவுகளை அகற்றவேண்டுமென மாநகராட்சி மன்றைக் குறை கூறாமல் எம்மாலான சிறிய அர்ப்பணிப்புக்களையாவது செய்யவேண்டும். ஒவ்வொருவரும் தங்களைச் சூழவுள்ள தங்கள் குடும்பத்தவர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்கள், மீது அக்கறை கொண்டு டெங்கு நுளம்பு பரவும் இடங்களைத் துப்புரவு செய்தல் வேண்டும். மாநகர சபையின் சுத்திகரிப்பு ஊழியர்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தாலும், அதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவர்கள் எந்த நாள்களில் எப்போது, எந்த நேரத்தில் வருவார்கள் என்பது தெரியாது. திடீரென ஒருநாள் வந்து விட்டுத் திடீரெனப் போய் விடுவார்கள். இதனால் சிலரின் கழிவுகள் அடங்கிய பைகள் அகற்றப்படாமலே இருந்து விடுகின்றன. எனவே எந்தெந்த நாள்களில், எந்தெந்த இடங்களில், எந்தெந்த நேரத்தில் வருகை தருவார்கள் என்பதை முன்கூட்டியே அறியத்தருவார்களாயின் அது பயன்மிக்கதாய் அமையும்.

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் கழிவுகளை அகற்ற வருகின்ற போது... சில நிமிடங்களுக்கு முன்னதாக அந்த வீதி வழியாகக் குப்பை குப்பை என்று ஒரு நகர சுத்திகரிப்பு தொழிலாளி சத்தமிட்டுச் செல்வார். அவரது குரலைக் கேட்ட சகலரும் உசாரடைந்து தங்கள் வீட்டுக் கழிவுப் பைகளை வீட்டு வாசலுக்குக் கொண்டு வந்து கழிவகற்றும் வாகனம் வந்ததும் அதில் ஒப்படைப்பார்கள். இந்த நடை முறையை இங்கும் கையாண்டால் எல்லோரும் தங்கள் கழிவுகளைத் தவறவிடாமல் அகற்றிவிட முடியும். மாநகராட்சி மன்றத்தையோ, பொது சுகாதார ஸ்தாபனத்தையோ குறை கூறாமல், மக்களும் ஒத்துழைக்காவிட்டால் டெங்கு போன்ற தொற்று நோய்களை ஒழிக்க முடியாது.

மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கும், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிக்கும், பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதிக்கும் வடமாகாண சுகாதார அமைச்சர் கௌரவ ப.சத்தியலிங்கத்துக்கும் இது சமர்ப்பணம்.

**இ.இராஜேந்திரா,** அரியாலை.




## பாடசாலை செல்லாத சிறுவர்களைக் கண்டறிவது அவசியம்

சமூக மேம்பாட்டில் அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் உதயனுக்கு எனது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.

அண்மையில் கடந்த 12.05.2015 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியான உதயன் பத்திரிகையின் மூன்றாம் பக்கத்தில் வெளியான பாடசாலை செல்லாத சிறுவர்களைக் கண்டறியும் திட்டம் நடைமுறை என்ற செய்தியை வரவேற்கின்றேன்.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரி, கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர் உள்ளடங்கிய குழு புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தில், பாடசாலை செல்லாத சிறுவர்களைக் கண்டறியும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டது. இதில் பாடசாலை செல்லாத 10 சிறுவர்கள் இனங்காணப்பட்டு மீண்டும் பாடசாலையில் இணைக்கப்பட்ட செய்தி வெளியாகியிருந்தது.

உண்மையில் இந்தத் திட்டம் வரவேற்கத்தக்கது. அண்மைக்காலங்களில் எமது பகுதிகளில் பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மன வேதனையளிக்கின்றது. பாடசாலை செல்லாத சிறுவர்களை இனம்கண்டு அவர்களைப் பெற்றோருடைய ஒப்புதலோடு மீண்டும் பாடசாலையில் இணைத்து அவர்கள் தமது கல்வியை மீண்டும் தொடர்வதற்கு வழிவகை செய்வது அவசியமானது.

அந்த வகையில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தை எமது பகுதியில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துவது மிகவும் பொருத்தமானது என நான் கருதுகின்றேன்.

சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்துவதால் பாதிக்கப்படுவது அவர்களின் எதிர்காலமே. எனவே ஒவ்வொரு சிறுவர்களுக்கும், பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்துவதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. ஆகவே இது தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டங்களை ஒவ்வொரு கிராமம்தோறும் முன்னெடுப்பது நன்மையளிக்கும். இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும்.

எனவே உதயன் பத்திரிகையின் வாசகன் என்ற ரீதியிலும் சமூக மேம்பாட்டில் அக்கறைகொண்டவன் என்ற ரீதியிலும் பெற்றோர்கள், பெரியோர்கள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் என அனைவரது கவனத்துக்கும் இந்த விடயத்தைக் கொண்டு வருகின்றேன். சிந்திப்போம் செயற்படுவோம். சிறுவர்களை நல்வழிப்படுத்துவோம்.

**காவலூர் றமில்டன்,**
*ஊர்காவற்றுறை.*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## தீர்க்கப்படாத மீனவர் பிரச்சினை

மீன் வளம் கொழிக்கும் கச்சதீவில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்குத் தொடர்ச்சியான போராட்டம். இலங்கைக்கே சொந்தமானது கச்சதீவு என்பது சட்ட ரீதியான முடிவு. ஆனால் பாரம்பரியமாகத் தாங்கள் மீன்பிடித்த இடம் என்ற பிடிவாதத்தில் தமிழக மீனவர்கள்.

மீனவர்களின் இந்தப் போராட்டம் தொடர்கதையாக நீண்ட காலம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியால் இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கைது செய்வதும், இலங்கை அரசு நல்லிணக்க அடிப்படையில் அவர்களை விடுவிப்புச் செய்வதும் பழைய கதையாகி விட்டது.

ஆழ்கடல் மீன்பிடி வடபகுதி மீனவர்களுக்குப் பொருத்தமற்றது. அதற்கான வளங்களோ, பாதுகாப்போ அவர்களிடம் இல்லை. ஆனால் தமிழக மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிக்கு ஏற்ற உபகரணங்களை ( இலங்கையில் தடை செய்யப்பட்ட) பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். எங்கள் கடலில் மீன்பிடிக்க அவர்களை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. மீறி அவர்கள் கடலுக்குள் வந்தால் தாக்கவும் தயாராக இருப்பதாக வடபகுதி மீனவர்கள் கூறுகிறார்கள். மீனவர்களின் பிரச்சினைகளை மீனவர்கள் தான் தீர்க்க வேண்டும் என இரு தரப்பு அரசுகளும் நழுவி விட்டன. தீர்வு காணும் பொறுப்பு மீனவர்கள் கைகளில் கொடுக்கப்பட்டது.

இரு நாட்டு மீனவர்களும் 5 கட்டப் பேச்சுக்களையும் கடந்தாயிற்று. ஆனால் தீர்க்கமான , சாதகமான முடிவுகள் எந்தப் பேச்சுக்களிலும் எட்டப்படவில்லை. இலங்கை மீனவர்கள் இந்தியாவுக்கும், இந்திய மீனவர்கள் இலங்கைக்குமாக மாறி மாறிப் பேச்சுக்களில் கலந்து கொண்டாலும் பேச்சுக்கள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன.

தமிழக மீனவர்கள், தங்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளைக் கொஞ்சம்கூடத் தளர்த்தாமல் உள்ளனர். இலங்கை மீனவர்களோ தாங்கள் எடுத்துக் கொண்ட தீர்மானத்தை மாற்றாமல் ஒரே பதிலையே கூறி வருகின்றனர். இத்தனைக்கும் மீண்டும் ஒரு பேச்சை இலங்கையில் எதிர்வரும் ஜூன் மாதம் நடத்துவதற்கு இந்திய மீனவர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரயோசனம் அற்ற பேச்சுக்களில் இனிப் பங்கேற்பது குறித்து மீனவர்கள் கலந்தாலோசித்தே முடிவு எடுக்கவுள்ளதாக வடபகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சியாக நடைபெறும் பேச்சுக்கள் வெற்றியளிக்காத நிலையில் வடபகுதி மீனவர்கள் அடுத்த கட்டமாக என்ன செய்யப் போகிறார்கள்?

இந்திய மீனவர்களோ தங்களது மீன்பிடித் தடைக்காலம் முடிந்து மீண்டும் கடலுக்குள் இறங்கியுள்ளதால் கச்சதீவை வழித்துப் போட ஆரம்பித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்கும் வகையில் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியான பல போராட்டங்களை நடத்தியும் பலனில்லை. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டால் இந்திய மீனவர்களும் தொடர்ச்சியான வேலை நிறுத்தற் போராட்டங்களை மேற்கொள்கின்றனர்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் நீண்ட நாள்களுக்குத் தடுத்து வைக்கப்படுவதில்லை. நல்லிணக்க அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர். அத்துடன் அவர்களது படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. இதனால் மீண்டும் மீண்டும் மீனவர் அத்துமீறல்கள் தொடர்வதாக வடபகுதி மீனவர்கள் குற்றச்சாட்டுகின்றனர்.

எல்லை தாண்டினால் சூடு எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இந்த அச்சுறுத்தலுக்கும் இந்திய மீனவர்கள் அச்சப்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைந்து மீன்பிடிக்கும் முறையை அவர்கள் கைவிடுவதாக இல்லை. இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் தொடரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் யாரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

இரு நாட்டு அரசுகளும் தலையிட்டால் மட்டுமே மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இல்லாவிட்டால் இதுவும் தமிழரின் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயம் போன்றே மிக நீண்ட காலத்துக்கு இழுபட்டுச் செல்லும்.

இலங்கைக் கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட இழுவைப்படகுகளைப் பயன்படுத்துவதால் மீன் வளம் அழிந்து எதிர்காலத்தில் கடல் வளமே பாழாய்ப் போகும் என்பது வடபகுதி மீனவர்களின் கருத்து.அந்தக் கருத்தில் 100 வீதம் உண்மை உள்ளது.இழுவை மடி வலைகள் கடலுக்கு அடியில் உள்ள கடல் தாவரங்கள், உயிரினங்களை அப்படியே அடியோடு அள்ளிக் கொண்டு வருகின்றது. இதனால் கடல் வளம் அழிவடைகின்றது.

இலங்கை மீனவர்களின் எதிர்கால வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொள்ளாமல் இந்திய மீனவர்களால் மேற்கொள்ளப்படும் இழுவை மீன்பிடித் தொழில் நீண்ட காலப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது அவர்களால் இன்னும் உணரப்பட்டதாக இல்லை. இழுவை மீன்பிடித் தொழிலை இந்தியக் கடல் எல்லைக்குள் மேற்கொண்டமையால் அங்கிருந்த அனைத்துக் கடல் வளங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் அங்கு கடலுணவுகளின் பெருக்கம் மிக மிகக் குறை வடைந்து போயுள்ளது. இதனால்தான் இந்திய மீனவர்கள் இப்போது இலங்கைக் கடல் எல்லைக்குள் புகுந்து மீன்பிடியை மேற்கொள் கிறார்கள். இதனை இந்திய அரசு ஆராய்ந்து தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டும். இந்திய மீனவர்கள் மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அத்துடன் இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண் டாத விதத்தில் கடலுக்குள் பாதுகாப்பு ஏற்படுகளையும் பலப்படுத்த வேண்டும். ஒட்டுதொத்த மீனவர் சமுதாயமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவுகளை இரு நாட்டு அரசுகளும் எடுக்க வேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழில் தேசிய கீதம் இசைத்தல்; முரண்பாடுகள் மேலெழும் போக்கு...!

எதற்காக, தேசிய கீதத்தைத் தமிழில் ஒலி பரப்பினாய் என்று கேட்டு, சுமார் ஐம்பது பேர் கொண்ட சிங்கள மாணவர்குழு, தம்மைத் தாக்கியதாக, கிழக்கு மாகாணம், செங்கலடிப் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும் குடும்பத்தரான பத்தக்குட்டி சுமன், பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித் திருக்கிறார்.

செங்கலடி வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டிருந்த வேளை, பொலிஸார் அங்கு சென்று அவரிடம் வாக்குமூலம் பெற்றனர். தம்மைத் தாக்கியவர்களை அடையாளம் காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வில், தேசிய கீதம் ஒலிபரப்பும் ஏற்பாட்டைத் தாம் செய்யவில்லை என்று, தாம் கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாத கூட்டம் தம்மைக் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் அவர் பொலிஸாரிடம் கூறினார் என்பது தகவல்.

நாட்டின் தேசிய கீதத்தைத் தமிழில் பாடக்கூடாது என்று சட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் புதிய அரசு பதவிக்கு வந்ததன் பின்னர்கூட, நாட்டின் சகல மக்களுக்கும் பொதுவான தேசிய கீதத்தை, தமிழர் பிரதேசங்களில் தமிழில் இசைக்கக்கூடாது என்று தடுக்கும், தவிர்க்கும் ஊத்தைத் தனம் மேல் உயர்ந்து வருகிறது.

நாட்டுக்குச் சமஷ்டி ஆட்சியே உகந்தது என்று (பகிரங்கமாகக்) கூறிவந்த எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க, தலையைக் கீழே வைத்து, காலை மேலே வைத்துத் தனிச் சிங்களச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து இனவாதத்தில் மூழ்கித் திளைத்தார் என்பது இந்த நாட்டின் கரிய வரலாறு.

அதன் கூறுகளில் ஒன்றே, தேசிய கீதத்தை, சிங்களத்தினை அடுத்தும் தமிழில் இசைக்க முடியாது என்ற 'காட்டுமிராண்டிக்' கட்டுப்பாடு.

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில், தேசிய கீதத்தைத் தமிழில் இசைக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு எந்த வகையிலும் பொருத்தமற்றது.

தமிழ் மக்களின் வாக்குகளால் பதவிக்கு வந்த, புதிய ஜனாதிபதியின் ஆட்சியில், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களின் பிரதேசங்களில் அவர்களின் மொழியில் தேசிய கீதம் இசைப்பதற்கு உத்தியோகபூர்வமாகத் தடை விதிப்பது ஜனநாயகம் அல்ல. அது இனப்பாகுபாட்டை அத்திபாரமாகக் கொண்ட ஹிட்லரின் நாஸிஸத்தை ஒத்ததே.

தேசிய கீதத்தை தமிழ்மொழியில் இசைக்க முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பங்குபற்றிய, யாழ்.மாவட்டச் செயலக நிகழ்வில், தேசிய கீதம் வாத்திய இசையில் மட்டுமே ஒலிக்க விடப்பட்டிருந்தது.

சிங்கள இனவாதக் கட்சிகள், தேசிய கீதத்தை தமிழில் இசைக்க முடியாது என்று கோஷம் எழுப்பின. அதனை உள்விழுங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்தில் வாத்திய இசையில் அது ஒலிக்கவிடப்பட்டது.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில், இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பொதுவான தேசிய கீதத்தை, தமிழில் இசைக்க முடியாது என்று தவிர்ப்பது எந்த வகை ஜனநாயகம்...?

தேசிய கீதத்தை, தமிழ்ப்பிரதேசங்களில் தமிழில் இசைப்பதே உகந்தது என்று கூறிய அமைச்சர் ராஜித சேனரத்ன, வடக்கு கிழக்கில் அவ்வாறே செய்யுங்கள் என்று கல்முனையில் கூறியிருந்தார்.

தேசிய கீதத்தைத் தமிழில் இசைப்பதனை விரும்பாத தெற்கின் இனவாதிகளுடன் இணைந்து, அரச தரப்பும் ஒத்தூதுமாயின், அது மீண்டும் ஓர் இனக்கலவரத்துக்கு வழிவகுப்பதாக அமையுமோ? யாருக்குத் தெரியும்......?

# பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசின் கைகளில்

● வந்தியத்தேவர்

> “
> மாணவி சந்தியாவின் மீது மேற்கொள்ளப்பட்ட கூட்டுவன்புணர்வு எமது மண்ணில் இடம்பெற்ற இறுதிக் கொடுமையாக அமைய வேண்டும். இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடும் நபர்களைப் பாதுகாக்கும் வகையில் தாங்கள் செயற்படப் போவதில்லை என்ற உறுதியை இந்தப் பகுதிகளில் உள்ள சட்டத்தரணிகள் கடைப்பிடிப்பதுடன் ஏனைய பகுதிகளில் உள்ள சட்டத்தரணிகளும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

போர், சுனாமி என்ப வற்றைத் தொடர்ந்து வடக்கை உலுக்கியெடுத்துள்ள துயரச் சம்பவம் புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சந்தியாவின் அகாலமரணம். படுமோசமான கயவர் கள் குழுவினால் மாணவிவன் புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படு கொலை செய்யப்பட்டுள்ளார். ஒரு சமயம் தமிழ் மக்களை அழிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இடம்பெற்ற போரின் போது மக்களைப் பாதுகாக்க வேண் டியவர்களே பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்து கொன்று புதைத்த சம்பவங்களும் அரசு அது பற்றி நடவடிக்கை எடுக்க விரும் பாமல் சம்பந்தப் பட்டவர்களைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டிருந்ததும் உலகறிந்த உண்மை. அது ஓர் இனத்தையே அழிக்க இன்னொரு இனம் நடத்திய கொடூரம்.


போர் முடிந்த பின்னர் பெண்கள் மீதான வன்புணர்வுச் சம்பவங்களும் அதைத் தொடர்ந்த கொலைச் சம்பவங்களும் எமது பகுதிகளில் அடிக்கடி இடம்பெறத் தொடங்கியுள்ளதும், எமது பகுதியைச் சேர்ந்தவர்களே பெண்களைப் பாலியல் வல்லுற வுக்கு உட்படுத்திக் கொலை செய்வதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. பாலியல் கொலைகள் தொடர்பான பல வழக்குகளை விசாரணை செய்து தண்டனை வழங்க நீண்ட காலம் எடுக்கிறது. இதனால் இது போன்ற சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது பெண்கள் அமைப்புகள் ஏதோ ஊர்வலம் ஒன்றை நடத்தி ஒரு மனு வையும் கையளித்துவிட்டு கண்டனம் தெரிவித்துவிட்டதாகத் திருப்திப்படுகின்றன. பின்னர் அந்தச் சம்பவமும் மறக்கப்பட்டு விடுகிறது. தற்சமயம் மாணவி சந்தியாவுக்கு நிகழ்ந்த கொடுமை பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது. தீவகப் பகுதிகள் மட்டுமன்றி குடா நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமன்றி பொது மக்களும் நீதி கேட்டுக் கிளர்ந் தெழுந்துள்ளனர். புங்குடுதீவில் உள்ள அனைத்து நிறுவனங்களும் பலத்த கண்டனத்தைத் தெரிவித்து ஒன்றுபட்டுப் போராட்டத்தில் இணைந்துள்ளன. நெடுந்தீவு நயினாதீவு மற்றும் ஏனைய தீவகப் பகுதியில் உள்ளவர்களும் குறித்த மாணவிக்கு நிகழ்ந்த கொடூரத்துக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளனர். ஒட்டுமொத்தமாக ஒரு கொடூரப் பாலியல் கொலைக்கு இத்தகைய எதிர்ப்புப் போராட்டம் வெடித்தமை இதுவே முதல்தடவையாகும். வசதி குறைந்த கஷ்டப்படும் நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களே கூடுதலாக இதுபோன்ற வன்முறைகளுக்கு ஆளாகுபவர்களாகக் காணப்படுகின்றார்கள். சிறுமிகள், விவரம் புரியாதவர்கள், நடுத்தர மற்றும் முதுமையடைந்தவர்கள்கூட பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் எவரென்றில்லாமல் தந்தை மகளைப் பலாத் காரம் செய்வதும், உடன் பிறந்த வனே தனது சகோதரியைச் சீரழிப்ப தும், பெண்களை ஏமாற்றி அவர் களை வன்முறைக்கு உட்படுத்து வதும், காதலிக்க மறுப்பவளை நண் பர்கள் சகிதம் கடத்திச் சென்று துன் புறுத்திக் கொன்றுவிடுவதுமாக இது போன்ற வன்முறைகள் இடம்பெறுகின்றன. பொலிஸாரிடம் முறையிடும் பட்சத்தில் அவர்களும் இது குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்வதாக இல்லை. மாணவி சந்தியாவைக் காணவில்லைஎன்று பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்ட போது உங்களது மகள் விருப்பத்துடன் எவருடனாவது சென்றிருப்பார் விடிந்ததும் பார்த் துக் கொள்ளலாம் எனசந்தியா வின் தாய்க்கு பொலிஸாரால் கூறப் பட்டதாகவும் தகவல்கள் உள்ளன. பொலிஸாருக்கான அதிகாரம் மாகாண அர சிடம் இருந்திருந்தால் அந்தத் தாய்க்கு இப்படியான ஒரு பதில் கிடைத்திருக்குமா?

மாணவி சந்தியாவின் மீது மேற்கொள்ளப்பட்ட கூட்டுவன்புணர்வு எமது மண்ணில் இடம்பெற்ற இறுதிக் கொடுமையாக அமைய வேண்டும். இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடும் நபர்களைப் பாதுகாக்கும் வகையில் தாங்கள் செயற்படப் போவதில்லை என்ற உறுதியை இந்தப் பகுதிகளில் உள்ள சட்டத்தரணிகள் கடைப்பிடிப்பதுடன் ஏனைய பகுதிகளில் உள்ள சட்டத்தரணிகளும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். நீதித்துறை இவ்வாறான வழக்குகளைத் தவணையின்றித் தொடர்ச்சியாக நடத்தி விசாரணைகளை மேற்கொள்வதுடன் உண்மையான குற்றவாளிகளை இனம்கண்டு அதி உச்சத் தண்டனையாக மரணதண்டனையை வழங்க வேண்டும். இதன் மூலம் பெண்கள் அச்சமின்றி வாழக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

இதுபோன்ற வன்முறைக் கொலைகளுக்கு உள்ளாகும் சம்பவங்களுக்குச் சென்று தமது அனுதாபத்தைத் தெரிவித்து விட்டு, பொலிஸார் கடும் நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வெறும் கண்டன அறிக்கைகள் வெளியிடுவதை விடுத்து நாடாளுமன்றத்தில் இது போன்ற சம்பவங்களையும் குற்றவாளிகள் விடுதலையாகி வருவதையும் அதனால் மீண்டும் மீண்டும் நிகழக்கூடிய கொடூரங்களையும் தகுந்த சான்றுகளுடன் எடுத்துக் காட்டி எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாதவாறு சட்டத் திருத்தங்களையும் சாவுத் தண்டனையையும் வலியுறுத்தி நீதித்துறைக்கு வலுவூட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து குரல் கொடுப்பது அவசியம்.

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவியின் வன்புணர்வுக் கொலைக்குக் காரணமாக இருந்தவர்களுக்கு சாவுத்தண்டனை வழங்க வேண்டும் என சட்டத்துறையை வற்புறுத்தும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதும் அவசியமானதும்கூட. இதுபோன்ற தண்டனைகள் வழங்கப்படுவதன் மூலம் இவ்வாறான கொடூரங்களுக்கு முடிவு கட்டலாம் என்ற நம்பிக்கை பொதுவாக எல்லோரிடத்திலுமே இருக்கிறது. இஸ்லாமிய ஷரியத் சட்டத்தில் கூட இப்படியான குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளுக்குப் பிணை மறுக்கப்பட்டாலும்கூட அது, நியாயமான என்பதும் பொதுமக்களின் கருத்தாகக் காணப்படுகின்றது.

இதுபோன்ற பாலியல் படுகொலைச் சம்பவங்களில் இருந்து பெண்களையும் சிறுமிகளையும் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு அரசுக்கும் நீதித்துறைக்கும் உள்ளது. மக்களின் கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டு மௌனமாக இருப்பின் குற்றவாளிகள் மேன்மேலும் குற்றச்செயல்களில் ஈடுபட அனுசரணை வழங்குவதாகவே அது அமையும். எனவே நீதித் துறையும் சட்டத்தரணிகள் சங்கமும் உறுதியான பரிந்துரையை அரசுக்கு வழங்க முன்வருவதுடன் மக்க ளிடத்தில் கூடுதல் விழிப்புணர்வை யும் ஏற்படுத்த வேண்டும்.



# ‘முடிந்தால் நிரூபியுங்கள்’ மஹிந்தவின் கொக்கரிப்பு

## மறியலுக்குச் செல்வோருக்கு எப்படி திடீரென வருகிறது அந்தச் சுகவீனம்?

● வீ.எஸ்.ரி.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதியன்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த நிலையில் தமக்குத் தோல்வி நிச்சயமெனக் கணித்துக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, தமது தோல்விக்கு சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்கு வாக்களிக்காது தம்மைப் புறக்கணித்தமையே காரணம் என கோபாவேசத்துடன் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. தோல்வியால் ஏற்பட்ட மனக்கொதிப்பே, ராஜபக்ஷவின் அந்தவேளைய ஆத்திர உணர்விலான அந்தக் கருத்து வெளிப்பாட்டுக்கான காரணியாக அமைந்திருக்கக் கூடும்.

அதற்குச் சில நாள்கள் கழித்து தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்டிருப்பினும், தமக்குக் கிட்டிய வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் தமக்கு இன்னமும் சிங்கள மக்களது ஆதரவு பெருமளவில் இருப்பதாக அவர் தமது வழமையான கர்வத்துடன் கருத்து வெளிப்படுத்தி இருந்தார். தேர்தல் தோல்வி காரணமாக தமது தரப்பு ஆதரவாளர்கள் தம்மைவிட்டு விலகிச் சென்று விடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வுடன் வெளிப்படுத்தப்பட்ட கருத்தே அது என்பதை அந்த வேளையில் பொது மக்களால் உணர முடிந்தது.

பின்னர் நாள்கள் கழிந்து செல்லச் செல்ல, தமக்கான ஆதரவு அலை குறித்து நாடிபிடித்துப் பார்க்கும் விதத்தில் தமது ஆதரவாளர் தரப்புக்களைச் சந்தித்து மைத்திரியின் நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் குறித்து விமர்சிக்கும் போக்கை அவர் முன்னெடுத்து வந்தார். இத்தகைய பின்னணியில்தான் மஹிந்தவின் தலைமையிலான அரசின் ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்ட அரச தரப்பு முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவ்வேளைய அரச உயர் அதிகாரிகளுக்கு எதிராக மைத்திரி அரசு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக பல தரப்புக்கள் மத்தியிலிருந்தும் கண்டன விமர்சனங்கள் தலைதூக்கின.

### அதிரடி ஆரம்பம்

அதுவரை தனது செயற்பாடுகளை அடக்கி வாசிக்கும் போக்கில் நிதானமாக, குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை தோண்டிப் பார்த்து, நோண்டிப்பார்த்துச் சேகரித்து வந்த மைத்திரி அரசு, அண்மைய நாள்களாக தனது அதிரடி நடவடிக்கைகளை ஆரம்பித்து, சுறுசுறுப் புடன் முன்னெடுத்து வருகிறது. முன்னைய அரசின் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி அரச உயர் அதிகாரிகளும்கூட விசாரணைக்கு அழைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர்.

மைத்திரி அரசின் இத்தகைய அதிரடிச் செயற்பாடுகளைச் சற்றும் எதிர்பார்த்திருக்காத மஹிந்த, தமது தரப்பினர் மட்டுமன்றி, தாமும்கூட இதனால் கடும் பாதிப்பைச் சந்திக்க நேரிடலாம் என்ற அச்ச உணர்வில் தற்போது தமது வழமையான அதிரடிக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். புலம்பெயர் தமிழர்களது தேவைக்காக மைத்திரி அரசு தம்மீது ஏதாவதொரு குற்றச்சாட்டைச் சுமத்தித் தம்மைக் கைது செய்ய முயல்வதாக அதிரடியான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். அத்தோடு தமது வழமையான இறுமாப்புப் போக்கில், இதுவோர் தமிழர்களது பழிவாங்கல் முயற்சி எனவும், இத்தகைய அச்சுறுத்தல்களுக்குத் தாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை எனவும் கூளுரைத்துள்ளார்.

### ஊடகங்களின் பரபரப்புச் செய்தி கள்

அண்மைய நாள்களில் தினசரி செய்திப் பத்திரிகைகளைக் கையில் எடுத்தாலே,முதற்பக்கத்தில்கொட்டை எழுத்துக்களில் வெளிவரும் செய்திகள் பெரும்பாலும் இலங்கை அரசியல் நிலைவரம் குறித்த செய்திகளாகவே அமைந்து வருகின்றன.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸிலின் விளக்கமறியல் நீடிப்பு, சஜின் வாஸ் எம்.பி. கைது,முன்னாள்அமைச்சர்ஜோன்ஸ்டனுக்கு பிணை மறுப்பு, ஞானசார தேரரையும், நௌசர் பௌசியையும் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு, கோத்தபாயவிடம் ஆறுமணி நேரம் விசாரணை என்பவை போன்ற பரபரப்புச் செய்திகளே ஊடகங்களை அலங்கரிக்கின்றன.

இத்தகையோர் மீதான விசாரணைகள் முடிவுற்று, அவர்கள் மேற்கொண்டதாகக் கூறப்படும் செயற்பாடுகள் குறித்து சாட்சிகள் மூலமாகவோ, ஆவணங்களின் அடிப்படையிலோ நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் குற்றாளிகள் தான் என நீதிமன்றம் முடிவு செய்யுமானால், அவர்களது குற்றங்களது தன்மைக்கேற்ப அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். அமைச்சர்கள் என்றல்லாது, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களது தலைவர்கள், கூட்டுத்தாபனங்களது தலைவர்கள் என பல தரப்பினர் இதில் அடக்கம்.

அவ்விதம் விசாரணைக்கு என அழைக்கப்படுவோர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்த ஊடகச் செய்திகளை வாசிக் கும் போது மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்பட வேண்டியுள் ளது. நாட்டு மக்களது நிதியை முறைகேடான விதத்தில் கொள் ளையடித்து, சட்டத்தை ஏமாற்ற முயன்ற இர்களது தகிடுதத்தங்கள் குறித்து ஆட்சி அதிகாரத்திலிருந்த மஹிந்த அறிந்திருக்கமாட்டார் என எவராவது வாதித்தால், அதை யெண்ணிச் சிரிப்பதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்? மறுபுறம், மஹிந்தவே தமக்கு வாய்த் திருந்த நிறைவேற்று அதிகாரம் என்ற ‘அலாவுதீனின் அற்புத விளக்கை’ வைத்துக்கொண்டு தமது குடும் பத்தவர்களது வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ளும் விதத்தில் செயற்பட்டதாகவும், ஆடம்பர சுக போக வாழ்க்கை மேற்கொண்டதாகவும் எழும் குற்றச்சாட்டுக்கணைகளுக்கு அவரால் ஏற்றுக் கொள்ளத்தக்க பதிலெதனையும் கூறஇயலாது என்று அவருக்கெதிரான தரப்பினர் ஒரு புறம் விமர்சித்து வருகின்றனர்.

மஹிந்தவோ தமது வழக்கறிஞர் அனுபவத்தை வைத்துக்கொண்டு சாக்குப் போக்குக் காட்டி, ‘எங்கே, முடிந்தால் நிரூபியுங்கள்’ பார்க்கலாம் எனக் கொக்கரித்து வருகின்றார். இவற்றையெல்லாம் நோக்கும்போது, ‘ஆற்றில்போற தண்ணீரை அண்ணை குடி; தம்பி குடி’ என்ற விதத்தில் ஆளுக்காள் தத்தமக்கு வாய்த்திருந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, சந்தர்ப்பத்தைச் சாதகமாக் கிக்கொண்டு நாட்டு மக்களது பணத்தைச் சூறையாடி ஏப்பம் விட்டுள்ளனரெனவே எண்ணத் தோன்றுகின்றது.

### சிறையைத் தவிர்க்க திடீர் சுகவீனம்

இது விடயத்தில் மற்றொரு வேடிக்கை என்னவெனில், குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்படும் பெரிய புள்ளிகளுக்கு சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் சென்றதுமே திடீரென உடல் நலமின்மை ஏற்பட்டுவிடுவதாகும். அதனைக் காரணம் காட்டி சிறை வாழ்க்கையைத் தவிர்த்து வைத்தியசாலைகளில் சென்று படுத்துக் கொள்கின்றனர்.

இத்தனை காலமும் மற்றயவர்கள் அறியாது, எவ்வாறு இவர்களால் தமது ஊழல் மோசடிகளை மேற்கொள்ள முடிந்தது என்ற கேள்வியொன்று இந்த இடத்தில் எழுவது நியாயமே. இத்தகையோரது திருவிளையாடல்கள் குறித்து பல தரப்பினர் ஏற்கனவே அறிந்திருந்த நிலையிலும் அதனை எவரிடம் வெளிப்படுத்துவது என்ற தயக்க மும் அச்சமும் அவர்களுக்கு ஏற்ப டுவது நியாயமே. நாட்டின் அதியுயர்



அதிகாரத் தரப்புக்கு சாதாரண தரத்தைச் சேர்ந்த ஒருவரால் இத்தகைய செயற்பாடொன்று குறித்து வெளிப்படுத்தப்படுமானால் அதற்கு உரிய நடவடிக்கை எதுவுமின்றி பூசி மெழுகப்படுவது மட்டுமன்றி எய்தவரையே திருப்பி வந்து தாக்கும் ‘பூமராங்’ ஆயுதம் போன்று முறைப்பாடு செய்பவருக்கே அது பாதிப்பாக அமையும் என்பதை சாதாரண தரத் தரப்பினர், அறிந்து வைத்திருந்தனர்.

அந்த அச்சம் காரணமாகவே, இத்தகையோரது சட்ட பூர்வமற்ற ஊழல் செயற்பாடுகள் குறித்து வாய்திறக்க இயலாது . அந்தச் சாதாரண தரத் தரப்பினர், இடம்பெறும் அநியாயங்கள் குறித்து மனதுக்குள் புழுங்கி, மனவேதனைப்படுவதுடன் ஒதுங்கிக் கொண்டனர். மஹிந்தவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரிபாலவே ஒரு வேளை தான் தேர்தலில் தோல்வியுறநேர்ந்திருக்குமானால் தமது உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்கும் எனக் கூறியதில் இருந்து அந்த வேளைய அரசியல் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ளலாம். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு நேர்ந்த கதி, ஊழல்கள் குறித்து முறைப்பாடு செய்ய எண்ணியோருக்கும், முயன்றோருக்கும், வயிற்றில் புளியைக் கரைத்து அவர்களை மௌனிகளாக்கியிருக்கலாம்.

இந்த நிலையில்தான் சோதிடர்கள் கொடுத்த கயிறை விழுங்கிக் கொண்டு மஹிந்த உரிய வேளைக்கு முன்பதாகவே ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தார். இத்தனை காலமும் அரச உயர்மட்ட பெருச்சாளிகளது ஊழல் செயற்பாடுகளால் மனம் நொந்து, சினம் கொண்டிருந்த பொது மக்களுக்கு தமது அதிருப்தியை வெளிக்காட்ட அது ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது. அதனைப் பயன்படுத்தியே அவர்கள் மஹிந்தவுக்கு வாழ்க்கையில் மறக்க இயலாததொரு பாடத்தைக் கற்றுக் கொடுப்பதில் வெற்றிகண்டனர்.

நாட்டின் வாக்காளர்கள் தம்மைப் புறக்கணித்தது மட்டுமன்றி, அதுவரை காலமும் தம்முடன் ஒட்டியிருந்து, தமது அதிகாரத்தின் வலிமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தான்தோன்றித்தனமாக, தாம் விரும்பிய விதத்தில் ஊழல் மோசடிகளை மேற்கொண்ட தமது தரப்பினரில் பலர் ‘இறந்துபோன மாட்டின் உடம்பிலிருந்து உண்ணிகள் கழன்று போனமை’போன்று தம்மை விட்டுத்தூர விலகிச் சென்றதைக் கண்டு மஹிந்த விழித்துக் கொண்டார். ஒரு புறம் கவலையும் மறுபுறம் ஆத்திரமும் மேலிட மஹிந்தர் ஆவேச மஹிந்தரானார். ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது’ என்று சங்க காலப் புலவர் கனியன் பூங்குன்றனார் குறிப்பிட்டமை போன்றதொரு நிலைக்கு மஹிந்த உட்பட நேர்ந்தமை, அவரது ஆட்சியில் அநியாயங்களுக்கும் அவமதிப்புக்களுக்கும் உட்பட்டு மனது புழுங்கிய தரப்பினர்களுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கும் என்பது உண்மையே. ஆயினும், தோல்வியால் துவண்டு போய், அரசியல் அரங்கிலிருந்து ஒதுங்கிக்கொள்வார் என எதிர்வு கூறப்பட்டமைக்கு முற்றிலும் மாறாக, ‘விட்டேனா பார்’. என்ற விதத்தில் மீண்டும் அரசியலில் தலையெடுக்க மஹிந்த தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

மொத்தத்தில், ‘குடை நிழலிலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்’ நடைமெலிந்தோராய் நண்ணினும் நண்ணுவர்” என்று சங்க காலப் புலவரொருவர் பாடி வைத்த பாட்டு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் இன்றைய வாழ்வியல் நிலைக்கு முற்றிலும் பொருத்தமானது எனக் கொண்டால் அதில் தப்பேதுமில்லை.

# சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 2 | 1 | 9 | 8 | 6 | 7 | 4 |
| 1 | 7 | 6 | 3 | 4 | 2 | 5 | 8 | 9 |
| 9 | 8 | 4 | 5 | 7 | 6 | 1 | 3 | 2 |
| 2 | 6 | 3 | 4 | 1 | 9 | 7 | 5 | 8 |
| 7 | 9 | 5 | 8 | 6 | 3 | 2 | 4 | 1 |
| 8 | 4 | 1 | 7 | 2 | 5 | 9 | 6 | 3 |
| 4 | 3 | 7 | 2 | 5 | 1 | 8 | 9 | 6 |
| 6 | 1 | 8 | 9 | 3 | 7 | 4 | 2 | 5 |
| 5 | 2 | 9 | 6 | 8 | 4 | 3 | 1 | 7 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 8 | | 5 | | | | |
| 2 | | | 3 | | | 5 | | 9 |
| 5 | 3 | 6 | | 1 | | | | 2 |
| 6 | | | 5 | | | 8 | | |
| 4 | 8 | | | 7 | | | 9 | 5 |
| | | 7 | | | 4 | | | 6 |
| 8 | | | | 9 | | 7 | 4 | 1 |
| 1 | | 5 | | | 7 | | | 8 |
| | | | | 6 | | 9 | | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சீத்தாப்பழம் சாப்பிடுவதால் நன்மைகள்!

*(நேற்றைய தொடர்ச்சி)*

### இரத்த அழுத்தத்துக்கு

சீத்தாப்பழத்தில் உள்ள சிறந்த உடல்நல பயன் – அதிலுள்ள பொட்டாசியம் மற்றும் மக்னீஷியம். இந்த இரண்டுமே உங்கள் உடலில் உள்ள இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைக்க உதவும்.

### கொலஸ்ட்ரோல் அளவுகள்


சீத்தாப்பழத்தில் நியாசின் மற்றும் நார்ச்சத்து அதிகளவில் உள்ளது. இவைகளால் கொலஸ்ட்ரோல் அளவுகள் குறையும்.

### உங்களுக்கு இரத்த சோகையா?

சீத்தாப்பழத்தில் இரும்புச்சத்து உள்ளதால் இரத்த சோகைக்கும் அது சிகிச்சையளிக்கும்.

### வாய் ஆரோக்கியம்

சீத்தாப்பழம் பற்களுக்கு மிகுந்த பயன்களை அளிக்கிறது. பல் மற்றும் ஈறு வலிக்கு எதிராக சீத்தாப்பழத்தின் தோல் உதவுகிறது.



### கண்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்

சீத்தாப்பழத்தில் ரிபோ, ப்ளேவின் மற்றும் விற்றமின் சி அடங்கி யுள்ளன. இவை இரண்டுமே உங் கள் கண்களுக்கு நல்லதாகும். ப்ரீ ராடிக்கல்களை அழிக்க இது உதவு வதால், நல்ல கண்பார்வையை பராமரிக்க இது உதவிடும்.

### கீல்வாதத்தைத் தடுக்கும்

சீத்தாப்பழத்தில் மக்னீசியம் உள்ளதால், அது உடலில் உள்ள நீரின் அளவை சரிசமமாக்கும். இது சீத்தாப்பழத்தின் முக்கியமான உடல்நல பயனாகும். இதன் காரண மாக மூட்டில் இருக்கும் அமிலங்கள் வெளியேற்றப்படும். இதனால் கீல்வாதம் வராமல் தடுக்கப்படும்.

### காலை குமட்டலை தடுக்கும்

கர்ப்பிணிப் பெண்களுக்கு இது மிகவும் நல்லதாகும். அதே போல் பிரசவத்திற்கு பின்பு உடல் எடையை குறைக்கவும் இது உதவும். முக்கிய மாக, காலையில் ஏற்படும் குமட் டலை இது நீக்கும். கர்ப்ப காலத்தில் ஏற்படும் குமட்டல், உணர்வின்மை, பசி, மனநிலையில் ஏற்ற இறக்கம் போன்றவைகளுக்கு எதிராக போராடும்.

### தோல் புற்றுநோயை அண்ட விடாது

சீத்தாப்பழத்தில் உள்ள அசிடோ ஜெனின், தோல் புற்றுநோய்க்கு அறிகுறியான சரும சிதைவை நீக்கும். இதனால் சரும புற்று நோயின் தாக்கத்தில் இருந்து விடுபடலாம்.



## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 40–50 | 30 |
| கத்தரி | 70 | 50 | 70–80 | 80 | 50–60 | 80 | 80 | 40 |
| கரட் | 100 | 140 | 100–140 | 120 | 130–140 | 180 | 180 | 170 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40–50 | 60 | 60 | 35–40 |
| பயிற்றை | 160 | 120 | 160 | 140 | 120–140 | 120 | 100 | 90 |
| பாகல் | 100 | 120 | 120 | 140 | 140–160 | 140 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | – | – | 80 | 50–60 | – | 100 | 70 |
| பெ.வெங்காயம் | 130 | 120 | 140 | 120 | 120 | 140 | 140 | 110 |
| சி.வெங்காயம் | 100 | 100–120 | 50–100 | 100 | 100–110 | 120 | 120 | 90 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 20–30 | 50 | 60 | 15 |
| தக்காளி | 70 | 120 | 80 | 140 | 80–90 | 120 | 70 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 50 | 40–50 | 40 | 60 | 25–30 |
| கீரை | 40 | – | 30–50 | 10–20 | 20–30 | 50 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 30 | 40 | 20–30 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 40 | 60 | 60 | 80 | 40–60 | 60 | 60 | 50 |
| புடோல் | 70 | 60 | 60 | 60 | 80–100 | 40 | 80 | 50–60 |
| கோவா | 60 | 80 | 60 | 80 | 40–60 | 100 | 80 | 35 |
| வெண்டி | 100 | 60 | 60–80 | 80 | 100–120 | 120 | 80 | 60 |
| போஞ்சி | 140 | 140 | 160 | 140 | 140 | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 160 | 180 | 160 | 180 | 160–200 | 200 | 180 | 200 |
| தேங்காய் | 60 | 30–40 | 60 | 50–60 | 40–60 | 60–70 | 35–50 | 45 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 110 | 90–100 | 110 | 120 | 110–120 |
| தேசிக்காய் | 180 | 140 | 180 | 160 | 130–140 | 180 | 160 | 120 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 60 | 120 | 50 | 140 | 70–80 | 120 | 120 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 100–120 | 120 | 180 | – |
| முருங்கைக்காய் | 400 | 200 | 250–400 | 200 | 250–300 | 400 | 200 | 270 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 700 | 600 |
| நண்டு | 200 | 400 | 300 | 300 | 200 | 350 |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | 500 | 450 |
| பாரை | 500 | 600 | 500 | 600 | 600 | 400 |
| சுறா | 450 | 500 | 500 | 650 | 600 | 450 |
| சீலா | 200 | 400 | 400 | 400 | 400 | 300 |
| விளை | 450 | 400 | 400 | 300 | 400 | 250 |
| சூரல் | 200 | 400 | 350 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 300 | 350 | 350 | 350 | 400 | 300 |
| கிழாக்கன் | 600 | 700 | 350 | 400 | 200 | 450 |
| ஒரா | 300 | 300 | 350 | 350 | 400 | – |
| திரளி | 100 | 250 | 250 | 250 | 200 | – |
| நகரை | 100 | 300 | – | 300 | 150 | – |
| சூடை | 100 | 250 | 300 | 120 | 150 | 100 |
| ஒட்டி | 100 | 250 | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 100 | 300 | 300 | 250 | 200 | 140 |
| பாலை | 300 | 300 | 250 | 400 | 350 | – |
| வாழை | 300 | 200 | – | 300 | – | – |
| கொய் | 80 | 200 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 100 | 300 | 220 | 250 | 300 | 200 |

## நாளை

**வைகாசி-07**

**வியாழக்கிழமை 21.05.2015**

திதி: திருதியை மு.ப. 07.54 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.11.26 வரை
சுபநேரம்: 07.22-08.52 வரை
இராகுகாலம்: 01.22-02.52 வரை
சதுர்த்தி விரதம்


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சரியான வழியில் முன்னேறு

மற்றவர்களுக்கு நன்மை செய்ய மனதால் நினைத் தாலும் தர்மம் தான். அது போல தீமையை நினைத் தாலே பாவம் தான். செய்த தவறுகள் உனக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்பதைப் புரிந்து கொள். எனவே துன்பத்தையும் வாழ்த்தப் பழகு. அளவில் லாத நேர்மையும், அக்கறையும் கொண்டவர்கள் வாழ்வில் சாதனை புரியும் தகுதி பெறுகிறார்கள். முறையற்ற செயலைச் செய்து விட்டதாக நினைத் தாலும் திரும்பிப் பார்க்க வேண்டாம். சரியான வழியில் முன்னேறிக் கொண்டிரு.

# திருமணங்களில் ஜாதகப் பொருத்தங்களின் முக்கியத்துவம்





புள்ளிகளாவது பொருந்தியிருக்க வேண்டும். ஒரு வேளை, பொருந்திய புள்ளிகள் 27 இற்கு மேலாக இருந்தால், அது தான் சிறந்த பொருத்தமாக இருக்கும். ஒரு வேளை, 18 புள்ளிகளுக்கு குறைவான பொருத்தம் இருந்தால், அந்த திருமணம் நடக்க அறிவுறுத்தப் படமாட்டாது.

ஜாதகப் பொருத்தம் பார்க்கும் போது கீழ்கூறிய குணங்களையும் கருத வேண்டும் வர்ணா வஷ்யா தாரா யோனி க்ரஹ மைத்ரி கன் பகூட் நாடி. ஒரு ஜோசியக்காரர் கூறியதன் படி, 'திருமணம் பேரின்பமாக அமைய வேண்டுமானால் அதற்கு முதல் படி ஜாதக பொருத்தமாகும். 36 குணங்களில் குறைந்தது 50 வீதமாவது பொருந்தியிருந்தால் தான் அது நல்ல சம்பந்தமாக மாறும். இது போக, மாங்கல்ய தோஷம் (செவ்வாய்க் கிரகத்தின் தீய தாக்கங்கள்), கால சர்ப்ப தோஷம் (அனைத்து கிரகங்களும் ராகு மற்றும் கேதுவிற்கு நடுவே இருக்கும்) போன்றவைகளையும் சரியாக கவனிக்க வேண்டும். அப்போது தான் சந்தோஷமான சம்பந்தம் ஏற்பட்டு வெற்றிகரமான திருமணம் முடியும்.'

அதனைச் சார்ந்திருக்க வேண்டுமா?

காதல் திருமணங்கள் அதிகரித்து வரும் இன்றைய காலகட்டத்தில், பல இளைஞர்கள் ஜாதகப் பொருத்தத்தின் மீதெல்லாம் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றனர். ஜாதகப் பொருத்தத்தின் முக்கியத்துவத்தைக் கருதியும், அதன் மீது நம் பெரியவர்கள் வைத்துள்ள திடமான நம்பிக்கையினாலும், நம் மனதில் வரும் ஒரே கேள்வி 'நம் வாழ்க்கையில் ஜாதகப் பொருத்தத்தை நம்ப வேண்டுமா?'

ஜோசிய வல்லுநர்களின்படி, 'வாழ்க்கையில் மிக முக்கியமானது நல்ல மனிதனாக இருப்பது. தனிப்பட்ட முயற்சி, நேர்மை, அனுசரிப்பு, ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை மற்றும் இறுமாப்பை விட்டெறிதல் போன்றவைகள் உங்கள் திருமணத்தை வெற்றியடையச் செய்யும். ஜோசியக்காரர்களான உங்களுக்கு அறிவுரை மட்டுமே வழங்க முடியும். அதனை நீங்கள் நம்புவதோ, பின்பற்றுவதோ உங் களை பொருத்ததாகும். ஜாதகப் பொறுத்தம் மேற் கொள்ளப்படுவது, முன்கூட்டியே அந்த தம்பதிகள் சந்திக்கப் போகும் பிரச்சினை களுக்கு தீர்வு சொல் வதற்கே.' திருமணம் என்பது முடிவு பெறாத பந்தமாகும். அதில் கணவனும் மனைவியும் சந்தோஷமாக வாழவே ஆசைப்படுவார்கள். அது நடப்பதற்கு ஜோதிடம் சிறந்த முறையில் கை கொடுக்கிறது.

### பொருத்தமில்லாத ஜாதகங்களுக்கு தீர்வுகள்

ஒரு திருமணம் வெற்றியடைவதற்கு அனைத்துக் கிரகங்களும், ஜாதகமும் முக்கிய பங்கை வகிக்கின்றன. அதனால் ஜாதக பொருத்தம் இல்லையென்றால், அனுபவப்பட்ட ஜோதிடக் காரரைச் சந்தித்து கலந்தாலோசிக்க பரிந்துரைக்கப்படுகிறது. அவர்கள் தோஷங்களுக்கு பரிகாரங்களை அளிப்பார்கள். அதனால் இரு நபர்களின் ஜாதகம் பொருந்தவில்லை என்றாலும் கூட அவர்களின் திருமணம் நடக்க ஜோதிடம் வழிவகுக்கும்.

### தம்பதிகளுக்கு ஆலோசனைகள்

சந்தோஷமான திருமண வாழ்க்கையை பெற்றிட தம்பதிகளுக்கு சில ஆலோசனைகள். ஜாதகப் பொருத்தம் எல்லாம் சிறப்பாக இருந்தாலும் கூட, ஒரு திருமணம் வெற்றியடைவது, 70 வீதம் மனிதர்களின் கையில் தான் உள்ளது. ஒவ்வொரு தம்பதிகளும் விநாயகர் படம் போட்ட டொலரை அணிந்து கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது. திருமண நாளின் போது மணமகனோ அல்லது மணமகளோ அல்லது நெருங்கிய உறவினர்களோ கறுப்பு நிறத்திலோ அல்லது பழுப்பு நிறத்திலோ ஆடை அணியாத மாதிரி பார்த்துக் கொள்ளுங்கள். மணப்பெண் சிவப்பு அல்லது பிங்க் நிற ஆடையை அணிந்து கொள்ளலாம். அதற்குக் காரணம் அந்த நிறங்கள் திருமண வாழ்க்கையில் அதிர்ஷ்டத்தை உண்டாக்கும். ஏதேனும் பிரச்சினையை சந்தித்தால், நீங்கள் விநாயகரை வழிபட வேண்டும். அவர் உங்கள் வாழ்க்கையில் அனைத்துக் கட்டத்திலும் உங்களுக்கு கைகொடுப்பார்.

### குறிப்பு

தனிப்பட்ட முயற்சியில் தான் ஒருவருக்கொருவரான புரிதலும் பொருத்தமும் அமையும். ஆனாலும் கூட ஜாதகங்கள் என்பது திருமண பந்தத்தில் இருந்து என்ன எதிர்ப்பார்க்கலாம் என்பதற்கான பரீட்சார்த்தம் மட்டுமே. அதனால் நீங்கள் ஜோசியத்தை நம்பினால், உங்கள் திருமண வாழ்வு சந்தோஷமானதாக அமைய ஜாதக பொருத்தம் பாருங்கள்.

# பெண்கள் இதை தெரிஞ்சுக்கணும்..!

01. உங்களின் எடை குறைந்துவிட்டதா? கவலை வேண்டாம். உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும். உடைகளை அணிந்து அழகு பாருங்கள். அதே நேரத்தில் திடீரென்று உங்கள் எடை குறைந்தது ஏன் என்பதைக் கண்டறிய மருத்துவப் பரிசோதனையும் மேற்கொள்ளுங்கள்.

02. உங்கள் குடும்பத்தினருக்கோ, அருகில் வசிப்பவர்களுக்கோ சிறு விபத்தோ, இதய பாதிப்போ ஏற்படலாம். அவரை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்ப்பது அவசியம் என்றாலும், உடனடியாக அவருக்கு முதலுதவி அளிக்கப்பட வேண்டும். முதலுதவி பற்றி நீங்களும் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

03. பெண்கள் புதிதாகத் தொழில் தொடங்க அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். அவர்கள் முக்கியமாக தொழில் நேர்த்தியைக் கற்றுக் கொள்ள வேண்டும். நட்பான அணுகுமுறை அவர்கள் முன்னேற்றத்தின் படிக்கல் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

04. சிலர் ஹோட்டலில் சுவை நன்றாக இருக்கிறது என்று எண்ணி அடிக்கடி ஹோட்டல்களில் சாப்பிடுகிறார்கள். ஆனால் வீட்டில் சமைக்கும் உணவில்தான் உடலுக்கு நல்ல ஆரோக்கியம் கிடைக்கிறது. வீட்டில் சாதம், கூட்டு, பொரியல் ஆகியவற்றை சுவையாக சமைப்பது எப்படி என்பதை பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அது பற்றி பல தகவல்கள் புத்தகங்களிலும், இணையத்தளங்களிலும் கிடைக்கின்றன.

06. வீட்டில் பொழுதுபோக்குக்காக ஒதுக்கப்படும் நேரங்களில் இசையை ஈடுபாட்டுடன் கேட்கலாம். மனது இலகுவாகும்.

07. ரி.வி பார்க்கும் போது அருகில் இருப்பவர்கள் திடீரென உங்கள் மீது விழுந்தாலோ, அருகில் உள்ள மேஜையிலிருந்து யாராவது இருமினாலோ உங்களுக்கு எரிச்சல் வரும் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலிலே நீங்களாகவே அந்த மாதிரியான தொந்தரவுக்கு இடம் கொடுக்காமல் தள்ளி உட்கார்ந்து விடுங்கள்.

08. வீட்டில் பொருள்கள் ஆங்காங்கே ஒழுங்கு இல்லாமல் சிதறிக் கிடந்தால் எரிச்சல் ஏற்படும். இப்படி சிதறிக் கிடக்கும் பொருள்களை ஒழுங்கு படுத்தலாம். மேலும் ஆங்காங்கே கிடக்கும் குப்பைகளை எடுத்து குப்பைத் தொட்டியில் சேகரிக்கும் நல்ல பழக்கத்தையும் கற்றுக் கொள்ளலாம்.

09. குடிதண்ணீரை கொதிக்க வைக்கும்போது அதில் சீரகம் கலந்திடுங்கள். கொதிக்க வைத்து ஆறியபின் அதை குடிராக அருந்துங்கள். தினமும் 3 லீற்றர் தண்ணீர் அருந்தினால் வெப்பத்தால் உண்டான உடல் சூடு குறையும். சீரக தண்ணீர் உடல் ஆரோக்கியத்தையும் சீராக வைத்திருக்க உதவும்.

10. வீட்டில் தனியாக இருக்கும் போது திருடர்கள் உங்களை தாக்கும் நோக்கத்தோடு வந்தால் அவர்க ளிடமிருந்து தப்பிக்க கராத்தே போன்ற கலைகளை தெரிந்து வைத்திருங்கள். தற்காப்புக் கலை எதுவும் தெரிந்திருக்காவிட்டாலும் உங்கள் மனது எப்போதும் தன்னம்பிக்கையோடு இருக்கட்டும்.

11. பெண்கள் தொழில், படிப்பு போன்ற காரணங்களுக்காக வெளியூர்களில் தனியாக வசிக்க நேரிடலாம். அந்த மாதிரியான வேளைகளில் தனியாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அப்படி இருப்பதால் மனரீதியாக தைரியம் கிடைக்கும்.

12. பெண்கள் பணத்தை சம்பாதிப்பதை விடவும், அதை சேமிப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். சரியான நிறுவனங்கள்ளைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்ய வேண்டும். நூறு ரூபா என்றாலும் ஒன்றுக்குப் பலமுறை யோசித்தே முதலீடு செய்யவேண்டும்.

13. திடீரென உங்கள் வீட்டிற்கு உறவினர்கள் அதிக பேர் வந்தால் உங்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். அந்த நேரங்களில் பதற்றம் ஏதுமின்றி இன்முகத்தோடு வேலையைப் பாருங்கள். உங்கள் முகத்தில் தோன்றும் புன்னகையே விருந்தாளிகளின் பாதிப் பசியைப் போக்கிவிடும்.

14. புத்தகங்களைப் படிப்பது போல் சிறந்த பொக்கிஷம் வேறென்றும் இல்லை. நல்ல நல்ல சிந்தனை உள்ள புத்தகங்களைம், வரலாற்றுப் பதிவுகளையும் படிப்பதன் மூலம் பல விஷயங்களை வீட்டில் இருந்தவாறு தெரிந்து கொள்ளலாம்.

15. தினமும் அதிகாலை 5 மணிக்கு எழும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். வெயில் வரும் முன்னே சமையல், வீட்டு வேலைகளை முடித்து விடுவது நல்லது.







# மனதில் உறுதி வேண்டும்

அது ஒரு சிறு கிராமம்...அந்த கிராமத்தில் தண்ணீர் பிரச்சினை வந்தது...மக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கிணறு வெட்ட தீர்மானித்தனர். ஓர் இடத்தை தீர்மானித்து ...அந்த இடத்தில் இருபது அடி ஆழம் தோண்டினர்.ஆனால் தண்ணீர் கிடைக்கவில்லை.. இடம் சரியில்லை என நினைத்து வேறொரு இடத்தை தேர்ந்தெடுத்து அங்கு முப்பது அடி வெட்டினர். அங்கும் அவர்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அந்த இடமும் சரியில்லை என மூன்றாவதாக ஓர் இடத்தை கண்டுபிடித்து அங்கு ஐம்பது அடி வெட்டினர்.தண்ணீர் இல்லை. மூன்று இடங்களிலும் சேர்த்து அவர்கள் நூறடிக்கு மேல் தோண்டியுள்ளனர். அவர்கள் தங்கள் முயற்சியை ஒரே இடத்தில் பொறுமையுடன் மேற்கொண்டிருந்தால் முதலில் வெட்டிய இடத்திலேயே தண்ணீர் கிடைத்திருக்கும். மனதில் உறுதியுடன் செய்யும் காரியத்தில் ஈடுபடவேண்டும்....அப்போது தான் வெற்றி கிடைக்கும். ஏடுத்த காரியத்திலும் கவனம் செலுத்தி மனதை ஒருமுகப்படுத்தினால் வெற்றி நிச்சயம்.

# நம்பினால் நம்புங்கள்!

பறவைகள் விழுங்கும் மிகச் சிறிய நத்தைகளில் 15 சதவீதம், பறவைகளின் வயிற்றுக்குள்ளே வசதியாகத் தங்கி, உயிரோடு உலகையே சுற்றி வரும்!

பூமியில் ஒவ்வொரு நிமிடமும் 6 ஆயிரம் முறை மின்னல்கள் தோன்றுகின்றன.

2 மணி நேர மோட்டார் சைக்கிள் பயணத்தில் 500 கலோரிகள் செலவாகிறது.

சூரிய மண்டலம் தோன்றுவதற்கு முன்பே உருவான வைரம், இப்போது ஒரு விண்கல்லில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நமது காதுகளில் உள்ள குறும்பியும், தாடையின் அசைவும் சேர்ந்து, காதுகளில் சேரும் தூசு, அழுக்கு போன்றவற்றை நீக்கி விடுகின்றன.




# பணம் சம்பாதித்தால் மட்டும் போதுமா?

பணம், பணமென்று தேடி பாடுபட்டு சேர்த்துவிடுகிறோம். ஆனால் யதார்த்த வாழ்வின் இன்ப, துன்பங்களை ஓரங்கட்டி இழந்து விடுகிறோம். பிறகு சேர்த்த பணத்தை மன அழுத்தத்துக்கும் மற்ற வியாதிகளுக்கும் கொட்டித் தீர்க்கும் நிலைக்கு போய்விடுகிறோம். வாழ்க்கையை மகிழ்ச்சியாக எதிர்கொள்ளும் வழிகளை இதுவரை பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக மகிழ்ச்சியுடன் கூடிய முன்னேற்றத்துக்கான வழிகளை இனி காணலாம். நாம் அனைவரும் மனமகிழ்ச்சியுடன் வாழ பணம் இன்றியமையாத ஒன்றுதான். அதற்காக உடல் நலத்தை பேணுவதையோ, குடும்பநலனை காப்பதையோ, பொழுது போக்கு அம்சங்களையோ முற்றிலுமாக ஒதுக்க முடியாது. சிலர் முழுநேரமும் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவார்கள். மழையில் நனைந்து கொண்டே நடப்பது, 'சூரியன் அஸ்தமனமாவதை கண்டு ரசிப்பது, குயில்பாட்டை ரசிப்பது, வண்ண ஓவியம் தீட்டுவது, தீட்டிய ஓவியங்களை கண்டுரசிப்பது, எப்போதோ கேட்ட திரைப்பட பாடலை நினைவுபடுத்தி பாடுவது போன்ற அனுபவங்களில் கிடைக்கும் மகிழ்ச்சியை மதிப்பிட முடியாது. பணம் சம்பாதிப்பதே குறிக்கோளாக இருப்பவர்களால் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களின் முக்கியத்துவத்தை உணரவோ, அனுபவிக்கவோ நேரத்தை ஒதுக்க முடிவதில்லை.

**படிப்பு, வேலையை தவிர்த்து சில...**



இளைஞர்கள் முழு நேரமும் படிப்பது, வேலைக்கான போட்டித் தேர்வுக்கு தயாராவது என்று செயற்படாமல் வாழ்க்கையோடு இணைந்த மாற்று செயல்களிலும் ஈடுபட வேண்டும். உதாரணமாக பூந்தோட்டத்தை பராமரிக்கலாம். நீங்கள் வளர்த்த செடி, பூக்கும்போது உங்கள் மனமும் பூரிப்படையும். செடி வளரும்போது இளம்தளிராக தோன்றும் இலைகளைக் காணும்போது மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கும். இதேபோல் இடையிடையே நண்பர்–உறவினர்களுடன் கலந்துரையாடுவது, சினிமாவுக்கு சென்று வருவது, வேலை சாராத புதிய செயல்களில் ஈடுபடுவது, நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வது, பெற்றோருக்கு உதவுவது என்று வெவ்வேறு செயல்களில் ஈடுபடலாம்.

இத்தகைய செயல்களில் ஈடுபடும்போது மன அழுத்தம் குறையும். இனம் புரியாத மனமகிழ்ச்சி ஏற்படும். மீண்டும் பாடங்களை நன்கு படிக்கும் மனோபாவத்தையும் வளர்க்கும். பயிர் வாடாமல் வளருவதில் எடுத்துக் கொள்ளும் கவனம் உங்கள் வாழ்வையும் மலர்ந்து மணம் வீசச் செய்யும்.

**உணவு, உடை:-**

உட்கொள்ளும் உணவே உடலாகி உயிராகின்றது. உணவின் தன்மைக்கேற்ப உடலின் தன்மையும் மனதின் தன்மையுமே மாறுபடும். பசித்து புசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஏதோ கடமைக்காக என்று உண வருந்தக் கூடாது. உண்ணும் அனுபவம் ஓர் இனிமையான அனுபவமாக இருக்க வேண்டும். உண்ணும் உணவு அறுசுவையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. எளிமையான உணவாக இருந்தாலும் நிறைவான மனதுடன் உண்ணப்பழக வேண்டும். போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். உணவுக்கு மரியாதை அளித்து சுவைத்து உண்ண வேண்டும். நினைக்கும் போதெல்லாம் சாப்பிட்டு பழகக்கூடாது. 'கந்தை ஆனாலும் கசக்கிக்கட்டு' என்ற முதுமொழியின்படி தூய்மையான ஆடை அணிய பழக வேண்டும். 'ஆள்பாதி ஆடைபாதி' என்பதுபோல அணியும் உடை அணிபவருக்கும் நம்பிக்கையை அளிக்க வேண்டும். பார்வையாளருக்கும் நல்ல தோற்றத்தை அளிப்பதாக இருக்க வேண்டும். நேர்முகத்தேர்வுக்கு செல்லும்போது, வேலைச் சூழலுக்கு ஏற்றவாறு நடைமுறையில் உள்ள ஆடைகளை அணிவது என்று ஏற்புடையதைப் பின்பற்ற வேண்டும்.

**இழப்பையும் ஏற்க கற்றுக் கொள்ளுங்கள்:-**

அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும் என்ற நிச்சயம் இல்லை. இழப்பு அல்லது தோல்வி ஏற்படும்போது மனம் வருந்துவதில் தவறில்லை. ஆனால் அதையே ஆழமாக மனதில் பதியவைத்துக் கொண்டு தொடர்ந்து மன வருத்தத்துடன் செயல்படுவது சரியல்ல. அவ்வாறு வருத்தத்துடன் செயல்பட்டால் தன்னம்பிக்கையை பாதிக்க ஆரம்பித்துவிடும். *(தொடரும்)*

# டிங்கோ நாய்



ஆஸ்திரேலியாவில் உள்ள பழக்கப்படுத்தபடாத காட்டுநாய் டிங்கோ என்னும் நாய். இதன் எடை 10 முதல் 24 கிகி இருக்கும்; உயரம் ஏறத்தாழ 44 செ.மீ முதல் 63 செ.மீ வரை இருக்கும்; உடல் நீளம் 86 முதல் 122 செ.மீ இருக்கும். பெரும்பாலும் இவை குரைப்பதில்லை (குலைப்பதில்லை). மரத்திலும் ஏறவல்லவை. ஆண்டிக்கு ஒருமுறைதான் இனப்பெருக்கம் செய்கின்றன.

## சட்டத்தரணியை

இரவுவரை போராட்டம் தொடர்ந்தது. இறுதியில் 30 இற்கும் மேற்பட்ட படையினரும் 20 வரையான கடற்படையினரும் 10 இற்கும் மேற்பட்ட விஷேட அதிரடிப்படையினரும் சுமார் 50 வரையான பொலிஸ் உத்தியோகத்தரும் இணைந்தே பொதுமக்களிடம் இருந்து சட்டத்தரணியை மீட்டுச் சென்றனர்.

குமார் என்ற சந்தேகநபரே சட்டத்தரணியால் பாதுகாப்பாக கொழும்புக்குச் அழைத்துச் செல்லப்பட்டார் என்று கூறப்படுகின்றது. குறித்த நபர் வெளிநாடு செல்வதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது என்றும் மக்கள் கூறுகின்றனர். குறித்த சந்தேக நபரைத் தாம் பிடித்து நேற்றுமுன்தினம் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்ததாகவும், பொலிஸார் அவரை இரகசியமாக விடுவித்துள்ளனர் என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் புங்குடுதீவில் சில தினங்களாக அசாதாரண நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையில் குறித்த சட்டத்தரணியால் அங்குள்ள மக்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார். அந்தக் கலந்துரையாடல் நேற்று முற்பகல் புங்குடுதீவில் உள்ள சர்வோதயம் மண்டபத்தில் ஆரம்பமானது. அதில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் உட்பட பொலிஸ் அதிகாரிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தகுருகுலராஜா ஆகியோரும் மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தில் பேசிய சட்டத்தரணி, இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்படும் குமார் என்பவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் உட்பட எவராவது சந்தேகத்துக்கிடமானதாக நடமாடினால் அது தொடர்பில் அறிவிக்க முடியும் என்று கூறினார். பொலிஸாரும் அதை ஆமோதித்தனர். இவர்கள் இவ்வாறு கூறிக்கொண்டிருந்தசமயம் கொழும்பில் இருந்து ஓர் அவசர அழைப்பொன்று வந்துள்ளது. அந்த அழைப்பில் பேசியவர் சந்தேக நபர் என்று கூறப்படும் குமார் வெள்ளவத்தையில் நிற்கின்றார் என்றும் அவர் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சுவிஸிக்கு விமானம் மூலம் பயணமாகவுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். அதை அறிந்ததும் மக்கள் கூட்டம் ஆக்ரோஷமானது.

அத்தோடு கூட்டம் முடிய சட்டத்தரணி அங்கிருந்து புறப்பட முற்பட்டார். ஆயினும் அவரை அங்கிருந்து அகலுவதற்குப் பொதுமக்கள் விடவில்லை. கடும் இழுபறியின் பின்னர் பொலிஸாரும், விசேட அதிரப்படையினரும் இணைந்து சட்டத்தரணியை ஜீப்புக்குள் ஏற்றினர். ஆனால் ஜீப்பை நகரவிடாது அதன்முன்னால் ஊர் மக்கள் விழுந்து படுத்தனர். பின் பக்கமாக நகரமுற்பட்டபோது ஜீப்பைச் சூழ பெரும் எண்ணிக்கையான மக்கள் அமர்ந்து விட்டனர். சந்தேகநபரான குமாரைத் தங்களிடம் ஒப்படைத்தால் மாத்திரமே சட்டத்தரணி அங்கிருந்து புறப்பட முடியும் என்று அவர்கள் உறுதியாகத் தெரிவித்தனர். மதியம் ஆரம்பித்த இந்த இழுபறி இரவு 6.30 மணியைத் தாண் டியும் நீடித்தது.

அதன் பின்னர் சந்தேக நபரான குமார் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டுவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆனால் மக்கள் அதை நம்பவில்லை. பொலிஸார் வீடியோ மூலம் காட்டியபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டத்தரணியை அழைத்துச் செல்லும் பொலிஸார் குமாரை விடுவித்தது போன்று விட்டு விட்டுவிடுவார்கள் என்று அவர்கள் கூறினர். சட்டத்தரணியைக் கடற்படையினரிடம் ஒப்படைத்து நாளை (இன்று) மதியம் சந்தேகநபரைக் கொண்டு வந்ததன் பின்னர் விடுவிக்கலாம் என்று ஒரு சாரார் ஒப்பந்தத்துக்கு வந்தபோதும், ஒரு சாரார் அதனை மறுத்தனர். அதையடுத்து இந்த இழுபறி நீண்டது.

அதையடுத்து 30 இற்கும் மேற்பட்ட படையினரும் 20 வரையான கடற்படையினரும் 10 இற்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினரும் சுமார் 50 வரையான பொலிஸ் உத்தியோகத்தரும் இணைந்து மக்களிடமிருந்து சட்டத்தரணியைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். சட்டத்தரணியை பொலிஸ் ஜீப்பிலிருந்து கடற்படை அதிகாரியின் ஜீப்புக்கு மாற்றி கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கொண்டு சென்றனர். தற்போது அவர் பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ளார். சட்டதரணியும் கொழும்பில் உள்ள சந்தேகநபரான குமார் ஆகிய இருவரும் நீதிமன்றில் இன்று முற்பகல் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் அங்கு தெரிவித்தனர்.

வீதியில் போடப்பட்டிருந்த தடைகள் இராணுவ உதவியுடன் அவை அகற்றப்பட்டபோது வேலணைத்துறை வரையே போக்குவரத்துச் செய்ய முடிந்தது. வேலணைத்துறையில் மக்கள் ஒன்றுகூடி வீதியை முற்றாகத் தடை செய்தனர். வீதியில் ரயர்கள் போட்ட எரித்து பெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது. யாழிலிருந்து சென்ற அம்புலன்ஸும் திருப்பி அனுப்பப்பட்டது. அந்த இடத்திலும் பொலிஸார் இராணுவத்தினர் விஷேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டனர். எந்தவொரு வாகனமும் வேலணைத் துறைக்குள் நகர விடப்படவில்லை. இராணுவத்தினர், விஷேட அதிரடிப்படையினர் மீது கற்கள் வீசித் தாக்குதலும் நடத்தப்பட்டது. அவர்களது வாகனக் கண்ணாடியும் உடைக்கப்பட்டது. இரவு 10 மணியளவில் வாகனங்கள் அனைத்தையும் மக்கள் சோதனை செய்து அங்கு சட்டத்தரணி இல்லாததால் கலைந்து சென்றனர். (ற-4)

## வடக்கில்

அது கேட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள சகல வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களை முழுமையாக மூடி புறக்கணிப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. இன்று மு.ப. 10 மணியளவில், வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக நடைபெறும் போராட்டத்தில் சகல வர்த்தகர்களும் பங்கெடுக்க வேண்டும் என்றும்– வர்த்தகர் சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் வலியுறுத்தியிருக்கிறார்.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் ஆகிய முதன்மையான சந்தைகளை உள்ளடக்கிய வர்த்தகர்களும் இன்றைய தினம் கடையடைப்பு நடத்தப்போவதாக நேற்றே அறிவித்திருந்தனர். சந்தைகள் மூடப்படுவதனால் விவசாயிகளை மரக்கறி வகைகளை சந்தைகளுக்கு எடுத்து வரவேண்டாம் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

வலி. தெற்கு வர்த்தக சம்மேளனத் தலைவர் சி.ஹரிகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இன்று நடைபெறும் புறக்கணிப்புக்கு தமது வர்த்தக அமைப்புக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகின்றது எனத் தெரிவித்தார். வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகக் கறுப்புக் கொடிகளைக் கட்டுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட நெல்லியடி மற்றும் பருத்தித்துறை வர்த்தக சங்கங்களும் இன்றைய கடையடைப்புக்கு நேற்றே தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்திருந்தன. தமது பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இன்றைய தினம் சகல வர்த்தக நிலையங்களும் முழுமையாக மூடப்பட்டிருக்கும் என்று அவை அறிவித்துள்ளன.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் கெங்காதரன், விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இன்றைய தினம் யாழ். மாவட்டத்தில் தனியார் சிற்றூர்திகள் எவையும் சேவையில் ஈடுபடமாட்டாது என்று தெரிவித்திருக்கிறார். இதே போன்று வடக்கு மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் உரிமையாளர் சங்கமும் இன்று சேவையில் ஈடுபட மாட்டாது என்று அறிவித்துள்ளது.

புறக்கணிப்புக்கு மேலதிகமாக ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் இன்று நடக்க உள்ளன. மு.ப. 10 மணிக்கு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. மு.ப. 10.30 மணியளவில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களால் கல்லூரி வளாகத்தில் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வடக்கிலுள்ள சகல அரச – அரச சார்பற்ற திணைக்களங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் அனைவற்றையும் இன்று ஒரு நாள் மூடி, மாணவியின் படுகொலைக்கு நீதி கோருமாறு வேண்டுகோள் விடுத்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், மு.ப. 10 மணிக்கு ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக நடைபெறும் போராட்டத்தில் சகல தரப்பினரையும் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கிடையே கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில், புங்குடுதீவு மாணவியின் படுகொலையை கண்டித்து கல்விச் சமூகத்தை எதிர்ப்பு வெளியிடுமாறு கேட்டிருந்தார்.

வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இந்த கடையடைப்பு மற்றும் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். எனினும் அது தொடர்பான எந்தவித அறிவிப்புகளும் நேற்றைய தினம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

இதேவேளை– மாணவி படுகொலைச் சம்பவம் தொடர்பில் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம், இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5,86,10,422)

## போதனா

வைக்கப்பட்டிருந்த இவர்கள், நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவதற்கு முன்னதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் முன்பாக மருத்துவப் பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டனர்.

இதனையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பாக பெருமளவு மக்கள் குவிந்தனர். இதனால் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதான வாயிலில் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர். அத்துடன் வைத்தியசாலையின் உள்ளேயும், அதிரடிப் படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர்.

பரிசோதனை முடிவடைந்ததும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் கடும் காவலுடன் சந்தேக நபர்கள் கொண்டு செல்லப்பட்டனர். பொலிஸ் ஜுப் ஒன்று முன்னே செல்ல அதன் பின்னர் அடுத்த ஜுப்பில் சந்தேக நபர்களும் அதன் பின்னால், விசேட அதிரடிப்படையினரின் ஜுப்பும் சென்றது.

நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட சந்தேக நபர்கள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியமையினால், நேற்றைய தினம் கடும் பாதுகாப்புடன் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு, கொண்டு செல்லப்பட்டனர். (ற-5)

# கைதானவர்கள் உறவினர் அல்லர்

### வித்தியாவின் குடும்பம் கூறியதாக விந்தன் கனகரட்ணம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் எவரும் தங்களுடைய உறவினர்கள் இல்லை என்றும், அவர்களுடன் தனிப்பட்ட முன் விரோதங்கள் எவையும் இல்லை என்றும் புங்குடுதீவு மாணவியின் பெற்றோர் தன்னிடம் குறிப்பிட்டதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல சட்டத்தரணிகள் பலரும், ஓய்வு பெற்ற நீதிபதிகளாக உள்ள பலரும், பாடசாலை மாணவிக்கு ஆதரவாகவும், கொலையாளிகளுக்குக் கடும் தண்டனை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தோடும் நீதிமன்றில் இலவசமாக முன்னிலையாகமுன்வந்துள்ளனர். இது தொடர்பிலான தகவலை தெரிவித்து, குடும்பத்தினரது சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், வித்தியாவின் குடும்பத்தினரை நேற்று நேரில் சென்று சந்தித்தார். இதன்போதே, குடும்பத்தவர்கள் இவ்வாறு தெரிவித்ததாக விந்தன் கனகரட்ணம் குறிப்பிட்டார்.

கொலையோடு சம்பந்தப்பட்ட எட்டு பேரும் தங்கள் உறவினர் கள் இல்லை என்றும் அவர்க ளுக்கும் தங்களுக்குமிடையே எவ்வித தனிப்பட்ட கோபங்களும் விரோதங்களும் இருந்ததில்லை என்றும் அந்த மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள எட்டுப் பேரில் மூவர் புங்குடுதீவு வல்லனைச் சேர்ந்தவர்கள் என்றும் ஐவர் புங்குடுதீவு வீராமலையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர். இவர்களில் பல பேர் ஊருக்குள் பல சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருபவர்கள் என்றும், இவர்களுக்கு கடும் தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் கொல்லப்பட்ட மாணவியின் தாயார் மற்றும் சகோதரி ஆகியோர் என்னிடம் தெரிவித்தனர் என்று விந்தன் குறிப்பிட்டார். (த-5)

# இறுதிப் போரில் சரணடைந்து காணாமற்போன 110 புலிகள்

### விவரங்களை வெளியிட்டார் ஐ.நா. நிபுணர்

ஜெனிவா, மே 20

போரின் முடிவில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்து காணாமற்போன அல்லது கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள், தளபதிகள் 110 பேரின் விவரங்களை, ஐ.நாவின் முன்னாள் நிபுணர் யஸ்மின் சூகா வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ–மூன் நியமித்த, நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்தவரான, யஸ்மின் சூகா தலைமையிலான, அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் – இலங்கை என்ற அமைப்பினால் இந்த விவரங்கள் திரட்டப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இலங்கைப் படையினரிடம் இவர்கள் சரணடைந்ததை நேரில் கண்ட சாட்சிகள் உறுதிப்படுத்தியிருப்பதாகவும், அவர்களில் பலரும் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் யஸ்மின் சூகாவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குறித்த நாளில் 100இற்கும் அதிகமான விடுதலைப் புலிகளின் இராணுவ, சிவில் நிர்வாகத் தலைவர்கள் இலங்கைப் படையினரிடம் சர ணடைந்ததைப் பெருமளவான சாட் சிகள் கண்டுள்ளனர்.

கடைசியாகச் சாட்சிகள் காணும் போது, படையினரின் தடுப்பில் இருந்த இவர்களில் பெருமளவானோர் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளமுள்ளிவாய்க்கால் பாலத்துக்குத் தெற்குப் பகுதியில், முள்வேலி அடைக்கப்பட்ட படையினரின் பகுதியில் இவர்களில் பலர் கத்தோலிக்க அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் சரணடைந்தனர்.

சரணடைந்தவர்களின் பட்டியலை அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் இராணுவத்தினரிடம் சமர்ப்பித்தார். இவர்கள், பஸ்களில் இராணுவத்தினரால் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டதை உறவினர்கள் பலரும் நேரில் பார்த்துள்ளனர். அவர்களும், அருட்தந்தையும் அதற்குப் பின்னர் காணப்படவில்லை.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற்போகச் செய்யப்பட்ட நூற்றுக்கும் அதிகமானவர்கள் குறித்து நம்பகமான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொண்டு இதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்– இந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், படையினரிடம் சரணடைந்து காணாமற்போன அல்லது கொல்லப்பட்ட– விடுதலைப் புலிகள் 110 பேர் தொடர்பான விவரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. (த)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முகாமையாளர்
நடராஜா துஷ்யந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
இளையதம்பி நடராஜா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத் தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல. 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்

# மாத்தறையில் அமைதியான முறையில் இடம்பெற்ற போர் நினைவு தின நிகழ்வு

கொழும்பு, மே 20

சுமார் 30 வருடகாலமாக நாட்டில் நிலவிய போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 6 வருடகால நினைவு தின நிகழ்வும், அதில் உயிர்நீத்த மக்களுக்கும், இராணுவத்தினருக்கும் அஞ்சலி செலுத்தும் தேசிய நிகழ்வும் நேற்று மாத்தறையிலுள்ள கடற்கரை வீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா உள்ளிட்ட அரசின் பிரதானிகள், முப்படைகளின் தளபதிகள், அமைச்சர் கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் அவர்கள் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

மப்பும் மந்தாரமுமான காலநிலையில் காலை 7.25 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் முதலில் அழைக்கப்பட்ட அதிதிகள் ஆசனங் களில் அமர்த்தப்பட்டதுடன், பின்னர் முப் படையினரின் மரியாதை வணக்கம் செலுத் தப்பட்டது. அதனைத்தொடந்து விசேட அதிதி கள் முறையே அழைத்து வரப்பட்டனர்.

பொலிஸ்மா அதிபர் எம்.கே.இலங்கக்கோன், விமானப்படைத் தளபதி எயார் மார்சல் கோலித குணதிலக்க, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா, தரைப் படைத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, பாதுகாப்புப் பதவிநிலை உயரதிகாரி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, பாதுகாப்புச் செய லாளர் பி.எம்.யு.பி.பஸ்ஸநாயக்க, ஜனாதிபதி யின் செயலாளர் பி.பி.அபயக்கோன் ஆகியோ ருடன் அவர்களுடைய பாரியார்களும் அரச மரியாதையுடன் அழைத்து வரப்பட்டனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தன வருகை தந்ததுடன், அவரைத் தொடர்ந்து பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா அழைத்து வரப்பட்டார்.

அதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவரது பாரியார் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அழைத்துவரப்பட்ட னர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது பாரியார் விசேட அரச மரியாதையு டன் அழைத்து வரப்பட்டனர்.

ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றிவைக்க தேசிய கீதம் இசைக்கப்பட்டது. பின்னர் நாட்டுக்காக உயிர்நீத்த அனைவருக்காகவும் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட துடன், பீரங்கிப் படையினரால் 21 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

முப்படைத் தளபதிகளும் ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தினர். ஜனாதிபதி உரையை அடுத்து முப்படையினரின் மரியாதை அணி வகுப்பு இடம்பெற்றது.

முப்படை, பொலிஸாரின் அணிவகுப்பில் பல சாகசங்கள் நிகழ்த்தப்பட்டன. யுத்த தாங்கிகள், ஆயுதங்கள், பீரங்கிகள் என்பன காட்சிப் படுத்தப்பட்டன. அது மட்டுமல்லாது, வான் வழியூடாக விமானப்படையினர் சாகசம் காட்டியதுடன், கடற்பரப்பில் கடற்படையின ரால் போர்க் கப்பல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. பின்னர் போரின்போது ஊனமுற்ற படையின ரின் அணி வகுப்பு இடம்பெற்றதுடன், இளைப் பாறிய முப்படையினரினது அணி வகுப்பும் இடம்பெற்றது.


இறுதியாகப் படையினரின் வான் சாகச விளையாட்டான பரசூட் இடம்பெற்றது. இதில் மூன்று பெண்களும் உள்ளடங்கியிருந்தனர்.

கடந்த 5 வருடங்களாக போர் வெற்றிவிழா எனக் கொண்டாடப்பட்டுவந்த இந்த மே 19ஆம் திகதி, இம்முறை போரால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நாளாக அனுஷ்டிக்கப் பட்டதோடு, கடந்த வருடங்களில் நடைபெற்ற எந்தவொரு கலை, கலாசார நிகழ்வுகளும் நேற்றைய நிகழ்வில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மிக எளிமையான முறையில் நடை பெற்ற இந்நிகழ்வுகள் அனைத்தும் காலை 10.20 மணியளவில் நிறைவடைந்தன. (த–சி)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா பாலகிட்டிணர்



யாழ். அல்வாய் கிழக்கு மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை தற்காலிக வதிவிடமாகவும் லண்டன் Hayes ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலகிட்டிணர் 15.05.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம்- முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கருணாதேவியின் (லண்டன்) அன்புக் கணவரும், தனபாலேஸ்வரி (பூமா-கனடா), மகேந்திரகணேசன் (அமுதன், பாலா-கனடா), வடிவாம்பிகேஸ்வரி (சின்னா-லண்டன்), ஸ்கந்தகுமாரன் (குமுதன்-லண்டன்), ஜெயதீஸ்வரி (பபி-லண்டன்), இராஜேந்திரபிரசாத் (ராயு-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசமூர்த்தி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயதேவன், சுகிர்தா, ஜெயக்குமார், கமலகிருபா, இராமராவ், சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற லட்சுமிப்பிள்ளை, சுப்பிரமணியம், இராமநாதன், நரேந்திரன், கோபாலகிருஷ்ணன், சபாரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பூரணம், அருந்ததி, திருப்பதி, செல்வதி ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும், நகுஷன், மிது ஷன், றஜி வன், ராகவி, ஆர்த்திகா, அக்ஷிகா, கீர்த்திகா, சைலஜன், சுஜன், சர்மினி, றோஜினி, ஹர்ஷி, ஜெனிஷா, பிறீத்திக் ஆகியோரின் அன்பு பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.05.2015) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறவிருக்கின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு,
மடத்தடி.

(C 16109) (18.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### சரவணை செல்வரத்தினம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை செல்வரத்தினம் கடந்த (18.05.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை -கதிராசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலா தேவியின் அன்புக் கணவரும், பவளமலர், சாரதாம்பாள், நவரத்தினம் (ஜேர்மனி), சீவரத்தினம், சபாரத்தினம், குபேந்திரன் (குணம் - C.T.B- பிரான்ஸ்), ஈஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தெய்வானை, இலச்சுமி, இராசதுரை மற்றும் சின்னம்மா, இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2015) வியாழக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(சி. பொன்னுத்துரை)

உரும்பிராய்.

### திருமதி பொற்கொடி வெற்றிவேலு



நெல்லியானை பிறப்பிடமாகவும் சுழிபுரம் கல்லைவேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொற்கொடி வெற்றிவேலு நேற்று (19.05.2015) செவ்வாய்க் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமலிங்கம்- நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்க ளான முருகேசு -பத்தினியார் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வெற்றிவேலுவின் அன்பு மனைவியும், மகாலட்சுமி, இராஜகுமார் (ஓய்வு பெற்ற அதிபர்), சூரியகுமார் (பொலீஸ் சாஜன் வவுனியா நீதிமன்றம்), விஜயலட்சுமி, தனலட்சுமி, செல்வலட்சுமி, சிறிகுமார், நந்தகுமார் (பொலீஸ் சாஜன், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஆனந்தன், பரமேஸ்வரி, வேல்விழி (உதவிக்கல்விப் பணிப்பாளர், வவுனியா-சங்கீதம்), பாலரட்ணம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத் தர்), தனபாலசிங்கம், சிவசுப்பிரமணியம் (மலேசியா), சுகந்தினி, வாசுகி ஆகியோரின் மாமியும், குமாரரூபன் (கல்வித்திணைக் களம், வவுனியா), ரூபராஜ் (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), ராஜாராம் (சாரதி, மூளாய் வைத்தியசாலை), விஜிதா (பார்மஸிஸ்ட், கனடா), ஜீவரஜனி (மேல் நீதிமன்றம், வவுனியா), சுமித்தா (P.H.D கற்கை அமெரிக்கா), சுகராஜ், சிந்து (MLT), விதுலன் (கல்வியற் கல்லூரி, வவுனியா), நிரூபன் (மருந்து கலவையாளர்), சொரூபன் (உதவிப் பொலீஸ் பரிசோதகர், களுத்துறை), சிவ பாலன் (பங்குச்சந்தை ஆலோசகர், யாழ்ப்பாணம்), விதுசன் (பல்கலைக் கழகம், மொறட்டுவ), மிதுஷா, சிவசங்கர், பிருந்தாபன், கிருபன், கபிலன், சைலரூபன், சிவகரன் ஆகியோரின் பேர்த்தியும், டக்ஷன், வைசன், விஷாகன், திவ்வியன், சஹானா, சஞ்சனா, வைஷ்ணவி, சங்கவி, உமேஸ், ஐங்கரனி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2015) வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் கல்லைவேம்படியில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:-
077 9653145

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி நடராஜா



திருகோணமலை திருக்கடவூரைப் பிறப்பிடமாகவும், யாழ். கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நடராஜா நேற்று (19.05.2015) செவ்வாய் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சுந்தரம் தம்பதியரின் மருமகனும், புனிதம்மாவின் (மணி) அன்புக் கணவரும், நிஷாந்தன் (கனடா), துஷ்யந்தன் (முகாமையாளர்-சிற்றி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்), உஷாநந்தினி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ராஜகோபால், சித்திரவேல், அருளம்பலம், சிவபாலன் மற்றும் ஜெயம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மைதிலி (கனடா), சசிகலா, பிரபாகரன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனும், அஜந்தன் (கனடா), ஆதவி (கனடா), பதுஷா (வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி), லக்ஷயா (ஜோன் பொஸ்கோ), பிரதிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2015) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்திபாத்தி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

04, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(C 16138) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.
021 222 9068

### முருகேசு கந்தசாமி

(உரிமையாளர்-ராஜன் எலக்றிக்கல்ஸ், பருத்தித்துறை)



வடமராட்சி கிழக்கு, அம்பன்-குடத்தனையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி நேற்று (19.05. 2015) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டடார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வ ராசா மற்றும் செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ராஜகாஷ் (யா/ஹாட்லிக் கல்லூரி மாணவன்), ராகவி ( யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி), ராஜதாஸ் (யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மா, சங்கரப்பிள்ளை மற்றும் ராசமணி, நகுலராஜா (ராஜன் ஹாட்வெயர்-பருத்தித்துறை), புஸ்பராணி (லண்டன்), நவரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாலாம் குறுக்குத்தெரு சந்தி,
தும்பளை வீதி, பருத்தித்துறை.
021 226 4769

(C 16112) (10.6)

தகவல்: முருகேசு நகுலராஜா
சகோதரன் (உரிமையாளர் ராஜன் ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்)
பருத்தித்துறை. 0776086237

### திருமதி மனோரஞ்சிதம் சோமசுந்தரம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதம் சோமசுந்தரம் நேற்று (19.05.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. மயில்வாகனத்தின் இரண்டாவது மகளும், பொ. சோமசுந்தரத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) அன்பு மனைவியும், மகேஸ்வரி (கனடா), தர்மராசா (கனடா), Dr. கனகராசா (கனடா), Dr.ஞானபவான் (லண் டன்) காலஞ்சென்ற திருமதி மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.05.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 9134559

தகவல்:
பொ. சோமசுந்தரம் (கணவர்).

# டோனி 'டக்' சென்னை படுதோல்வி

## இறுதியாட்டத்துக்கு நேரடியாக தகுதியானது மும்பை

சிம்மொன்ஸின் அரைச்சதமும் பொலார்டின் அதிரடியும் மலிங்க மற்றும் ஹர்பஜனின் கட்டுக் கோப்பான பந்துவீச்சும் கை கொடுக்க 25 ஓட்டங்களால் சென்னையை தோற்கடித்து இறுதியாட்டத்துக்கு நேரடியாகத் தகுதிபெற்றது மும்பை.

சென்னை எதிர் மும்பை அணிகளுக்கிடையிலான முதலாவது விலகலாட்டம். சென்னையை வீழ்த்துவோம், மும்பையை விழ்த்துவோம் இவ்வாறான அறிக்கைகளுக்கு மத்தியில் சாதிக்கப்போகும் யார் என்ற முடிவை எட்டப்போகும் ஆட்டம். இரண்டுஅணியினரும்பலமுள்ள அணிகள். வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதியாட்டத்துக்கு தகுதி பெறும் என்ற காரணத்தினால் ஆட்டத்தில் வெற்றிபெறுவதில் இரண்டு அணிகளும் தீவிரம் காட்டின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் சிம்மொன்ஸிடன் பார்த்திவ் பட்டேல். நடப்புத் தொடரில் மும்பை அணியின் சிறந்த ஆரம்ப இணைப்பாட்டம் இந்த ஆட்டம்தான் என்று சொல்லிக் விழுந்தபாடில்லை. சென்னையின் வியூகங்கள் ஒவ்வொன்றும் சிதறடிக்கப்பட்டு தவிடு பொடியாகிக் கொண்டிருந்தன. பத்தாவது பந்துப் பரிமாற்றத் தில் மும்பை 90 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் பட்டேல் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் சிம்மொன்ஸ். குளத்தில் ரோஹித் சர்மாவுடன் பொலார்ட். இருவருமே அதிரடியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார்கள். ரோஹித் சர்மாவால் தொடர்ந்தும் அதிரடி காட்டமுடியவில்லை. 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்தும் விளாசிக்கொண்டிருந்தார் பொலார்ட். மிக இலகுவாக நீண்ட சிக்சர்களை தொடர்ச்சியாக விளாசினார். 17 பந்துகளில் 5 சிக்சர்களுடன் 41 ஓட்டங்களை ஊதித் தள்ளினார். மும்பையினது ஆட்டத்தின் வேகத்தில் 200 ஓட்டங்கள் இலகுவாக எட்டப்படும் என்ற நிலைமை இருந்த போதிலும், நெக்ஜூரவும் பிராவோவும் 18, 19 ஆவது பந்துப் பரிமாற்றங் மக்கலம் இல்லாததும் சென்னைக்கு பின்னடைவு. இறுதியாட்டக் கனவுடன் களத்தில் சிமித்துடன் ஹசி. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே சிமித்தின் ஆட்டம் அடங்கியது. டக்கில் வெளியேற்றினார் மலிங்க. இழப்பைச் சரிசெய்தார் பிளாஸிஸ். நிதானித்து பந்துகளை வீணடிப்பார் என்று எண்ணிப் பயந்த ஹசி இலக்கை எட்டக் கூடிய வகையில் செயற்பட்டார். ஆனபோதிலும் ஹசியால் நிலைக்க முடியவில்லை. ஐந்தாவது பந்துப்பரிமாற்றத்தில் அவரும் ஆட்டமிழந்தார். பிளாஸிஸ்ஸுடன் இணைந்தார் ரெய்னா. ஆதிரடி ஆரம்பமானது. பத்தாவது பந்துப்பரிமாற்றத்தில் சென்னை 86–2. பதினொராவது பந்துப்பரிமாற்றத்தில் ஹர்பஜன் பந்தில் சிக்கினார் ரெய்னா. அடுத்த பந்திலேயே டக்கில் வெளியேறினார் டொனி. ஹர்பஜன் திறனில் சந்தேகம் கொண்ட டொனி ஹர்பஜனின் ஒரு பந்தைக்கூட ஒழுங்காக சமாளிக்க முடியாமல் திண்டாடியது





கொள்ளும் அளவுக்கு நேற்றைய ஆரம்பம் அமைந்தது. அனைத்துப் பந்துகளையும் விளாசித்தள்ள வேண்டும் என்று அவசரப்படவும் இல்லை. அதேநேரம் நிதானித்து நிற்கவும் இல்லை. தருணத்துக்கு ஏற்ப சிறப்பான ஆட்டம். அவ்வப் பொழுது சிக்சர்களும் இல்லாமல் இல்லை. இணைப்பாட்டம் ஐம்பதைக் கடந்துவிட்டது இலக்கு மட்டும் கள் முறையே 4 மற்றும் 3 ஓட்டங்களில் நிறைவுசெய்த தனால் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மும்பை 187–6.

120 பந்துகளில் 188 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. மலிங்க, மக்கெல்நாதன், ஹர்பஜன்சிங், பொலார்ட் இவ்வாறான வீரர்களைச் சமாளித்து இந்த இலக்கை சென்னை எட்ட வேண்டும். தான் பரிதாபம். பிராவோ 20 ஓட்டங்களுடன் ரண் அவுட். நேகி வெறும் 3 ஓட்டங்கள். இலக்கு கள் சரியச் சரிய சென்னையின் தோல்வி படிப்படியாக உறுதியா னது. முடிவில் சென்னை 162–5 ஓட்டங்களைமட்டுமேபெற்று 25 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. (ரி)

# பகலிரவு டெஸ்ட் ஆட்டம் வேண்டும்

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டமொன்று அண்மையில் மும்பையில் 2 நாள்கள் நடந்தது. இந்தக் கூட்டத்தில் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தை நடத்த ஐ.சி.சி.யின் அனைத்து நிரந்தர உறுப்புரிமை கட்டுப்பாட்டுச் சபைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. டெஸ்ட் ஆட்டத்தை 4 நாள்களாக குறைக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை சபை ஏற்க மறுத்து விட்டது. தலைக் கவசம் உட்பட வீரர்களின் பாதுகாப்பு விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பது சபையின் பிரதான முடிவாக அறிவிக்கப்பட்டது. (த–ரி)

வீடு விற்பனைக்கு
இலக்கம் 139, கன்னாதிட்டி வீதி, Science hall இற்கு முன்பாக 3 பரப்பு 7 குழி 4 அறைகள் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 947 8872
(58764)(4.3.7)

விற்பனைக்கு
Scooty pep, Sony set 1100w (3DVD) போடக்கூடியது. குசன் கழுல் கதிரைகள், கிடாரம், பெரிய காதுரண்டிகள், கலர் பிரிண்டர், மரப்பெட்டகம், அலுமினியக் கண்ணாடி கதவுகள், Computer மேசைகள், AC, மஞ்சள் சிலிண்டர், 3D மிக்சி மலிவு விற்பனைக்குண்டு.
தொ.பே:- 071 5886692

தேவை
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றக் கூடிய இரவு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. நேரில் வரவும்
தனங்களப்பு வீதி,
சாவகச்சேரி.

பலகை
துறையில் அனுபவம்மிக்க
கன்லத்
இடமிருந்து நியம தரத்திலான
பலகை
ரெட் உபா
(RED UBAH)
2X4 ரு 105/= இலிருந்து
6 அடி தொடக்கம்
(தரச் சான்றிதழ் சகிதம்)
கன்லத்
549, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14
தொ.பேசி : 011-2434901/ 011 5235840

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

Free Course ! Web Design
பாடசாலை மாணவர்களுக்கான இலவச பயிற்சிநெறி
KU Education 0777302882
edu.kugroup.info/itf

On Arrivel Indian Visa
Sun Travel's இந்திய விசா வெளிநாட்டு கடவுச் சீட்டு உடையோர் சில் மணி நேரத்தில் உங்கள் வீடுகளில் இருந்து விசா பெற்றுக் கொள்ளலாம். தொ.பே:-
077 2259030
வைரவ பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

அறிவித்தல்

கொழும்பு நடனமேடை 2015

கோதே (Goethe) நிறுவனமும் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் இணைந்து இன்று நடத்த விருந்த கொழும்பு நடனமேடை 2015 என்னும் நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை (21.05.2015) மாலை 05.00 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வாழ்த்துகின்றோம்



இன்று (20.05.2015) புதன்கிழமை
திருமண பந்தத்தில் இணையும்
செல்வன் சுகந்தன் செல்வி றமேத்தி
அவர்களை
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
கோப்பாய் நண்பர்கள் சார்பாக
நிமல்ராஜ்

# இனங்களிடையே நல்லிணக்கம் இதுவே புதிய அரசினது இலக்கு

## மாத்தறை நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 20

இலங்கையில் போர் நிறைவடைந்த பின்னர் அபிவிருத்தியில் குறியாக இருந்த அரசு, இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறியது. அத்துடன், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் தவறியது என்று குற்றஞ் சாட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரிவினைவாதத்தை இந் நாட்டிலிருந்து தோற்கடித்து நாட்டில் அபிவிருத்தியையும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதே புதிய அரசின் இலக்காகும் என்றும் குறிப்பிட்டார்.



தண்ணீர்ப் பிரச்சினையால் மாவிலாறில் ஆரம்பித்த இறுதிப் போரானது நந்திக்கடலில் நிறைவடைந்தது. இவ்வாறான ஒரு காலம் மீண்டும் இங்கு உருவாக புதிய அரசு இடமளிக்காது என்றும் அவர் உறுதியளித்தார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் புதிய அரசு விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன் விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்கவோ, ஊடுருவவோ ஒருபோதும் இடமளிக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இறுதிப்போர் நிறைவடைந்த பின்னர் 6ஆவது தடவையாக இராணுவத்தினரை நினைவுகூரும் அணிவகுப்பு மாத்தறை கடற்கரை வீதியில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:–

இத்தினமானது சரித்திர முக்கியத்துவம் மிக்கதாகும். நாட்டில் 30 வருடகாலம் நிலவிய கொடிய போர் நிறைவடைந்து 6 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த சுதந்திரத்தை எமக்கு அனுபவிப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தமைக்காக முப்படைகளுக்கும் நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். போரில் உயிர்நீத்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் இத்தருணத்தில் நாங்கள் நினைவு கூருகின்றோம்.

இவ்வாறான கசப்பான வரலாறு ஏன் எமக்கு ஏற்பட்டது என்பதை அனைவரும் சிந்திக்கவேண்டும். 1948 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக மூவின மக்களும் இணைந்து நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடி வெற்றி கண்டனர். அப்போதிருந்த ஒற்றுமை பிற்காலத்தில் இல்லாமல் போனதாலேயே விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

1980ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த அரசுகள் இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேணாமையினாலேயே அந்நிலை உருவாகியது. பின்னர் 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் அதனை நாம் திருத்திக்கொள்ள கடந்த அரசு தவறியது.

போரின் பின்னர் அபிவிருத்திப் பணிகளைச் செய்வதில் கவனம் செலுத்திய கடந்த அரசு, போரினால் பாதிக்கப்பட்டவர்களின் உள்ளங்களை அமைதிப்படுத்துவதற்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவில்லை. அது மட்டுமல்லாது, இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், ஒற்றுமை, சகவாழ்வு இல்லாது போனதுடன் அதனைச் சரிசெய்ய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அபிவிருத்தியையும், இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதாக தெரிவித்து ஆட்சியில் அமர்ந்த புதிய அரசு அதனைச் செய்வதில் வெற்றி கண்டுள்ளது. அக்கொள்கைக்கு அமையவே இந்த அரசு எதிர்காலத்திலும் செயற்படும் என்று நான் உறுதியளிக்கின்றேன்.

தண்ணீர்ப் பிரச்சினையால் மாவிலாறில் ஆரம்பித்த இறுதிப் போரானது நந்திக் கடலில் நிறைவடைந்தது. இவ்வாறான ஒரு காலம் மீண்டும் இங்கு உருவாக நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் தலை தூக்கவோ ஊடுருவவோ ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை.

இனங்களுக்கிடையில் பிரிவினையைத் தூண்டும் வகையில் தற்போதும் சில அமைப்புகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலிருந்தும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனினும், இந்த அமைப்புகளின் செயற்பாடுகளை நாங்கள் முறியடித்துள்ளோம்.

இன்றைய நாள் சமாதானத்துக்குக் கிடைத்த நாள். இது இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் புதிய அத்தியாயமாக அமைகின்றது. அத்துடன், சமாதானத்தின் தேசமாக இலங்கை விளங்குவதற்கான புதிய அத்தியாயமாக இன்றைய நாள் அமைகின்றது" –என்றார். (த)

# சம்பூர் மக்கள் உண்ணாவிரதம்

## மீள் குடியேற்றத்துக்கு தடையாகவுள்ள வழக்கைத் திரும்பப் பெறுமாறு கோரி

சம்பூர், மே 20

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேச மக்கள் தமது மீள் குடியேற்றத்துக்குத் தடையாகவுள்ள வழக்கைத் திரும்பப் பெறக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன் தினம் சம்பூர் பிரதேச வாசியொருவர் கிளிவெட்டி இடைத்தங்கல் முகாம் முன்பாக மீள்குடியேற்றத்தை வலியுறுத்திச் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். இந்நிலையில் சம்பூர் பத்திரகாளியம்மன் ஆலயத்துக்கு முன்பாகப் பொது மக்கள் ஒன்று கூடி மற்றுமொரு போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் சாதகமான பதில் கிடைக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என ஏற்பாட்டாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பூர் பிரதேசத்தில் 818 ஏக்கர் காணி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் 2012.05.17 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி கைத்தொழில் ஊக்குவிப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. 2012.07.19 திகதியிடப்பட்ட மற்றுமொரு வர்த்தமானி பிரகடனத்தில் அந்த காணிகள் முதலீட்டு ஊக்குவிப்பு சபையிடம் கையளிக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இம் மாதம் 7ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி குறித்த இரு வர்த்தமானி அறிவித்தல்களும் குறித்த மீள் குடியேற்றத்துக்காக நீக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நீக்கக் கோரி முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் முதலீடு செய்ய தெரிவாகியிருந்த தனியார் நிறுவனமொன்று உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

அந்த மனுவை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம் குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிர்வரும் வியாழக்கிழமை வரை இடைக்கால தடை உத்தரவு விதித்துத்துள்ளது. அன்றைய தினம் இது தொடர்பாக விளக்கத்தை முன் வைக்குமாறு அரச சட்டவாதியை நீதிமன்றம் கேட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

# எரியுண்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, மே 20



கிளிநொச்சி, மலையாளபுரம் பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அந்தோனிச்சாமி றொனி (வயது–48) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக் காலை 5 மணியளவில் தனது மனைவியிடம் கடைக்குச் சென்று மண்ணெண்ணெய் வாங்கி வருவதாகக் கூறிக் கடைக்குச் சென்று திரும்பி வந்துள்ளார். பின்னர் சிறிது நேரம் கணவரை காணவில்லை எனத் தேடியபோது அருகில் இருந்த பற்றை ஒன்றினுள் எரியூட்டப்பட நிலையில் அவர் சடலமாகக் காணப்பட்டதாக மனைவி தெரிவித்தார். அத்தோடு உயிரிழந்தவர் இரண்டு திருமணம் புரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவரின் உடைகள், தொலைபேசி, பணம் என்பன ஒரு பையினுள் போடப்பட்ட நிலையில் சடலத்தின் அருகே காணப்பட்டது. உயிரிழந்தவர் தன்னைத்தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது யாராவது எரித்தார்களா என்ற கோணத்தில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–21)

## வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவரிடம் ரி.ஐ.டி விசாரணை

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவரும் காணாமற் போனோர் குழுவின் தலைவருமான இ.தேவராஜன் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினால், விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் மற்றும் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறித்தே விசாரணை நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

அவர் பணிபுரியும் வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்துக்கு நேற்று நண்பகல் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 3 பேர் வந்ததாகவும், குடும்ப விபரங்களையும் கேட்டு அறிந்ததுடன், இவரின் மகன் காணாமல் போன விடயம் தொடர்பாகக் கேட்டதாகவும் தேவராஜன் கூறினார். (த)

# முல்லைத்தீவு மீனவர் நேற்று ஆர்ப்பாட்டம்

## சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்துமாறு கோரி


முல்லைத்தீவுக் கடலில் நடைபெறும் சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்தக் கோரி முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் நேற்று முல்லைத்தீவுக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் மீன்வளம் அழிக்கப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கூறினர்.

முல்லைத்தீவில் கோப்பாரப்பிட்டி தொடக்கம் நல்லதண்ணி தொடுவாய் வரையிலுள்ள 74 கிலோ மீற்றர் கடலில் 3600 கடற்றொழிலாளர்கள் மீன்பிடி தொழில் செய்கின்றனர். சட்டவிரோத மீன்பிடி, வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறல், கடலட்டை பிடித்தல், சங்கு பிடித்தல், டைனமற் பாவித்து மீன்பிடித்தல் ஆகியவற்றால் இந்த மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

முல்லைத்தீவில் 3 நன்னீர் மீன்பிடிச் சங்கம் உட்பட 26 மீன்பிடிச் சங்கங்கள் உள்ளன. மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டு 6,000 பேர் வசிக்கின்றனர். இவர்களின் வாழ்வாதாரம் வளம் பெறவும், தொழில் பாதிக்கப்படாமல் இருக்கவும், சட்டவிரோத மீன்பிடியை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் ஏற்கனவே மாவட்ட



செயலாளருக்கும் நீரியல் வளத்துறையினருக்கும் மனுக்கள் கொடுத்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் ஆகியோரும் பங்கேற்றனர். (த–102)

## 12 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

மாங்குளம், தலைமன்னார் உட்பட 12 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. சேவையின் அவசியம் கருதி, பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் அனுமதியின்பேரில் குறித்த அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி குளியாப்பிட்டி, மோதரை, கொட்டாஞ்சேனை, கொம்பனி வீதி, மாங்குளம், தலைமன்னார், நாரம்மல, கொபேய்கனே, பன்வில மற்றும் குருநாகலை ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், கண்டி பொலிஸ் நிலையத்தின் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதி காரியும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த–சி)



உடுவில் மகளிர் கல்லூரி



அராலி இந்துக் கல்லூரி



அராலி சரஸ்வதி வித்தியாலயம்





விக்ரோரியாக் கல்லூரி



அராலி சரஸ்வதி வித்தியாலயம்



புங்குடுதீவு மாணவி படுகொலை செய்ய்ப்பட்டமையைக் கண்டித்து நேற்று கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கத்தினர், ஓட்டோ சங்கத்தினர், பொதுமக்கள் இணைந்து பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். காலை 9 மணிக்கு கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. அதில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ந-21)

# மாணவி படுகொலை மன்னிக்க முடியாதது

## வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி கூட்டு வன்புணர்வுக்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்டமை மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகம் உட்பட மக்கள் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாகிக்கிய கோர - பாவச் செயலாகும். இந்தக் கொடூரத்தை எந்தவகையிலும் மன்னித்தல் ஆகாது. - இவ்வாறு தெரிவித்துள்ளது வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம்.

அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாடசாலை மாணவியை தமது இச்சைக்கு இரையாக்கிக் கொடூரமாகக் கொலை செய்து அந்த மாணவியின் பெற்றோருக்கும் உறவுகளுக்கும் எமது சமூகத்துக்கும் ஆற்றொணாச் சோகத்தை தந்த கயவர்களையும் கயமைத்தனத்தையும் எமது சமூகத்திலிருந்து வேரோடு நீக்கி விடல் வேண்டும். நல்லவற்றுக்குத் துணைநிற்கும் எமது சமூகப் பண்பு மீண்டும் உயிர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்தக் கொடூரச் செயலானது பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் இன்று எதிர் நோக்கியுள்ள ஆபத்தான சவால்களுக்கான சான்றாகும்.- என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மூலம் எமது சமூகத்துக்கும் மாற்றொண்ணா வடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை வடமாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் மூலம் கடுமையான தண்டனைக்குள்ளாக்குதல் வேண்டும் எனவும் கோரிக்கை விடுக் கின்றது.

எமது இளம் சந்ததியினர் கலாசாரம் காக்கும் தமது தவிர்க்க வொண்ணாத பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் விரும்பி வேண்டுகின்றது.- என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மக்கள் வாழ முடியாத நிலை தற்போது உருவாகியுள்ளது

## சங்கானை பிரதேச சபை உறுப்பினர் நடனேந்திரன் தெரிவிப்பு

வலி.வடக்கு, மே 20

தீவகத்தில் நடைபெறும் அதிர்ச்சியூட்டும் சம்பவங்களால் மக்கள் வாழமுடியாத சூழல் ஒன்று மீண்டும் அங்கு உருவாகியுள்ளது என வலி. மேற்கு சங்கானை பிரதேச சபையின் உறுப்பினர் த. நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி படுகொலை தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ள தாவது:-

புங்குடுதீவில் உயர்தர பாடசாலை மாணவி காமுகர்களால் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட விடயம் இந்த உலகை உலுக்கியுள்ளது.

இதேபோல் கடந்தகாலங்களில் யாழ்ப்பாணத்தின் மையமான தீவகத்தில் சாரதம்பாள், தர்சிகா மற்றும் ஓர் ஆசிரியை என பட்டியல் நீண்டு- இறுதியாக இன்று மாணவி கொலை செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்தும் தீவகப் பகுதிகளிலும் மற்றும் வடக்கின் இதர பகுதிகளிலும் இவ்வாறான படுகொலைகள உட்பட ஏனைய குற்றங்களான போதைப் பொருள் வியாபாரம் வாள் வெட்டுக்கள் அடாவடித்தனங்கள் என்பன நீண்டு கொண்டு செல்கின்றன. இவைகள் எ[illegible]யும் இடம் பெறாது இடை நிறுத்தப்[illegible] வேண்டும்.- என்றுள்ளது. (ந-8[illegible])

# குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கு[illegible]

## *வடமாகாண சிகை அலங்கார சங்கங்களின் சம்மேளனம் கண்டன[illegible]*

யாழ்ப்பாணம், மே 20

பாடசாலை மாணவியின் படுகொலையுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் எமது கலை கலாசாரத்தை சீரழிக்க முற்படுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கவேண்டும் என வடமாகாண சிகை அலங்கார சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பி[illegible] விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே[illegible] மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள[illegible]

"இனியும் நாம் மௌனம் சாதிக்க மு[illegible]யாது. பாடசாலை மாணவியின் ப[illegible] கொலையுடன் தொடர்புடையவர்கள[illegible] சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்[illegible] கொடுக்க வேண்டும். - என்றும் அ[illegible] அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ந[illegible]















மாணவி கொலையுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர் தப்பிச் சென்றதைக் கேள்வியுற்றுக் கிளர்ந்தெழுந்த மக்கள், புங்குடுதீவில் நேற்று முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் போதான சில பதிவுகள். (4)













# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்





யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும், பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியமும் இணைந்து நேற்றுமுன்தினம் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்தன.
பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள சேர். பொன்.இராமநாதன் சிலை முன்பாக நிகழ்வை நடத்தினர். அதில் பல்கலை விரிவுரையாளர்கள் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் முதலில் பல்கலைக்கழகத்தில் உள்ள பரமேஸ்வரன் கோயில் முன்பாக கர்ப்பூரம் கொளுத்தி நிகழ்வை ஆரம்பித்தனர். அதன் பின்னர் அனைவரும் ஊர்வலமாகக் கைலாசபதி கலையரங்குக்குச் சென்று அஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டனர். அதில் விஞ்ஞான ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் என்பனவும் கலந்து கொண்டிருந்தன. அனைவரும் மெழுகுவர்த்தி ஏற்றியும், சுட்டிகளில் விளக்கேற்றியும் அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டனர். (ற-4)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் காரைநகர் பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றன. பிரதேச சபைத் தவிசாளர் வே.ஆனைமுகன் சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்தார். இதில் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.துர்க்கேஸ்வரன், பிரதேச சபை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர். (வ-250)





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் வள்ளிபுனத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருமளவு மக்கள் உணர்வுபூர்வமாக இணைந்து கொண்டனர். நிகழ்வில் வடக்கு முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (வ-21)



வாகரையில் மாணிக்கபுரம் வாவிக் கரையில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடைடெற்றன. இந்த நிகழ்வில் அரசியல் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டு உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர். (வ)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு, காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடியறியும் வவுனியா மாவட்ட சங்கம் மற்றும் நாங்கள் இயக்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்றன. போரில் உறவுகளை இழந்தவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். முள்ளி வாய்க்கால் ஆவணப் படமும் காண்பிக்கப்பட்டது. (வ-421,402)



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 6 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் பிரிட்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றன. எம்பாக்மண்ட் ரயில் நிலையம் அருகாமையில் நடைபவனி ஆரம்பமாகி மாலை 3மணியளவில் வெஸ்ட்மினிஸ்டர் ரயில் நிலையத்தின் அருகாமையில் அமைந்துள்ள பிரிட்டன் பிரதமர் இல்லத்தைச்சென்றடைந்தது. அங்கு நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்மக்களுடன் ஆளுங்கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (வ)



வவுனியாமாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பிரபாகரக் குருக்கள் தலைமையில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மதியம் வவுனியா கற்குளி அம்மன் ஆலயத்தில் நடைபெற் றன. அதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு உயிரிழந்த உறவுகளை நி னைவேந்தினர்.(வ-402,421)





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுனியாவிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. குருமன்காட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் பொதுமக்கள் இறுதிப் போரில் கொல்லப்பட்ட தமது உறவு களை நினைவேந்திச் சுடரேற்றினர். (வ)




# 2ஆவது தகுதியாட்டத்தில் மோதப் போவது யார் ?

## ராஜஸ்தானை பெங்களூர் வீழ்த்தும்



நடப்பு ஐ.பி.எல். தொடரின் விலகல் ஆட்டத்தில் பெங்களூர் எதிர் ராஜஸ்தான் அணிகள் மோதவுள்ள நிலையில் ராஜஸ்தானை வீழ்த்தி இரண்டாவது தகுதியாட்டத்துக்கு முன்னேறப்போகும் அணியாக எமது அணியே இருக்கும் என்று பெங்களூர் அணியின் அதிரடி வீரர் கெயில் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானை வீழ்த்துவது தொடர்பாக கெயில் தெரிவித்ததாவது:–

'ராஜஸ்தான் மிகவும் சிறப்பான திறனில் உள்ள ஒரு அணி. வற்சன், சிமித், ரஹானே, சாம்சன் என்று துடுப்பாட்ட வரிசை மிகவும் பலம்பெற்றுள்ளது. பந்துவீச்சிலும் ராஜஸ்தான் ஒரு பலமான அணியே ஆனால்– ராஜஸ்தானுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல பெங்களூர். அதிரடிப்பட்டாளங்களை அதிகமாகக் கொண்ட பெங்களூரால் எவ்வாறான பந்துவீச்சையும் பந்தாட முடியும். அதேநேரம் எந்த இலக்கையும் விரட்டவும் முடியும். உலகக்கிண்ணத் தொடரில் தொடராட்ட நாயகன் விருதை வென்ற ஸ்ரார்க் எமது பந்துவீச்சின் பலம். மொத்தத்தில் பெங்க ளூர் ராஜஸ்தானை வீழ்த்தி இரண்டாவது தகுதியாட்டத்துக்கு தகுதிபெறும்– என்றார்.

## பெங்களூரை ராஜஸ்தான் வீழ்த்தும்



நடப்பு ஐ.பி.எல். தொடரின் விலகல் ஆட்டத்தில் பெங்களூர் எதிர் ராஜஸ்தான் அணிகள் மோதவுள்ள நிலையில் பெங்களூரை விழ்த்தி இரண்டாவது தகுதியாட்டத்துக்கு முன்னேறப் போகும் அணியாக எமது அணியே இருக்கும் என்று ராஜஸ்தான் அணியின் தலைவர் சிமித் தெரிவித்துள்ளார்.

பெங்களூரை வீழ்த்துவது தொடர்பாக சிமித் தெரிவித்ததாவது:–

'எமது அணியில் அனுபவ வீரர்களம் இளம் வீரர்களும் அதிகமாக உள்ளனர். குறிப்பாக வற்சன் போன்ற அனுபவ வீரர்களால் சாம்சன் போன்ற இளம் வீரர்கள் அதிகம் கற்கிறார்கள். வற்சனும் ரஹானேயம் எமது துடுப்பாட்ட பலம். நடப்புத் தொடரில் வேறு எந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களும் இவர்கள் இருவரினதும் அளவுக்கு சிறப்பாகச் செயற்படவில்லை. பந்துவீச்சாளர்களும் தற்பொழுது சிறப்பாகச் செயற்படுகிறார்கள். எம்மோடு மோதவுள்ள பெங்களூர் எந்த அளவுக்கு பலமான அணியென்று அனைவரும் அறிந்ததே. வில்லியர்ஸ், கெயில், ஹோக்லி இந்த மூவரையும் தொடர்ந்து நிலைக்க விட்டால் பின்னர் வெற்றியை எதிர்பார்க்க முடியாது. எனவே இவர்களை வீழ்த்தும் வியூகம் வகுத்து சிறந்ததொரு குழுச்செயற்பாட்டின் மூலம் பெங்களூரை விழ்த்துவோம்–என்றார். (த–ரி)

# இன்றைய மோதல்கள்

**புனித சவேரியார் தொடர்**

யாழ்ப்பாணம், மே 20

தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று புதன்கிழமை தேவன்பிட்டி புனித சவேரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடரில் பி.ப. 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அன்புபுரம் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**புனித தோமையார் வி.க.தொர்டர்**

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெருவிழாவை முன்னிட்டு புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் இன்று புதன்கிழமை பி.ப. 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

மாலை 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த–ரி–23)

# இந்திய அணி இன்று தேர்வு



நடப்பு ஐ.பி.எல். தொடர் நிறைவடைந்த பின்னர் இந்திய அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற் கொள்ளவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி இன்று தெரிவுசெய்யப்படவுள்ளது.

இந்திய அணி அடுத்த மாதம் பத்தாம் திகதி பங்களா தேஷுக்குச் சுற்றுப் பயணம் செய்து, மூன்று ஒருநாள் ஆட்டங்களிலும் ஒரு டெஸ்ட் ஆட்டத்திலும் மோதவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி இன்று தெரிவு செய்யப்படவுள்ளது. கோஹ்லி உள்ளிட்ட ஒருசில வீரர்கள் தமக்கு ஓய்வு வேண்டும் என்று கேட்ட காரணத்தினாலும் மூத்த வீரர்களை கௌரவ மான முறையில் வழியனுப்பி வைக்க இந்தியக் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபை திட்டமிட்டிருக்கின்ற காரணத்தினாலும் பங்களாதேஷுக்கு எதிரான அணித் தெரிவில் மூத்த வீரர்களான சேவாக், ஹர்பஜன் சிங், ஷகீர்கான் போன்ற வீரர்களின் பெயர்களும் இன்றைய தினம் பரிசீலனை செய்யப்படவுள்ளது. யுவராஜுக்கு ஒரு வாய்ப்பை வழங்கும் நோக்கில் யுவராஜும் இன் றைய தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார் என்று தெரிகிறது. ஆனபோதிலும் கம்பீர் தொடர்பாக எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. (த–ரி)

# வடக்குப் பெருவிளையாட்டு இன்று முல்லையில் ஆரம்பம்



கரணவாய், மே 20

வடமாகாண இரண்டாம் கட்டப் பெரு விளையாட்டுக்களின் சில போட்டிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதில் நாளையும் நாளை மறுதினமும் 19 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான எல்லே ஆட்டங்கள் வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றும் வீரர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்களுக்கு வித்தியானந்தாக் கல்லூரியிலும், பெண்களுக்கு கலைமகள் வித்தியாலயத்திலும்–

அத்துடன் எதிர்வரும் 22ஆம் 23ஆம் திகதிகளில் 19வயது ஆண்கள், பெண்களுக்கான எறிபந்தாட்டமும் 24ஆம், 25ஆம் திகதிகளில் 15, 19 வயதுப் பிரிவினருக்கான கபடிப் போட்டியும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றும் வீரர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்யப் பட்டுள்ளன. ஆண்களுக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், பெண்களுக்கு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்திலும் –

எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் 15,17,19 வயது ஆண்கள் பிரிவினருக்கான கரப்பந்தாட்டத் தொடரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் 15,17,19 வயது பெண்கள் பிரிவினருக்கான கரப்பந்தாட்டத் தொடரும் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூயில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றும் வீரர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்யப் பட்டுள்ளன. ஆண் களுக்கு வித்தியானந்தாக் கல்லூரியிலும், பெண்களுக்கு கலைமகள் வித்தியாலயத்திலும் – இவ்வாறு வடமாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (த–ரி–422)

முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் தேவை

தகுதியுடையவர்கள் 22.05.2015 இற்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தங்கள் சுயவிவரக் கோவையை தயாரித்து அனுப்பிவைக்கவும்.

தகைமை: முன்பள்ளி ஆங்கில ஆசிரிய அனுபவம் உடையவர்கள் மற்றும் முன்பள்ளி டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சை : 23.05.2015 சனிக்கிழமை மு.ப. 10.00 மணி

"திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்"

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, T.P:- 021 205 2262, 077 3867458.

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

பயிற்சிகள் யாவும் "திரு.சாம்சன்" ஆசிரியரினால் நேரடியாக வழங்கப்படும்

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 23.05.2015 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பிற்பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

"உரையாடற்பயிற்சியின் மூலம் ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஒரேயொரு பயிற்சிமையம்."

SAAMSON Experts in English Training

279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 021 320 3313 077 621 4567

A/L பொருளியல் வினா விடை 4

பணம் வங்கி விலைமட்டம் வங்கியாளர் பரீட்சைக்கு ஏற்றது உயர் சித்திபெற இலகு வழிகாட்டி

விலை 200/=

வே. கருணாகரன்

ஆசிரியர் : பொருளியற்கல்லூரி

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

ஏசியன் தளபாடத்தின் 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

இன்று முதல் மாபெரும் விலைத்தள்ளுபடியும் பரிசுக் குவியலும்

1st Prize - 66400/= Innovex Refrigerator
2nd Prize - 46000/= Innovex 32" LED TV
3rd Prize - 26700/= Washing Machine

மேலும் பத்து அதிஸ்டசாலிகளுக்கு Innovex Stand Fan worth of 4600/=

4200/= 3100/=
Table Fan 4000/= 3250/=
14,300/= 9,750/=
3850/= 2200/=
5180/= 4050/=
9,750/= 6,750/=
Table Mate 2500/= 2050/=
41300/= 32900/=
kitchen rack 2100/= 1550/=

230, நாவலர் வீதி, (இலுப்பையடி ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்) T.P: 0773583879, 0217916911 0778314201